# சிவபெருமான் போற்றிப் பனுவல்

அவ்வை அருளிய

# சிவஞானம்

[அவ்வைக் குறள்]



29.12.2002 அன்று சிவபதம் எய்திய

**சிவத்திரு வேலுப்பிள்ளை வல்லிபுரம்**

[மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை]

அவர்களின்

ஞாபகார்த்த வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**29-12-2002 அன்று சிவபதம் எய்திய**

# சிவத்திரு வேலுப்பிள்ளை வல்லிபுரம்

**ஓய்வுபெற்ற ஆசிரியர்**
(மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை)

**அவர்களின்**

# ஞாபகார்த்த வெளியீடு

**29-01-2003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வங்களின்
திருப்பாதங்களுக்கு
**இந்நூல் சமர்ப்பணம்**

மனிதருள் மாணிக்கங்களாய் அன்புநிறைந்த
பேரொளிகளாய் இன்சொல் பேசி
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து,
பண்புடனும் பாசத்துடனும், நேசத்துடனும்
இன்முகத்தினர்களாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும்
தெய்வங்களாகிவிட்ட எமது

அன்புத் தந்தை
**சிவத்திரு வே. வல்லிபுரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்புத் தாய்
**திருமதி பொன்னம்மா வல்லிபுரம்**

அன்புச் சகோதரன்
**சிவத்திரு வல்லிபுரம் சிவபாலன்**
(ஆசிரியர் யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)

ஆகியோரின் திருப்பாதங்களுக்கு இம்மலரினைக்
காணிக்கையாக்குகிறோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# சிவத்திரு. வேலுப்பிள்ளை வல்லிபுரம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

மலர்வு

18 - 06 - 1918



உதிர்வு

29 - 12 - 2002

## திதி வெண்பா

ஆண்டு சித்திரபா னாம்மார் கழியபரந்
திண்டியவே காதசியாந் திதியேகாண் - ஈண்டுபுகழ்
மிக்கவுயர் வல்லிபுரம் இவ்வுலகை விட்டிவர்ந்து
சொக்கனடி சார்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. வேலுப்பிள்ளை வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை)

அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

ஈழமணித் திருநாட்டின் வடபுலமாம் யாழ்ப்பாணத்து விளங்கும் கட்டுவன், மயிலிட்டி தெற்கு என்னும் பதியில் தோன்றப்பெற்ற வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு 1918ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 18ஆம் நாள் மூன்றாவது புத்திரனாக வல்லிபுரம் தோற்றம் பெற்றார்.

இவர் தனது சகோதரர்களான அமரர் பொன்னம்மா, அமரர் தம்பையா, பொலிஸ் உத்தியோகத்தர் அமரர் கந்தையா, சுகாதாரப் பரிசோதகர் அமரர் இரத்தினம், ஓய்வுபெற்ற அதிபரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான தம்பித்துரை ஆகியோருடனும் அவர்களின் குடும்பத்தவர்களுடனும் அன்புடன் இணைந்து வாழ்ந்து வந்தார். சகோதரனான தம்பித்துரையும், அவர் மனைவி ஓய்வுபெற்ற ஆசிரியை பரமேஸ்வரியும் இவர்களின் மூத்தபுதல்வன் பெரியகாந்தனும் லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் வந்து இவரைக் கண்டு இன்புற்றுச் சென்றனர்.

கனடாவில் வசிக்கும் இவரின் பிள்ளைகளும் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்து தேவையான பணிவிடைகள் எல்லாம் செய்தார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையில் கற்றார். குரும்பசிட்டி பொன் - பரமானந்தர் மகா வித்தியாலயத்திலும் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையிலும் உயர்கல்வியைக் கற்றுமுடித்தார். ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்து, இறக்குவானை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். இப்படி ஆசிரியராக வாழ்ந்துவரும் காலத்தில் மயிலிட்டி தெற்கு சைவமடத்தைச் சேர்ந்த சீனிவாசகம் - தெய்வானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் மூன்றாவது புத்திரியான பொன்னம்மா என்பவரைத் திருமணம் புரிந்தார். வல்லிபுரம் பொன்னம்மா தம்பதிகளின் வாழ்க்கை பூத்துக் குலுங்கியதன் விளைவாக வரதராஜா, சிவபாலன், இந்துமதி, நிர்மலாதேவி, ஈஸ்வரன் என்னும் ஐவரை அன்புச் செல்வங்களாகப் பெற்று அகமகிழ்ந்து இன்புற்றிருந்தார். இவர் வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்று இருபது வருடங்களுக்குமேல் பணியாற்றினார். பெற்றோர் பயிர்த் தொழிலையே உயிர்த்தொழிலாகக் கொண்டமையால் விவசாயத்திலும் வல்லவராய்த் திகழ்ந்தார். கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் கௌரவ செயலாளராக இருந்து விவசாயிகள் உற்பத்தி செய்த வெங்காயத்தைப் புகையிரதமூலம் கொழும்புக்கு அனுப்பி விவசாயிகளின் சிறப்பான வாழ்வுக்கு உதவினார். விவசாயிகள் சிகரட் புகையிலையை உற்பத்தி செய்து அவற்றைக் கட்டுவனில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய போறணைகளில் உணர்த்தியபின் கொழும்புக்கு அனுப்பி சந்தைப்படுத்தி விவசாயிகள் வளமுடன் வாழ வழிவகுத்தார்.

இவர் மல்லாகம் மகாவித்தியாலயம், பலாலி சாதனா பாடசாலை, தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலை ஆகியவற்றிலும் தொடர்ந்து பணியாற்றியபின் 1974ஆம் ஆண்டு ஆசிரியச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். இவர் தனது பிள்ளைகளுக்கு ஆற்றவேண்டிய பணிகள் அனைத்தையும் கருத்துடன் ஆற்றினார்.

இவர் தனது சிரேஷ்ட புதல்வன் சைவ சித்தாந்த பண்டிதர் வரதராஜாவை (மோட்டார் பொறியியல் விரிவுரையாளர், தொழில் நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்) இணுவிலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரான பண்டித வித்துவான் சைவப்புலவர் இரா. திருநாவுக்கரசு அவர்களின் சிரேஷ்ட புதல்வி பத்மாசனிக்கு (அதிபர், விவசாயக் கல்லூரி, வவுனியா) மணமுடித்துவைத்து வருண்பிரசாத் (கண்டி திரித்துவக் கல்லூரி மாணவன்), வருண்பிரசாந்த் (கண்டி அசோக வித்தியாலய மாணவன்) என்னும் மழலைகளைக் கண்டு மகிழ்ச்சி யுற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது புத்திரன் அமரர் சிவபாலனை (ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை) மயிலிட்டி தெற்கு பிரபல மோட்டார் வாகன வர்த்தகரான திரு. வைரமுத்து துரையப்பா அவர்களின் ஏகபுதல்வியான நவரஞ்சிதமலருக்கு (கனடா) மணமுடித்துவைத்து சுஜீவன் (Windsor University, Canada) சுகன்யா (மாணவி, கனடா) ரஜீவன் (மாணவன் - கனடா) என்னும் மழலைகளைக் கண்டு மகிழ்ச்சி யுற்றிருந்தார்.

மூன்றாவது புத்திரி இந்துமதியை மீசாலையைச் சேர்ந்த சைவப்பழமான ஆங்கில ஆசிரியர் திரு. சின்னத்தம்பி செல்லையா அவர்களின் சிரேஷ்ட புதல்வனான சண்முகசிங்கத்துக்கு (நிர்வாக உத்தி யோகத்தர், கல்வித் திணைக்களம், வவுனியா- தற்போது கனடா) மணமுடித்து வைத்து சுஜன் (Electrical and Electronic Engineer, Canada) என்னும் மழலையைக் கண்டு மகிழ்ந்தார்.

நான்காவது மகளான நிர்மலாதேவியை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தகவியல் படிக்கவைத்த பின்பு புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த பிரபல விவசாயியான திரு சரவணமுத்து கனகசிங்கம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன் அரியகுணராஜாவுக்கு (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம் - தற்போது கனடா) மணமுடித்து வைத்து ரம்யா (மாணவி, கனடா) என்னும் மழலையைக் கண்டு மகிழ்ந்தார்.

இவர் தனது இளைய புதல்வனான ஈஸ்வரனை (Chartered Civil Engineer, Canada) கந்தர்மடத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான திரு. எஸ். எம். கனகரத்தினம் அவர் களின் ஐந்தாவது புதல்வி பாக்கியலட்சுமிக்கு (Computer Engineer – Canada) மணமுடித்து வைத்து கோபிகா (மாணவி - கனடா), கோபினா (மாணவி - கனடா), கிரிசாந்த் (மாணவன் - கனடா) என்னும் மழலை களையும் 2000ஆம் ஆண்டு கனடாவிலிருந்து கொழும்புக்கு வந்தபோது கண்டு மகிழ்ந்து தனது இறுதி ஆசையைப் பூர்த்தி செய்தார்.

சிறிது காலம் கொழும்பில் வாழ்ந்தபின் தனது மூத்த புதல்வனுடன் 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்தார். இரண்டு வருடங்கள் தனது உற்றார், உறவினர், நண்பர் களுடன் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது கனடா விலிருந்து பிள்ளைகளும் குடும்பமாக வந்து உடனிருந்து சில காலம் பணிவிடைகள் செய்தார்கள். மண்ணுலக வாழ்வின் அனைத்தையும் ஆண்டு அனுபவித்து 2002ம் ஆண்டு மார்கழித் திங்கள் 14ம் நாள் (29-12-2002) விண்ணுலக வாழ்வுக்கு விரைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## இறைவனடி சேர்தல்

நாவேறுங் கலைவாணர் நானிலமே நிலைநிறுத்தும்
பாவேறும் புகழ் வல்லிபுரமெனும் புண்ணியர்தான்
தேவேறும் பதங்களினுந் திப்பிய நல்லொளி திகழுஞ்
சேவேறுஞ் சிவபெருமான் திருவடியைச் சேர்ந்தனரே.

## மக்கள் துயர்

அன்பாய் வளர்த்தீ ரானகல்வி கற்பித்தீர்
பொன்பூமி தந்துமணம் பூணவைத்தீர் - எம்வாழ்விற்
சிந்தைவைத்தீர் விட்டகன்று சென்றீ ரருமையையா
எந்தநாட் காண்போ மினி.

## பேரப்பிள்ளைகள் துயர்

உன்முகமே யெம் மகிழ்வு உன்னுணர்வே யெம்பெருமை
உன் கருணை யேயெமக்கு உற்றதுணை - என்றுநிதம்
இப்பிறப்பி லெண்ணி யிருந்தோம் ஐயாவேன் பிரிந்தாய்
எப்பிறப்பிற் காண்போமினி.

உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# சிவபெருமான் போற்றிப் பனுவல்

(தமிழ்வேதப் போற்றித் திரட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்



| போற்றி எண் | பதிகம் | திரு முறை |
|---|---|---|
| 1 – 82 | போற்றித் திருத்தாண்டகம் – எல்லாம் சிவனே | 6 ஆம் |
| 83 – 161 | போற்றித் திருத்தாண்டகம் – கற்றவர்கள் | 6 ஆம் |
| 162 – 249 | போற்றித் திருத்தாண்டகம் – வேற்றாகி | 6 ஆம் |
| 250 – 328 | போற்றித் திருத்தாண்டகம் – பொறையுடைய | 6 ஆம் |
| 329 – 400 | போற்றித் திருத்தாண்டகம் – பாட்டான நல்ல | 6 ஆம் |
| 401 – 480 | திருவடித் திருத்தாண்டகம் – அரவணையான் | 6 ஆம் |
| 481 – 488 | திருவாசகம் – சிவபுராணம் | 8 ஆம் |
| 489 – 494 | திருவாசகம் – திருவண்டப்பகுதி | 8 ஆம் |
| 495 – 648 | திருவாசகம் – போற்றித் திருவகவல் | 8 ஆம் |
| 649 – 656 | திருவாசகம் – திருவெம்பாவை | 8 ஆம் |
| 657 | திருவாசகம் – திருப்பள்ளியெழுச்சி | 8 ஆம் |
| 658 – 662 | திரு இசைப்பா – செங்கணா போற்றி | 9 ஆம் |
| 663 – 675 | திருக்கயிலாய ஞானஉலா – இமையோர் பெருமா | 11 ஆம் |
| 676 – 696 | நக்கீரர் போற்றி திருக்கலிவெண்பா – நின்றவா | 11 ஆம் |
| 697 – 724 | பட்டினத்துப்பிள்ளை – திருவொற்றியூர் | 11 ஆம் |
| 725 – 733 | திருத்தொண்டர் புராணம் | 12 ஆம் |
| 734 – 1008 | தேவாரத் தல வணக்கம் | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

## திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

## திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

கூற்றாயின வாறு விலக்கிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேலென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"செந்தமிழர் தெய்வ மறைநாவர் செழுநற்கலை தெரிந்தவரோடு அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனை செய்ய அமர்கின்ற அரன் ஊர்" என்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனனார் திருவாக்கு. தெய்வ சாந்நித்தியத்தை மிகுவிப்பது அர்ச்சனை. மறைபாடும் திருவாயினாராகிய பெருமானும் சுந்தர மூர்த்தி நாயனாரைப் பார்த்து அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலிற் சொற்றமிழ் பாடுகென்றார். வலது கண்ணும் இடது கண்ணும் ஒரு நேரத்தில் ஒரு பொருளையே பார்க்கின்ற தன்மைபோல ஆரிய வேதங்களும் தமிழ் வேதமாகிய திருமுறைகளும் திகழ்கின்றன.

தமிழோடு இசைபாடல் மறந்தறியாத் தமிழகத்துப் பன்னிரு திருமுறை மன்றத்தினர், திருநெறிய தமிழ் போற்றிகளைப் பன்னிரு திருமுறைகளிலிருந்து எடுத்துத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர். பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி, சைவநெறிக் காவலர் ஆ. பக்தவச்சலம் ஆகியோர் நல்லாசி வழங்கியிருக்கிறார்கள். போற்றித் திருத்தாண்டகம், போற்றித் திருவகவல் முதலியவற்றில் வரும் போற்றிகளும் தேவாரத் தல வணக்கமான போற்றிகளுமாக 1008 போற்றிகள் இந்த தமிழ் வேத போற்றித் திரட்டிற் காணப்படுகின்றன.

சைவத்தமிழ் உணர்வு மிகப்பெற்ற அன்பர் திரு. வ. வரதராஜன் அவர்கள் தன் தந்தையாரான ஆசிரியர் சிவத்திரு வே. வல்லிபுரம் அவர்களின் நினைவாக வெளியிடும் "சிவபெருமான் போற்றிப் பனுவல்" என்னும் மலரில் தமிழ்வேத போற்றித் திரட்டையும் சேர்த்திருப்பது பலருக்கும் பயன் தருவதாகும்.

அடங்கன்முறை ஆகிய தேவாரம் முழுவதையும் பாராயணஞ் செய்யும் பலனை அகத்தியர் தேவாரத் திரட்டைப் பாராயணஞ் செய்து பெறலாம் என்பது ஐதிகம். அகத்தியர் தேவாரத் திரட்டில் எட்டுத் தலைப்புகளில் ஒன்று அருச்சனை ஆகும். தேவார நுதலிய பொருள் தெரிவிக்கும் வெண்பா, சிட்டான வர்ச்சனையும் எனப் பாராட்டுகிறது. மேன்மை தங்கிய சிவார்ச்சனையும் என அதற்கு பொருள் சொல்லப்படுகிறது. "பத்து சேர்விரலாள்" என்ற திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரத் திருப்பதிகமும் வேற்றாகி விண்ணாகி என்ற திருநாவுக்கரசு நாயனார் போற்றித் திருத்தாண்டகத் திருப்பதிகமும் "கொன்று செய்த" என்ற சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத் திருப்பதிகமும் அருச்சனைக்குரிய பாடல்களாம். "வேற்றா கொன்றிலை மூன்றும் நந்தலி வருச்சனை நாட்டியதாகும்" எனத் திருப்பதிகக் கருத்துரை தெரிவிக்கிறது. இவற்றையெல்லாம் கண்டு அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணத்திலேயுள்ள பல கோயில்களிலும் பூரணை தினங்களில் அகத்தியர் தேவாரத் திரட்டினைப் பாராயணஞ் செய்வதோடு அருச்சனைப் பதிகங்களினால் அருச்சனையும் செய்து சைவ உலகை ஊக்குவிக்கின்றது. இந்த ஊக்கத்துக்கு ஆக்கந் தருவதாக சிவபெருமான் போற்றிப் பனுவல் வெளியாகின்றது. சிவனருள் அனைவருக்கும் கிட்டுவதாகுக.

**பண்டிதர் வ. பேரின்பநாயகம்**
தலைவர்
அகில இலங்கைத் திருமுறை மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# தமிழ்வேதப் போற்றித் திரட்டு

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி
பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி
பல் ஊழியாய படைத்தாய் போற்றி

ஒட்டகத்தே ஊணா உகந்தாய் போற்றி
உள்குவார் உள்ளத்து உறைவாய் போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
கார்மேகம் அன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாகம் அசைத்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி
முல்லை அம்கண்ணி முடியாய் போற்றி
முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
ஏழ்நரம்பின் ஓசை படைத்தாய் போற்றி

சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி
தில்லைச் சிற்றம்பலம் மேயாய் போற்றி
திருவீரட் டானத்து எம்செல்வா போற்றி
சாம்பர் அகலத்து அணித்தாய் போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்தம் குற்றேவலைக்
குறிக்கொண்டு இருக்கும் குழகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பும் மதியும் புனலும் தம்மில்
பகைதீர்த்து உடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண்டு அணிந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி

நீறேறு நீல மிடற்றாய் போற்றி
நிழல்திகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறேறு உமைஒருபால் கொண்டாய் போற்றி
கோள்அரவம் ஆட்டும் குழகா போற்றி
ஆறேறு சென்னி உடையாய் போற்றி
அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
ஏறேற என்றும் உகப்பாய் போற்றி
இருங்கெடில வீரட்டத்து எந்தாய் போற்றி
பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி

வீடுவார் வீடுஅருள வல்லாய் போற்றி
வேழத்து உரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற்கு அரியாய் போற்றி
நாகம் அரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும்ஆன் அஞ்சும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி
மண்துளங்க ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
மால்கடலும் மால்விசும்பும் ஆனாய் போற்றி
விண்துளங்க மும்மதிலும் எய்தாய் போற்றி
வேழத்து உரிமூடும் விகிர்தா போற்றி

பண்துளங்கப் பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுதும் ஆய பரமா போற்றி
கண்துளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலங் கொண்ட கபாலீ போற்றி
வெஞ்சினவெள் ளேறுஊர்தி உடையாய் போற்றி
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேரும் தோன்றால் போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி
நான்மறையோடு ஆறுஅங்கம் ஆனாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி
சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீபர்ப்பதஞ் சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரிகத்து உள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றி என்தாதாய் போற்றி 70

அந்தியாய் நின்ற அரனே போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி
முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என்தாதாய் போற்றி
தொக்கணா என்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்காது எரிசுடராய் நின்றாய் போற்றி 80

எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத்து ஈசா போற்றி
கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றுஒருவர் ஒப்பிலா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 90

வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோல் ஆடைக்குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம்இறைவா போற்றி
ஆலமர நீழல் அறம்சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலட் டானனே போற்றி போற்றி.
மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி

நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன்று எயில்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பொன்இயலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படைஉடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறிஏந்து கையானே போற்றி போற்றி

உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்இறுத்த வேந்தே போற்றி
வெண்மதிஅங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி

செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனல்உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்பிறையும் வாள்அரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்பும் அவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறுஅங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்துஎன்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி

வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளைஏறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி

சாவாமே காத்துஎன்னை ஆண்டாய் போற்றி
சங்குஒத்த நீற்றுஎஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி

திருமூலட் டானனே போற்றி போற்றி
வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி

பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி என்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரம்மூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என்சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி

உள்ஆவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தெந்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி

தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயராது என்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி
சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி

பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி

ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றுஏறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி
உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொற்கேட்டாய் போற்றி
பண்டேஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
பொறையுடைய பூமிநீர் ஆனாய் போற்றி

பூதப் படையாள் புனிதா போற்றி
நிறைஉடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறைஉடைய கண்டம் உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
முன்புஆகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனி முக்கண்ணா போற்றி
அன்புஆகி நின்றார்க்கு அணியாய் போற்றி

ஆறுஏறு சென்னிச் சடையாய் போற்றி
என்பு ஆகஎங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை மலையானே போற்றி போற்றி
மாலை எழுந்த மதியே போற்றி
மன்னி என்சிந்தை இருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி

அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி
ஒள் எரிவீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
தோன்றிஎன் உள்ளத்து இருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய முத்தே போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி
மைசேர்ந்த கண்டம் உடையாய் போற்றி
மாலுக்கும் ஓர் ஆழி ஈந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீறு ஆடீ போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி ஆடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
ஆறுஏறு சென்னி முடியாய் போற்றி

அடியார்கட்கு ஆரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி உடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத்து இருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமை ஏழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டம்ஏழ் அன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி

பாரோர் விண் ஏத்தப்படுவாய் போற்றி
தொண்டர் பரவும் மிடற்றாய் போற்றி
தொழில் நோக்கி ஆளுஞ்சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
பெருகி அலைக்கின்ற ஆறே போற்றி
பேரா நோய்பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி
ஊனம் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி

ஆரும் இகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடும் நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
செய்யமலர் மேலான் கண்ணன் போற்றி
தேடி உணராமை நின்றாய் போற்றி
பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னைஆட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ்சு உகந்தாய் போற்றி
மிக்கார்கள் ஏத்தும் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி

கயிலை மலையானே போற்றி போற்றி
மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரம் மூன்றும் எய்தாய் போற்றி
சீலத்தான் தென்இலங்கை மன்னன் போற்றி
சிலைஎடுக்க வாய்அலற வைத்தாய் போற்றி
கோலத்தால் குறைவில்லான் தன்னை அன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை அறியாமை நின்றாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டானது அஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆலநிழல்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர் மெய்பூசுந் தலைவா போற்றி

எதிரா உலகம் அமைப்பாய் போற்றி
என்றும் மீளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வம் உடையோய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாச வண்ணம் உடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி உடையாய் போற்றி

கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
ஆட்சி உலகை உடையாய் போற்றி
அடியார்க்கு அமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிதும் இலாதாய் போற்றி
சூழ்ந்த கடல் நஞ்சம் உண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிதும் அரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி உடையாய் போற்றி
என்னியாய் எந்தை பிரானே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழின் இசையே உகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
உரியாய் உலகினுக்கு எல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வது உடையாய் போற்றி

எரியாய தெய்வச் சுடரே போற்றி
ஏசு மாமுண்டி உடையாய் போற்றி
அரியாய் அமரர்கட்கு எல்லாம் போற்றி
அறிவே அடக்கம் உடையாய் போற்றி
கரியானுக்கு ஆழியன்று ஈந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
எண்மேலும் எண்ணம் உடையாய் போற்றி
ஏறரிய ஏறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித்து இருந்தாய் போற்றி
பண்ணொடு யாழ்வீணை பயின்றாய் போற்றி

விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலும் கண்ஒன்று உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தீ போற்றி
துடியாரிடை உமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதி ஆளவைத்தாய் போற்றி

கடியார் புரம்மூன்றும் எய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
போற்றியிசைத்து உன்னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி
எண்ணாயிர நூறு பெயராய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால் திசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

அரவணையான் சிந்தித்து அரற்றும் அடிபோற்றி
அருமறையான் சென்னிக்கு அணியாம அடிபோற்றி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடிபோற்றி
சார்ந்தார்கட்கு எல்லாஞ் சரணாம் அடிபோற்றி
பரவுவார் பாவம் பறைக்கும் அடிபோற்றி
பதினெண் கணங்களும் பாடும் அடிபோற்றி
திரை விரவு தென்கெடில நாடன் அடிபோற்றி
திரு வீரட்டானத்து எம்செல்வன் அடிபோற்றி
கொடு வினையார் என்றுங் குறுகா அடிபோற்றி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் அடிபோற்றி

புடுமுழவம் பாணி பயிற்றும் அடிபோற்றி
புதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த அடிபோற்றி
கடுமுரண் ஏறூர்ந்தாய் கழற் சேவடிபோற்றி
கடல் வையம் காப்பான் கதுரும் அடிபோற்றி
நெடுமதியம் கண்ணி அணிந்தாய் அடிபோற்றி
நிறைகெடில வீரட்டம் நீங்கா அடிபோற்றி
வைதெழுவார் காமம்பொய் போகா அடிபோற்றி
வஞ்ச வலைப்பாடு ஒன்று இல்லா அடிபோற்றி
கைதொழுத நாம்ஏத்திக் காணும் அடிபோற்றி
கணக்கு வழக்கைக் கடந்த அடிபோற்றி

நெய் தொழுது நாம்ஏத்தி ஆட்டும் அடிபோற்றி
நீள்விசும்பை ஊடறுத்து நின்ற அடிபோற்றி
தெய்வப் புனல்கெடில நாடன் அடிபோற்றி
திருவீரட்டானத்து எம்செல்வன் அடிபோற்றி
அரும்பித்த செஞ்ஞாயிறு ஏய்க்கும் அடிபோற்றி
அழகு எழுதலாகா அருட் சேவடிபோற்றி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த அடிபோற்றி
சோமனையும் காலனையும் காய்ந்த அடிபோற்றி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடிபோற்றி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்து நீர்த்தென்கெடில நாடன் அடிபோற்றி
திருவீரட் டானத்துளம் செல்வன் அடிபோற்றி
ஒருகாலத்து ஒன்றாகி நின்ற அடிபோற்றி
ஊழிதோறு ஊழி உயர்ந்த அடிபோற்றி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் அடிபோற்றி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடிபோற்றி
இருநிலத்தார் இன்புற்று இங்கேத்தும் அடிபோற்றி
இன்புற்றார் இட்டபூ ஏறும் அடிபோற்றி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடிபோற்றி
திருவீரட்டானத்து எம் செல்வன் அடிபோற்றி

திருமகட்குச் செந்தாரையாம் அடி போற்றி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் அடிபோற்றி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற அடிபோற்றி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடிபோற்றி
உருஇரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வா அடிபோற்றி
உருவு என்று உணரப்படாத அடிபோற்றி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடிபோற்றி
திருவீரட் டானத்துளம் செல்வன் அடிபோற்றி
உரைமாலை எல்லாம் உடைய அடிபோற்றி
உரையால் உணரப்படாத அடி போற்றி

வரைமாதை வாடாமை வைக்கும் அடிபோற்றி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் அடி போற்றி
அரை மாத்திரையில் அடங்கும் அடிபோற்றி
அகலம் அளக்கிற்பார் இல்லா அடிபோற்றி
கரைமாக் கலிக்கெடில நாடன் அடிபோற்றி
கமழ் வீரட்டானக் காபாலி அடிபோற்றி
நறுமலராய் நாறும மலர்க்சேவடி போற்றி
நடுவாய் உலக நாடாய அடிபோற்றி
செறிகதிருந் திங்களுமாய் நின்ற அடிபோற்றி
தீத்திரளாய் உள்ளே திகழ்ந்த அடிபோற்றி

மறுமதியை மாசு கழுவும் அடிபோற்றி
மந்திரமும் தந்திரமும் ஆய அடிபோற்றி
செறி கெடில நாடர் பெருமான் அடிபோற்றி
திருவீரட் டானத்துளம் செல்வன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியனவும் சேயனவும் அல்லா அடிபோற்றி
அடியார்கட்கு ஆரமுதமாய் அடி போற்றி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடிபோற்றி
பற்றற்றார் பற்றும் பவள அடிபோற்றி
மணியடி பொன்னடி மாண்பாம் அடிபோற்றி
மருந்தாய்ப் பிணிதீர்க்கவல்ல அடிபோற்றி

தணிபாடு தண்கெடில நாடன் அடிபோற்றி
தகைசார் வீரட்டத் தலைவன் அடிபோற்றி
அந்தாமரைப்போது அலர்ந்த அடி போற்றி
அரக்கனையும் ஆற்றல் அழித்த அடிபோற்றி
முந்து ஆகி முன்னே முளைத்த அடிபோற்றி
முழங்கழலாய் நீண்ட எம்மூர்த்தி அடிபோற்றி
பந்தாடு மெல்விரலாள் பாகன் அடிபோற்றி
பவளத் தடவரையே போல்வான் அடிபோற்றி
வெந்தார் சுடலைநீறு ஆடும் அடிபோற்றி
வீரட்டங் காதல் விமலன் அடிபோற்றி

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி

நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி, வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்தில்லை மன்றின்உள் ஆடி போற்றி
இன்று எனக்கு ஆரமுதானாய் போற்றி

மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றெனக்கு அருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி

தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி

நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி

நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரண் உறுநரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என்வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தா போற்றி அரனே போற்றி
உரை உணர்விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவனாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி

அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மான் நேர்நோக்கி மணாளா போற்றி
வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி

கனவிலும் தேவற்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடை மருதுறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணாமலைஎம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங்கு அறியேன் போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ்இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி 580

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்றிங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி 590

அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி 600

மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி 610

இலங்கு சுடர் எம் ஈசாபோற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை நாடுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேராயிரம் உடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈறு ஆனாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி

கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன்று அறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
புயங்கப் பெருமான் போற்றி போற்றி
புராண காரண போற்றி போற்றி
சயசய போற்றி போற்றி
போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்

போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்!
போற்றி என் வாழ்முத லாகிய பொருளே
செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி

அமரர்கள் தலைவனே போற்றி
இமையோர் பெருமானே போற்றி
எழில்சேர் உமையாள் மணவாளா போற்றி
எமையாளும் தீயாடி போற்றிசிவனே அடிபோற்றி
ஈசன் எந்தாய் இறை போற்றி
தூயசீர் சங்கரனேபோற்றி சடாமகுடத்தாய் போற்றி
பொங்கரவா பொன்னங் கழல் போற்றி

பாசுபதம் ஈந்த பதம் போற்றி
தூய மலை மேலாய் போற்றி
மயானத்தாய் வானோர் தலைமேலாய் போற்றி
தாள் போற்றி - நிலை போற்றி
நின்றவா நின்ற நிலை போற்றி
கோணாது நின்ற குறிபோற்றி
காலன் உரத்தில் உதைத்தவுதை போற்றி
காமன் அழகழித்த கண் போற்றி
ஆலமுண்ட கண்டம் அது போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாளி கோபந்தவிரவெடுத்த நடத்தியல்பு போற்றி
தோள்இருபதும் நெரியமெத்தெனவே வைத்தவிரல் போற்றி
அயன்சிரத்தை வெட்டிச்சிரித்த விறல் போற்றி
பூமாலைபோனகமும் நற்கோலம் ஈந்தநலம் போற்றி
மிக்க வ்.ீந்த விறல் போற்றி
செங்கைத் திறத்ததிறல் போற்றி
வரமன்று அளித்த வலி போற்றி
கோயிற் கடைகாவல் கொண்டவா போற்றி
முடிகவித்து வானாள வைத்த வரம் போற்றி
ஏழேழ் பவமறுத்த பாவனைகள் போற்றி 690

அடுகளிற்றைப் போக எடுத்துரித்துப் போர்த்தஇறை போற்றி
வியந்த குணம் எட்டிலங்கவைத்த இறைபோற்றி
மற்றவற்குப் பாசுபதம் ஈந்தபாதம் போற்றி
விண்ணுலகம் ஈந்த விறல் போற்றி
காளத்தி போற்றி கயிலைமலை போற்றி
காலன் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வா போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வா போற்றி 700

அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிறிது இல்லா ஈச போற்றி
ஆர்வம் செய்பவர்க்கு அணியோய் போற்றி
தீர்வுஇல் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சனை அமிர்தாய் நயந்தோய் போற்றி
விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
பெண்ணொடு ஆண்எனும் பெயரோய் போற்றி
தீபம் ஆகிய சிவனே போற்றி 710

மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி 720



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி பொற்பா போற்றி
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி
சொல்லுவது அறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி என்னை வழித்தொண்டு தொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி

படிமிசைக் கமரில் வந்திங்கு அமுது செய்பரனே போற்றி
துடியிடை பாகமான தூயநீற்சோதி போற்றி
பொடியணி பவளமேனிப் புரிசடைப் புராண போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
வேட்கள நன்நகர் மேயாய் போற்றி
நெல்வா யில்வளர் நிதியே போற்றி
கழிப்பா லைஉறை கரும்பே போற்றி
நல்லூர்ப் பெருமண நம்பா போற்றி
மயேந்திரப் பள்ளி மன்னா போற்றி
தென்திரு முல்லை வாயிலாய் போற்றி

கலிக்கா மூர்வளர் கண்ணே போற்றி
சாய்க்கா டினிது உறைசதுரா போற்றி
பல்லவ னீச்சரப் பரனே போற்றி
வெண்காடு உகந்த விகிர்தா போற்றி
கீழ்த்திருக் காட்டுப் பள்ளியாய் போற்றி
குருகாவூர் உறை குணமே போற்றி
காழியுள் மேய கடலே போற்றி
கோலக் காவில் கோவே போற்றி
வேளூர் மேவிய வித்தகா போற்றி

கண்ணார் கோயில்வாழ் கனியே போற்றி
கடைமுடிப் பரமநின் கழல்கள் போற்றி
நின்றியூர் வளரும் நிதியே போற்றி
திருப்புன் கூர்அமர் திருவே போற்றி
நீடூர் நிருத்தநின் நீளஅடி போற்றி
அன்னி யூர்வளர் அரனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்விக் குடிவளர் வேதா போற்றி
எதிர்கொள் பாடிஎம் இறைவா போற்றி
மணஞ்சேரி வார்சடை மணாளா போற்றி
குறுக்கைவீ ரட்டக் குழகா போற்றி
கருப்பறி யல்நகர் காப்பாய் போற்றி 760

குரக்குக் காவிற் குருவே போற்றி
வாழொளி புத்தூர் வாழ்வே போற்றி
மண்ணிப் படிக்கரை மணியே போற்றி
ஓமாம் புலியூர் ஒருவனே போற்றி
கானாட்டு முள்ளூர்க் கடவுளே போற்றி
நாரையூர் நன்னகர் நலமே போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
பந்தணை நல்லூர்ப் பசுபதீ போற்றி
கஞ்சனூர் ஆண்டகற் பகமே போற்றி
கோடிக் காவுடைக் கோவே போற்றி 770

திருமங் கலக்குடித் தேனே போற்றி
பனந்தாள் தாடகேச் சரனே போற்றி
ஆப்பா டிப்பதி அமலா போற்றி
சேய்ஞலூர் உறையுஞ் செல்வா போற்றி
திருந்துதே வன்குடித் தேவா போற்றி
வியலூர் இருந்தருள் விமலா போற்றி
கொட்டையூ ரிற்கோ டீச்சரா போற்றி
இன்னம்பர் ஈசனின் இணையடி போற்றி
புறம்பயப் பதிவாழ் புண்ணியா போற்றி
விசய மங்கை வேதியா போற்றி 780

திருவை காஉறை சிவனே போற்றி
வடகுரங் காடு துறையாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
நெய்த்தா னத்துநெய் ஆடியே போற்றி
பெரும்புலி யூர்ப்பெருமானே போற்றி
மழபாடி வயிரத் தூணே போற்றி
பழுவூர் மேவிய பண்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானூர் மேயசெங் கரும்பே போற்றி
அன்பிலா ஆலந்துறை அரசே போற்றி 790

வடகரை மாந்துறை வள்ளால் போற்றி
திருப்பால் துறைஉறை தேவே பொற்றி
ஆனைக் காஉறை ஆதி போற்றி
பைஞ்ஞீலி அண்ணல் நின்பாதம் போற்றி
பாச்சிலாச் சிராமப் பரனே போற்றி
ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி
வாட்போக்கி மலையுறை வாழ்வே போற்றி
கடம்பந் துறைவளர் கடலே போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
கற்குடி மாமலைக் கண்ணுதல் போற்றி 800

மூக்கீச் சரத்து முதல்வா போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
எறும்பியூர் இருந்த எம்மான் போற்றி
நெடுங்களம் இனிதமர் நிமலா போற்றி
மேலைக் காட்டுப் பள்ளியாய் போற்றி
ஆலம் பொழிலுறை அரனே போற்றி
திருப்பூந் துருத்தித் தேசிக போற்றி
கண்டிவீ ரட்டக் கரும்பே போற்றி
சோற்றுத் துறைவளர் தொல்லோய் போற்றி
வேதிக் குடிஉறை விசய போற்றி 810

தென்குடித் திட்டைத் தேவே போற்றி
திருப்புள்ள மங்கைத் திருவே போற்றி
சக்கரப் பள்ளிஎம் சங்கரா போற்றி
கருகா வூருறை கடம்பா போற்றி
திருப்பா லைத்துறைச் செல்வா போற்றி
நல்லூர்ப் பெருமநின் நற்பதம் போற்றி
ஆவூர்ப் பசுபதீச் சரனே போ்றி
சத்தி முற்றச் சதுரா போற்றி
பட்டீச் சரம்உறை பரமா போற்றி
பழையா றைவட தளியாய் போற்றி 820



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலஞ்சுழி மேவிய வரதா போற்றி
குடமூக் கமர்கும் பேசா போற்றி
கீழ்க்கோட் டத்துளங் கூத்தா போற்றி
குடந்தைக் காரோ ணத்தாய் போற்றி
நாகேச் சரம்வாழ் நாதா போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
தென்குரங் காடு துறையாய் போற்றி
நீலக் குடியுறை நிருத்தா போற்றி
வைகல் மாடக் கோயிலாய் போற்றி
நல்லம் நடம்பயில் நாதா போற்றி

கோழம் பத்துறை கோவே போற்றி
ஆவடு தண்துறை அமரா போற்றி
துருத்திஈச நின் துணையடி போற்றி
அழுந்தூர் ஆளும் அரசே போற்றி
மயிலா டுந்துறை மணியே போற்றி
திருவிள நகர்உறை திருவே போற்றி
பறியல்வீ ரட்டப் பரமா போற்றி
செம்பொன் பள்ளிச் செல்வா போற்றி
நனிபள்ளி வளரும் நம்பா போற்றி
வலம்புரம் மன்னிய வாழ்வே போற்றி

தலைச்சங் காடமர் தத்துவ போற்றி
ஆக்கூர் அமர்ந்த அம்மான் போற்றி
கடவூர்க் காலவீ ரட்டா போற்றி
கடவூர் மயானக் கடவுளே போற்றி
வேட்டக் குடியின் மேயாய் போற்றி
திருத்தெளிச் சேரிச் சிவனே போற்றி
தரும புரம்வளர் தத்துவா போற்றி
நள்ளா றுடைய நாதா போற்றி
கோட்டா றமருங் குழகா போற்றி
அம்பர்ப் பெருந்திருக் கோயிலாய் போற்றி

அம்பர் மாகாளத்து அரனே போற்றி
மீயச் சூருறை விண்ணவ போற்றி
மீயச் சூரிளங் கோயிலாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலதைப் பதிவாழ் திலகமே போற்றி
பாம்புர நன்னகர்ப் பரமனே போற்றி
சிறுகுடிப் பிறைமுடிச் செல்வா போற்றி
விண்ணிழி வீழி மிழலையாய் போற்றி
வன்னியூர் மேவிய மைந்தா போற்றி
கருவிலி அமருங் கண்ணே போற்றி
பேணு பெருந்துறைப் பெம்மான் போற்றி 860

நறையூர்ச் சித்தீச் சரனே போற்றி
அரிசிற் கரைப்புத் தூரா போற்றி
செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி
கலைய நல்லூர்க் கடவுளே போற்றி
கருக்குடி அண்ணல் நின் கழல்கள் போற்றி
திருவாஞ் சியம்வளர் தேவே போற்றி
நன்னிலத் துப்பெருங் கோயிலாய் போற்றி
கொண்டீச் சரத்துக் கோவே போற்றி
திருப்பனை யூர்வளர் தேவே போற்றி
விற்குடி வீரட்டம் மேயாய் போற்றி 870

புகலூர் மேவிய புண்ணியா போற்றி
புகலூர் வர்த்தமா னீச்சரா போற்றி
இராமன தீச்சரத்து இறைவா போற்றி
பயற்றூ ருறையும் பண்பா போற்றி
செங்காட் டங்குடிச் சேவகா போற்றி
மருகற் பெருமநின் மலரடி போற்றி
சாத்த மங்கைச் சம்புவே போற்றி
நாகைக்கா ரோணம் நயந்தாய் போற்றி
சிக்கல் நகர்வளம் செல்வா போற்றி
கீழ்வேள் ஊர்ஆன் கேடிலீ போற்றி 880

தேவூர் ஆதிநல் தேனே போற்றி
பள்ளிமுக் கூடற் பரனே போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
ஆரூர் அறநெறி அப்பா போற்றி
பரவையுன் மண்தளிப் பரனே போற்றி
விளமர் உகந்த வித்தகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவீ ரச்சங் கரனே போற்றி
பெருவே உறை உறை பெரும போற்றி
தலையா லங்காடு அமர்ந்தாய் போற்றி
குடவாயில் மன்னிய குருவே போற்றி 890

சேறைச் செந்நெறிச் செல்வா போற்றி
நாலூர் மயான நாடகா போற்றி
கடுவாய்க் கரைப்புத் தூரா போற்றி
திருஇரும் பூளைத் தேவே போற்றி
அரதைப் பெரும்பதி அமர்ந்தாய் போற்றி
அவளிவள் நல்லூர் அரசே போற்றி
பரிதி நியமப் பரனே போற்றி
வெண்ணிவாழ் விமலநின் மெல்லடி போற்றி
பூவனூர்ப் புனிதநின் பொன்னடி போற்றி
பாதா ளீச்சரப் பரமா போற்றி 900

திருக்களர் மேவிய தேவா போற்றி
ஓங்குசிற் றேமத்து ஒருவா போற்றி
உசாத்தா னத்தமர் உறவே போற்றி
இடும்பா வனத்துறும் இறைவா போற்றி
கடிக்குளத்து உறைகடல் அமுதே போற்றி
தண்டலை நீணெறித் தாயே போற்றி
கோட்டூர் மேவிய கொழுந்தே போற்றி
வெண்துறை மேவிய வேதா போற்றி
கொள்ளம் புதூர்க் கோவே போற்றி
பேரெயிற் பெருமநின் பெய்கழல் போற்றி 910

கொள்ளிக் காடமர் கொற்றவ போற்றி
திருத்தெங் கூர்வளர் தேனே போற்றி
நெல்லிக் காஉறை நித்திய போற்றி
நாட்டியத் தான்குடி நம்பி போற்றி
திருக்கா றாயில் தியாகா போற்றி
கன்றாப் பூர்நடு தறியே போற்றி
வலிவலம் வந்தருள் வரதா போற்றி
கைச்சின மேவிய கண்ணுதல் போற்றி
கோளிலி உறையுங் கோவே போற்றி
வாய்மூர் அடிகள்நின் மலர்ப்பதம் போற்றி 920



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்காடு உறையும் மணாளா போற்றி
அகத்தியான் பள்ளி ஐயா போற்றி
கோடிக் கோயிற் குழகா போற்றி
திருவிடை வாய்வளர் தேவா போற்றி
கோணமா மலைசூடிக் கொண்டாய் போற்றி
அண்ணல் கேதீச்சரத்து அடிகள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
ஆப்ப னூர்வளர் ஐயா போற்றி
திருப்பரங் குன்றில் செல்வா போற்றி
ஏடகத்து எந்தைநின் இணையடி போற்றி 930

கொடுங்குன்று அமருங் கோவே போற்றி
திருப்புத் தூர்த்திருத் தளியாய் போற்றி
திருப்புன வாயில்எம் செல்வா போற்றி
மால்செய்ரா மேச வாழ்வே போற்றி
ஆடா னையுறை ஆதி போற்றி
கானப் பேருறை காளாய் போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
சுழியல் வளரும் துணைவா போற்றி
குற்றா லத்து எங்கூத்தா போற்றி
நெல்வே லியுறை செல்வா போற்றி 940

அஞ்சைக் களத்துறை அப்பா போற்றி
அவிநா சிவளர் அரனே போற்றி
முருகன் பூண்டி முதல்வா போற்றி
திருநணா வளரும் திருவே போற்றி
கொடிமா டச்செங் குன்றாய் போற்றி
வெஞ்சமாக் கூடல் விகிர்தா போற்றி
பாண்டிக் கொடுமுடிப் பழையோய் போற்றி
கருவூர் ஆனிலைக் கண்மணீ போற்றி
நெல்வா யில்அரத் துறையாய் போற்றி
பெண்ணா கடத்துப் பெரும போற்றி 950

கூடலை யாற்றூர்க் கோவே போற்றி
எருக்கத்தம் புலியூர் எந்தாய் போற்றி
திருத்தினை நகரச் சிவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோபுர மேவிய சொக்கா போற்றி
அதிகை வீரட்டத்து அழகா போற்றி
நாவலூர் மேவிய நம்பா போற்றி
முதுகுன்று அமர்ந்த முனிவா போற்றி
நெல்வெண்ணெய் மேவிய நிருத்தா போற்றி
கோவல்வீ ரட்டக் கோமான் போற்றி
அறையணி நல்லூர் அரசே போற்றி 960

இடையாற இடையமர் ஈசா போற்றி
வெண்ணெய்நெல் லூருறை மேலோய் போற்றி
துறையூர் அமர்ந்த தூயோய் போற்றி
வடுகூர் அடிகள் மாணடி போற்றி
திருமாணிக் குழிவளர் தேவா போற்றி
பாதிரிப் புலியூர்ப் பரம போற்றி
முண்டீச் சரத்து முதல்வா போற்றி
புறவார் பனங்காட் டூரா போற்றி
திருஆ மாத்தூர்த் தேவா போற்றி
அண்ணா மலைஎம் அண்ணா போற்றி 970

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
கச்சிமேல் தளிஉறை கடலே போற்றி
ஓண காந்தன் தளியாய் போற்றி
கச்சிஅ நேகதங் காவதா போற்றி
கச்சிநெறிக் காரைக் காடா போற்றி
குரங்கணில் முட்டங் குலவினாய் போற்றி
மாகறல் வாழும் மருந்தே போற்றி
ஓத்தூர் மேவிய ஒளியே போற்றி
வன்பார்த்தான் பனங்காட் டூரா போற்றி
திருவல்லம் மேவிய தீவணா போற்றி 980

மாற்பே றாள்உமை மணாளா போற்றி
திருவூறல் வளர் தேவே போற்றி
இலம்பையங் கோட்டூர் ஈசா போற்றி
விற்கோ லத்துறை வீரா போற்றி
ஆலங் காட்டெம் அடிகள் போற்றி
பாசூர் அமர்ந்த பசுபதீ போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாக் கத்துறை விமலா போற்றி
கள்ளில் மேய கனியே போற்றி
காளத்தி நாதநின் கழலிணை போற்றி
ஒற்றி யூர்உடை ஒருவ போற்றி 990

வலிதா யம்உறை வள்ளால் போற்றி
வடதிரு முல்லை வாயிலாய் போற்றி
வேற்காட்டு வேத வித்தகா போற்றி
மயிலைக் கபாலீச் சரத்தாய் போற்றி
வான்மியூ ரமர்ந்த வாழ்வே போற்றி
கச்சூர் ஆலக் கோயிலாய் போற்றி
இடைச்சுரம் இருந்த எழில்வண போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
அச்சிறு பாக்கம் அமர்ந்தாய் போற்றி
வக்கரை அமர்ந்த வரதா போற்றி 1000

அரிசிலி நாதா ஐயா போற்றி
இரும்பைமா காளத்து இறைவா போற்றி
கோலக் கோகர்ணக் கொழுந்தே போற்றி
திருப்பருப் பதத்துத் தேவே போற்றி
இந்திர நீல மலையாய் போற்றி
அநேகதங் காவதம் அமர்ந்தாய் போற்றி
கேதா ரக்கிரிக் கிழவோய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1008


திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அவ்வை அருளிய

# சிவஞானம்

(அவ்வைக் குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

## அவ்வை அருளிய சிவஞானம்

திருமூலரின் திருமந்திரத்தில் தவம் - யோகம் பற்றிய செய்திகள் நிறைய உள்ளன. திருமந்திரத்தை அடுத்துத் தவம் - யோகம், சம்பந்தமான விளக்கங்களைத் தமிழில் அதிகம் தரும் நூல் அவ்வைக் குறள்.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலுடன் நிறுத்திக் கொண்ட திருவள்ளுவர் வீடு பற்றி விளக்கமாகக் குறள் செய்ய வில்லை. அவ்வையார் அருளிய அவ்வைக் குறள் வீடுபேறு பற்றி விளக்கம் தருகின்றது. இது அவ்வை ஞானம் என்றும் போற்றப் படும்.

"வீட்டு நெறிப்பால், திருவருட்பால், தன்பால்" – என்று மூன்று பகுதிகளில் முந்நூற்றுப் பத்து குறட்பாக்கள் கொண்ட இச்சிறுநூல் தவம், யோகம், நிட்டை, மூச்சை அடக்கும் முறை, தியானம் பற்றி எல்லாம் தெளிவாக நுட்பமாகப் பல கருத்துக்களைச் சொல்லும் பாங்குடையது.

விநாயகர் அகவல் பாடி சுந்தரருடனும், சேரமானுடனும் கயிலாயம் சென்ற கன்னித் தமிழ் மூதாட்டி அருளிய ஞானநூல், தவஞானப் பசிக்கு நல்ல தமிழ் விருந்து.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.
28-01-2003.

சைவ சித்தாந்த பண்டிதர்
**சிவ. வ. வரதராஜா**
**D. A. E. (Madras) AMIMI (U. K.)**
**Volvo Trained (Sweden)**
(ஓய்வுபெற்ற விரிவுரையாளர்
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
நிர்வாகசபை உறுப்பினர்
அகில இலங்கை சைவசித்தாந்த
பண்டிதர் சங்கம்,
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வீட்டு நெறி

## 1. பிறப்பு நிலைமை

**ஆதியாய் நின்ற அறிவு முதல்எழுத்து**
**ஓதிய நூலின் பயன்.** 1

தமிழுக்கு முதல் எழுத்து அ. வேத முதல் எழுத்து 'ஓம்' எனும் பிரணவ மந்திரம். இந்த முதல் எழுத்தை - மூலத்தை அறியச் செய்த நூலின் பயனே அறிவின் நிறைவாகும். அறிவு தருவது நூல். நூலை அறிவது அறிவு.

*(ஆதி – முதல், ஓதிய – அறியச் செய்த)*

**பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம்**
**தரமாறி தோன்றும் பிறப்பு.** 2

மேலான ஆற்றல் ஒன்றினால், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களும் தம் நிலை மாறுகிறபோது பிறப்பு தோன்றும். உயிரைத் தோற்றுவிக்கும் இந்த ஐந்து பூதங்களும் சேர்ந்தும் பிரிந்தும், மாறி மறையும்போது நிகழ்வது பரிணாம வளர்ச்சி!

*(பரம் - மேலான, சக்தி - ஆற்றல்)*

**ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்**
**ஆசை படுத்தும் அளறு.** 3

கேட்டறிதல், உணர்ந்தறிதல், பார்த்தறிதல், உண்டு அறிதல், முகர்ந்து அறிதல் என்னும் ஐம்புலன்கள் வழியாக, அதாவது, காது, உடம்பு, கண், வாய், மூக்கு என்னும் உடல் உறுப்புகள் ஐந்தின் வழியாகவும் - ஐந்தாலும் ஏற்படுகிற ஆசையே - விருப்பமே; உயிர்களைச் சிக்கவைக்கும் நரகம் ஆகும்.

*(பரிசம் - தொட்டுணர்தல், படுத்தும் - சிக்கவைக்கும், அளறு - நரகம்)*

**தருமம் பொருள் காமம்வீடெனும் நான்கும்**
**உருவத்தால் ஆய பயன்.** 4

அறம் செய்வதும், அறம் செய்யப் பொருள் ஈட்டுவதும், ஈட்டிய பொருளை பிறருக்கு உதவி மகிழ, இல்லறத்தில் ஈடுபட்டு இனிதே வாழ்வதும், வாழ்வாங்கு வாழ்ந்த பின் வானுலக வீடு அடைய நினைப்பதுமே பிறவி எடுத்ததன் பயனாகும்.

*(தருமம் - அறம், காமம் - இன்பம், உருவம் - உடம்பு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலம்ஐந்து, நீர்நான்கு, நீள் அங்கி மூன்றே**
**உலவை இரண்டொன்று விண்.** 5

ஐந்து பங்கு நிலமும், நான்கு பங்கு தண்ணீரும், மூன்று பங்கு நெருப்பும், இரண்டு பங்கு காற்றும், ஒரு பங்கு ஆகாயமும் கொண்டது இப்பூமி அல்லது இப்பூமியின் பிறப்புகள் என்று கொள்க. ஐம்பூதங்களாலான பிறப்பில் இவை ஐந்தும் இருக்கும் அளவு அல்லது உலகில் ஐம்பூதங்கள் கொண்டிருக்கும் அளவு என்று கொள்ளினும் பொருந்தும்.

*(அங்கி - நெருப்பு, உலவை - காற்று)*

**மாயன் பிரமன் உருத்திரன் மகேசனோடு**
**ஆயும் சிவமூர்த்தி ஐந்து.** 6

பஞ்சபூதங்களாலான உலகுக்குத் தலைவன் - காத்தல், படைத்தல், அழித்தல், மறைத்தல், மறைதல் என்னும் ஐந்தொழிலுக்கும் அதிபதிகளான – திருமாலும், நான்முகனும், உருத்திரனும், மகேசுவரனும், சிவபெருமானும் ஆகிய ஐவருமே.

*(மாயன் - திருமால், ஆயும் - சிறப்பித்துச் சொல்லப்படும்)*

**மால்அயன் அங்கி, இரவி, மதி உமையோடு**
**ஏலும் திகழ் சக்திஆறு.** 7

திருமால், பிரமன், அக்கினி, சூரியன், சந்திரன், உமை அம்மையுடன் உலகை நடத்திச் செல்லுகின்ற சக்திகள் ஆறு.

*(மால் - திருமால், அயன் - பிரமன், அங்கி – தீக்கடவுள், இரவி - சூரியன், ஏலும் - இயக்கும்)*

**தொக்கு திரத்தோடு ஊன்முளை நிணம்என்பு**
**சுக்கிலம் தாதுக்கள் ஏழு.** 8

பஞ்சபூதச் சேர்க்கையினாலான உடம்பு - தோல், இரத்தம், சதை, மூளை, கொழுப்புச்சத்து, எலும்பு, இந்திரியம் என்னும் ஏழவகைத் தாதுக்களால் ஆனது

*(தொக்கு - தோல், திரம் - வலிமை, நிணம் - தசை)*

**மண்ணொடு நீர்அங்கி மதியொடு காற்றுஇரவி**
**விண்ணெச்ச மூர்த்தியோடு எட்டு.** 9

நிலம், நீர், நெருப்பு, நிலவு, காற்று, சூரியன், ஆகாயம் இவைகளுக்கெல்லாம் தலைவனான இறைவன் ஆக, இந்த எட்டு மூர்த்திகளாலும் காக்கப்படுவது இவ்வுலகம்.

*(மதி - நிலவு, மூர்த்தி - இறைவன், காரணன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவைஎல்லாம் கூடி உடம்பாய ஒன்றின்**
**அவைஎல்லாம் ஆனது விந்து.** 10

இப்படி ஐம்பூதச் சேர்க்கையால், எலும்பு, மூளை, தோல், இரத்தம், சதை என்னும் இவை எல்லாம் பொருந்தி, உடம்பு என்று உருவெடுத்த ஒன்றின் தோற்றத்தின் காரணம் விந்து.

*(விந்து தத்துவம் - உடல், நாததத்துவம் - உலகம், "நாதவிந்துகலாதி" – என்பது திருப்புகழ்.*

## 2. உடம்பின் பயன்

**உடம்பினைப் பெற்ற பயன் ஆவதெல்லாம்**
**உடம்பினில் உத்தமனைக் காண்.** 11

உடம்பு - பிறவி எடுத்த பயன், உடம்பில் - உள்ளத்தில் இறைவன் இருப்பதைக் காண்பதே என்பதை அறிவாயாக.
*(உத்தமன் - இறைவன், காண் - காண்பாயாக)*

**உணர்வு ஆவதெல்லாம் உடம்பின் பயனே**
**உணர்க உணர்வு உடையார்.** 12

அறிவுடையோன் ஆதல் உடம்பின் பயன் என்பதை மெய்ஞான அறிவுடைய ஞானிகள் உணர்வார்களாக.
*(உணர்வு - ஞானம், உணர்வுடையோர் - ஞானிகள்)*

**ஒரு பயனாவது உடம்பின் பயனே**
**தரு பயனாம் சங்கரனைச் சார்.** 13

உயிர் உடம்பெடுத்ததன் ஒப்பற்ற பயன் சிவனாம் சங்கரனைச் சரண் என்று அடைகின்ற பயனே ஆகும்.
*(ஒரு - ஒப்பற்ற, சங்கரன் - இன்பம் அருளுபவன்)*

**பிறப்பினால் பெற்ற பயன் ஆவதெல்லாம்**
**துறப்பதாம் தூநெறிக்கட் சென்று** 14

பிறவி எடுத்த பயன் நல்ல வழியில் சென்று நல்வாழ்வு வாழத் தீமைகளைத் - தீயவைகளைத் துறப்பது - தவிர்ப்பதே ஆகும்.

*(துறப்பது - தவிர்ப்பது, தூநெறி - நல்லவழி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடம்பினால் அன்றி உணர்வுதான் இல்லை**
**உடம்பினால் உன்னியதே யாம்.** 15

உடம்பு இல்லாமல் ஒன்றை அறிவதோ, உணர்வதோ முடியாததாகும். ஏனவே ஒன்றை உய்த்துணர உடம்பே கருவி யாகவும் காரணமாகவும் இருக்கிறது. உடம்பு இல்லையேல் உணர்தலும் இல்லை. அறிதலும் இல்லை.
*(உன்னுதல் - சிந்தித்தல்)*

**மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்**
**ஈசனைக் காட்டும் உடம்பு.** 16

ஐம்புலன்களின் வழியும் வரும் தீமைகளை நீக்கிக் குற்ற மற்ற நல்ல வழியில் மனதை செலுத்துகின்ற உள்ள உறுதி – திடசித்தம் பெற்றுவிட்டால், கண் எதிரிலேயே கடவுளைக் காணலாம்.
*(மாசு - குற்றம்)*

**ஓசை உணர்வுகள் எல்லாம் தருவிக்கும்**
**நேசத்தால் ஆய உடம்பு.** 17

பற்றாலும், பாசத்தாலும், அன்பாலும், ஆசையாலுமே பிறவிகள் தொடர்ந்து வருகின்றன. இப்படித் தொடரும் ஆசையால் பெற்ற இந்த உடம்புதான், ஐம்புலன்வழி வரும் ஆசைக்கும் காரணமாகின்றது.
*(ஓசை - ஒலி உணர்வு செவிப்புலன், நேசம் - ஆசை)*

**உயிர்க்கு உறுதி எல்லாம் உடம்பின் பயனே**
**அயிர்ப்பின்றி ஆதியை நாடு.** 18

உயிர்க்கு உற்ற துணை உடம்பைப் பேணி அதன் பயனை அடையச் செய்வதே! எனவே உடலைப் பாதுகாத்து உயிரைப் போற்றி வளர்ப்பதே. ஆதியாகிய இறைவனை அடையும் வழி. இதில் உனக்குச் சந்தேகமே வேண்டாம். ஊனுடம்பு ஆலயம் என்பது திருமந்திரம்.
*(அயிர்ப்பு - ஐயம்)*

**உடம்பினால் பெற்ற பயன் ஆவதெல்லாம்**
**திடம்பட ஈசனைத் தேடு.** 19

பிறவி எடுத்ததன் பயன், இறை அருளைத் தேடி அடைவதையே இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே.
*(திடம் - உறுதி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னத்தால் ஆய உடம்பின் பயன்எல்லாம்**
**முன்னோனைக் காட்டிவிடும்.** 20

சோற்றால் அடைத்த பிண்டம் - இந்த உடம்பு. இதைப் பெற்ற பயன் மூலமுதல்வனை - முன்னோனான இறைவனைக் காண்பதே. பாசவினை அகற்றி, நேச நெறியில் நின்றால் உடல் உயிர்க்கு இறைவனைக் காட்டும்.

*(முன்னோன் - இறைவன்)*

## 3. உள்ளுடம்பின் நிலைமை

**கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக் காணலாம்**
**உற்றுடம்பால் ஆய உணர்வு.** 21

கல்வி கற்கவும், கற்றறிந்தோர் சொல் கேட்கவும், நல்ல காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களிக்கவும்; காரணமாக அமைவது உடலோடும், உயிரோடும் ஒட்டிய உள்ளுணர்வு ஆகும்.

*(உற்றுடம்பு - உடலோடு சேர்ந்த உள்ளுணர்வு. சூக்கும சரீரம் என்றும் கூறுவர்).*

**வெள்ளிப்பொன் மேனியது ஒக்கும் வினைஉடைய**
**உள்ளுடம்பின் ஆய ஒளி.** 22

கற்கவும், கேட்கவும், காணவும் உதவும் கருவியாகச் செயல்புரியும் சூக்கும உடலாகிய நுண் உடம்பு - அதாவது உள் உணர்வு; தூய வெள்ளியைப் போல சுடர்விடும், தங்கத்தைப் போல ஒளிவீசும் தன்மை உடையது. எனவே தான் இதனை ஒளி உடல் என்றனர்.

*(மேனி - உடம்பு, வினை - செயல்)*

**சென்று உண்டு வந்து திரிதரும் உள்ளுடம்பு**
**என்றும் கெடாதது இது.** 23

இந்த ஒளிஉடல் வரும், போகும், உலவும், உண்ணும். என்றும் அழியாதது இந்த நுண்ணுடல். மரணம் - அழிவு உடலுக்கே, உயிர்க்கு இல்லை. சூக்கும உடம்புக்கும் இல்லை.

*(திரிதரும் - உலவும்)*

**வருபயனுண்டு மகிழ்ந்துடனா நிற்கும்**
**ஒருபயனைக் காட்டும் உடம்பு.** 24

உயிர் உடலைப் போலவே ஒளி உடலும் அதாவது ஸ்தூல சரீரத்தைப் போலவே சூக்கும தேகமும், உண்டு மகிழ்ந்து கண்டு களித்து நிற்கும் தன்மை உடையது.

*(பயன் - செயல், தன்மை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்லல் பிறப்பை அகற்றுவிக்கு ஆய்ந்தாய**
**தொல்லை உடம்பின் தொடர்பு.** 25

மீண்டும் மீண்டும் பிறப்பதாகிய பெருந்துன்பத்தைப் போக்கி, பழைய பிறப்பின் - பாசத் தொடர்பை நீக்கும் வலிமை உடையது ஒளி உடம்பு - உள்ளுணர்வு.
*(அல்லல் - துன்பம், தொல்லை - மிகப் பழைய)*

**நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும்**
**செய்வினைக்கும் வித்தாம் உடம்பு.** 26

நல்லன செய்வதால் வரும் நன்மையும், தீயவை புரிதலால்வரும் தீங்கும்கூட ஒளி உடம்புக்கும் உண்டு. செயல்களின் பயனை அடைவது மட்டுமல்ல, செயல்களுக்குக் காரணமாகவும் இருப்பது ஒளிஉடம்பு.
*(வித்து - விதை)*

**உள்ளுடம்பின் வாழ்வன ஒன்பதும் ஏழைக்**
**கள்ள உடம்பாகி விடும்.** 27

உள்ளுடம்பு குடியிருக்கும் உயிருக்கு, அந்த உடம்பின் ஒன்பது வாசல்களும் (கண்கள், காதுகள், மூக்குத் துவாரங்கள், வாய், கருவாய், ஆசனவாய்) பொய் வாசல்களே. இவற்றால் உயிர்க்குத் தீமையே அன்றி நன்மை இல்லை. எனவே கள்ள உடம்பென்றார்.
*(ஏழை - இரக்கக் குறிப்பு, கள்ளம் - பொய்)*

**பொய்க்கு எல்லாம் பாசனமாய் உள்ளதற்கோர் வித்தாகும்**
**மெய்க்குள்ளாம் மாய உடம்பு.** 28

பொய் விளையும் பூமியாக, பொய்யை விளைவிக்கும் விதையாக ஒளிஉடல் பொய்யுடலுக்குள்ளே இருக்கிறது. ஒளி உடலாகிய சூக்கும சரிரம் உலக வாழ்வை மெய் என்று நம்ப வைக்கிறது.
*(பாசனம் - இருப்பிடம், வித்து - விதை)*

**வாயுவினால் ஆய உடம்பின் பயனே**
**ஆயுவின் எல்லா அது.** 29

பிராண வாயு என்னும் மூச்சுக் காற்றால் இயங்கும் உடம்பு இது. இதன் ஆயுட்காலம் - எல்லை அந்தப் பிராண வாயுவைச் சேமித்துச் சீராக்கி விடுவதைப் பொருத்தே உள்ளது.
*(வாயு - பிராண வாயு, ஆயவின் - ஆயுளின்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தால்
அன்பதில் ஒன்றாம் அரன். 30

உடலில் உள்ள ஓட்டைகள் ஒன்பது. இந்த ஒன்பது ஓட்டைகளாகிய - வாசல் கதவுகளை (கண்கள், காதுகள், நாசித் துவாரங்கள், வாய், சிறுநீர், மலத்துவாரம்) நன்றாக அடைத்து விட்டால் ஐம்புலன்களை அடக்கிவிட்டால் அன்புருவாகிய இறைவன் தெரிவான். புலனடக்கம் பேரின்பப் பொருள் விளக்கம்.

*(ஒக்க - முழுக்க, அரன் - சிவன்)*

## 4. நாடி தாரணை

எழுபத்தி ஈராயிர நாடி அவற்றுள்
முழுபத்து நாடி முதல். 31

உடம்பில் எழுபத்தி இரண்டாயிரம் நாடிகள் உள்ளன. அவற்றில் முழுமையாகப் பத்து நாடிகளே முக்கியமானவை.

*(நாடி - உடலில் உள்ள நாடிகள், தாரணை - நிலை)*

நரம்பெனு நாடி இவையினுக்கு எல்லாம்
உரம்பெறு நாடி ஒன்றுஉண்டு. 32

உடம்பிலுள்ள நாடி நரம்புகளுக்கு எல்லாம் வலிமையான நாடி ஒன்றும் உடலில் உள்ளது (அது சுழுமுனை நாடி)

*(உரம் - வலிமை)*

உந்தி முதலா உறுமுடி கீழ்மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து. 33

அந்த நாடி உந்தியில் இருந்து, உச்சந்தலை வரையிலும் கீழ்மேலாக உயிர் உடல்மேல் கொண்ட கருணையால் கட்டுண்டு இருக்கும்.

*(உறுமுடி - உச்சி, உந்தி - வயிறு, பந்தித்து - கட்டுப் பட்டு, பரிந்து - கருணை கூர்ந்து)*

காலொடு கையின் நடுஇடைத் தாமரை
நூல்போலும் நாடி நுழைந்து. 34

இந்தச் சுழுமுனை நாடி கால் கைகளுக்கு நடுவில் தாமரை நூல் இழைபோல நுழைந்து வரும்.

*(நடுஇடை - நடுவில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதித்தன் தன்கதிர்போல் அந்நாடிகள்**
**பேதித்துத் தாம்பரந்த வாறு.** 35

சூரியனுடைய கதிர்க் கிரணங்களைப்போல அந்த நாடிகள் பலவிதமாக உடலில் பரந்து படர்ந்து இருக்கும்.

*(ஆதித்தன் - சூரியன், பேதித்து - வேறுபட்டு)*

**மெய்யெல்லா மாகி நரம்போடு எலும்பிசைந்து**
**பொய்யில்லை நாடிப் புணர்வு.** 36

உடம்பெல்லாம் பரவி, நரம்பு, எலும்பு, தோல் என்று சேர்த்துப் பிணித்துள்ள நாடி அமைப்பு - சேர்க்கை; பொய்யல்ல - நிசம்.

*(இசைந்து - ஒன்றாக்கி, புணர்வு - சேர்க்கை)*

**உந்தி முதலாகி ஓங்காரத்து உட்பொருளாய்**
**நின்றது நாடி நிலை.** 37

நாபிக் கமலத்தில் தொடங்கி 'ஓம்' எனும் உச்சிப் பிரணவத்தின் உருஒலியாய் - ஒளியாய் - வழியாய் இருப்பது அந்த (சுழுமுனை) நாடியின் தன்மை.

*(உந்தி - கொப்பூழ், நிலை - தன்மை)*

**நாடிகள் ஊடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்**
**வீடு தருமாம் விரைந்து.** 38

இடகலை, பிங்கலை நாடிகளுக்கு இடையே, மோன நிட்டையில் தோன்றும் ஞான ஒளி பேரின்ப வீட்டுக்கு விரைந்து செல்ல வழிகாட்டும் ஒளியாகும்.

*(நலஞ்சுடர் - ஞானஒளி, ஊடு - நடுவில்)*

**நாடி வழக்க மறிந்து செறித்தடங்கி**
**நீடொளி காண்ப தறிவு.** 39

இந்த நாடிகள் இயங்கும் இயல்பு அறிந்து அவற்றை வசப்படுத்தி வாழ்வதே, ஒளி உடல்நீள வழிகாண்பதே - உண்மை அறிவாகும்.

*(வழக்கம் - இயங்கும்முறை, செறிந்தடங்கி - வசமாக்கி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிந்தடங்கி நிற்கும் அந்நாடிகள் தோறும்**
**செறிந்தடங்கி நிற்கும் சிவம்.** 40

நாடிகள் இயல்பை அறிந்து, அவற்றை வசமாக்கி - மனம் அடங்கி இருக்கப்பெற்றால், நாடி நரம்பெல்லாம் சிவசொரூபமாகச் சித்தம் - சிவமயமாக இருப்பதை உணரலாம்.

*(செறிந்தடங்கி - விரவிக் கலந்து)*

## 5. வாயு தாரணை

**மூலத்தினில் தோன்றி முடிவில் இருநான்காகிக்**
**கால்வெளியில் பன்னிரண்டாம் காண்.** 41

மூலாதாரத்தில் தோன்றிடும் வாயு முடிவில் எட்டாக நடக்கும். காற்று வெளியில் பன்னிரண்டு ஆக நடக்கும்.

*(மூலம் - மூலாதாரம், கால் - காற்று)*

**இடை பிங்கலைகளில் இரேசகம் ஆற்றில்**
**அடையும் அரனார் அருள்.** 42

இடகலை, பிங்கலை நாடிகள் வழியாக அதாவது இடப் பக்கம், வலப்பக்கம் மூக்குத் துவாரம் வழியாக வாயுவை உள்ளிழுத்து நிறுத்தி வெளிவிடும் பயிற்சியில் தேர்ந்தால், சிவனருள் பெறலாம்.

*(இடபிங்கலை - நாடிகள், இரேசகம் - வாயுவை உள் இழுத்தல், ஆற்றில் - செய்தால்)*

**அங்குலியால் மூடி முறையால் இரேசிக்கில்**
**பொங்குமாம் பூரகத்தின் உள்.** 43

விரலால் நாசித் துவாரத்தை மூடி, முறையாக மூச்சுப் பயிற்சி செய்தால்; இதயமலர் இன்பத்தால் விரியும்.

*(அங்குலி - விரல், பூரகம் - பதினாறு மாத்திரை அளவு இடகலையால் மூச்சை உள்ளுக்கிழுத்தல்)*

**எண்ணில் ஊழி உடம்பாய் இரேசிக்கில்**
**உண்ணிலைமை பெற்றது உணர்வு.** 44

எண்ணிக்கையில் அடங்காத வாழ்நாள் உடையதாக உடம்பு இருக்கும். ஞான உணர்வு உள்மனம் பெற்றிருக்கும் - உள் இழுத்துவிடும் மூச்சுப் பயிற்சி ஒழுங்காக இருந்தால்.

*(ஊழி - வாழ்நாள், உணர்வு - ஞானம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிர்க்கால் வழிஎல்லாம் மாய்கின்ற வாயு**
**உயிர்ப்பின்றி உள்ளே பதி.** 45

உடலில் உள்ள உரோமத் துவாரங்கள் வழியாக எல்லாம் வெளியாகி வீணாகின்ற வாயுவை - மூச்சுக்காற்றை, அதை அலையவிடாமல் உள்ளுக்குள்ளேயே நிறுத்த முயலு வாயாக, மூச்சுப்பயிற்சி - பிராணாயாமம் வலியுறுத்தப்படுகிறது.

*(மாய்கின்ற - வீணாகின்ற, உயிர்ப்பின்றி - அலையவிடாது பதி - நிறுத்து)*

**இரேசிப்பது போல பூரித்து நிற்கில்**
**தராசுமுனை தாக்கதுவே ஆம்.** 46

காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுவதைப் போல, அதை உள்ளே நிறுத்தவும் பழகிக் கொண்டால் தராசுமுனை போல உள்நாக்கு நேராக நிற்கும். மூச்சுக் காற்றை நிறுத்துவதால், மூச்சுக் குழாயை மூடியிருக்கும் உள்நாக்கு நேராக நிற்பதைக் குறித்தது.

*(இரேசிப்பது - சுவாசிப்பது, பூரித்தல் - நிறுத்தல்)*

**கும்பத்தின் உள்ளே குறித்து அரனைக் தானோக்கில்**
**தும்பிபோல் நிற்கும் தொடர்ந்து.** 47

மனத்துள்ளே சிவனைத் தியானித்த வண்ணம் மூச்சுப் பயிற்சி செய்து வாயுவைக் கும்பம் செய்தால் சுவாசம் வண்டு போல் ரீங்காரம் இடும்.

*(தும்பி - வண்டு, மூச்சுக் காற்றை அறுபத்து நான்கு மாத்திரை காலம் அடக்கிவைப்பது கும்பம்)*

**இரேசக பூரக கும்பகம் ஆற்றில்**
**தராசு போல் நிற்கும் தலை.** 48

காற்றைச் சுவாசிப்பது, நிறுத்துவது, அடக்குவது ஆகிய மூன்றிலும் திறமை பெற்றால், தியான நிலை கைவரப் பெற்றால் தலை சாயாது. தராசு முனைபோல் நேராக நிற்கும்.

*(இரேசகம் - சுவாசித்தல், பூரகம் - நிறுத்தல், கும்பகம் - அடக்குதல்)*

**வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்**
**ஆயுட் பெருக்கம் உண்டாம்.** 49



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசக் காற்றை அதன் இயல்பறிந்து உள்வாங்கி, வெளி விடும் அளவறிந்து உள்ளடக்கிச் செயல்பட்டால், வாழ்நாள் கூடும். ஆயுட்காலம் அதிகமாகும்.

*(வாயு - பிராண வாயு)*

**போகின்ற வாயு பொருந்தில் சிவமொக்கும்**
**தாழ்கின்ற வாயு அடக்கு.** 50

வெளியே விடுகின்ற மூச்சுக்காற்றை வீணாக்காமல் உள்ளுக்கு உள்ளே உணர்வோடு பொருந்தி நின்றால், சிவயோகம் சித்தியாகும். இதைப்போலவே கழியும் - கீழ்நோக்கிச் செல்கின்ற காற்றையும் அடக்கப் பழகுவாயாக.

*(தாழ்கின்ற வாயு - அபான வாயு)*

## 6. அங்கி தாரணை

**அந்தத்தில் அங்கி அழல்போலத் தான்நோக்கில்**
**பந்தப் பிறப்பறுக்க லாம்.** 51

மூலாக்கினியைத் தட்டி எழுப்பி, அந்தச் சோதிச் சுடர் ஒளியைத் தரிசிக்க நேர்ந்துவிட்டால்; பிறகு பாசப் பிறப்பு அறுபட்டுப் போகும். பிறவித்துயர் போகும்.

*(அந்தத்தில் அங்கி - மூலாக்கினி, பந்தம் - பாசம்)*

**உள்ளும் புறம்பும் ஒருங்கக் கொழுவூறில்**
**கள்ள மலம் அறுக்கலாம்.** 52

உள்ளத்தின் உள்ளேயும் வெளியேயும் அக்கினிச்சுடர் தோன்றக் கண்டவர்கள் பிறவித் துயர் நீங்கப் பெறலாம். சொல்லும் செயலும் ஒன்றாகிச் சிந்தை சிவன்பால் வைத்தால் அஞ்ஞான இருள் அகலப் பெறலாம்.

*(கொழு - அக்கினி, கள்ளமலம் - பிறவித் துயர், அறியாமை - இருள்)*

**எரியும் தழல்போல உள்ளுற நோக்கில்**
**கரியும் கனல் உருவமாம்.** 53

உள்ளே கனன்று கொண்டிருக்கும் மூலாக்கினியை ஒளிச் சுடர்போல உள்ளுக்குள்ளே காணப்பெற்றால் கரிகூட நெருப் பாகும்.

*(தழல் - தீ, கனல் - நெருப்பு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுஊறில்**
**வெள்ளங்கி தானாம் விரைந்து.** 54

உள்ளத்தினுள் இருக்கும் மூலாக்கினியை சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்தால் விரைவில் யோகநிலை பெறலாம். சிவந்த மூலக்கினி அப்போது உச்சி வெய்யிலில் தோன்றும் வெள்ளைச் சூரியன் போல் விளங்கும்.

*(கொழு - சுடர், வெள்ளங்கி - தூயஉடல், அங்கி - உடல், நெருப்பு)*

**உந்தியின் உள்ளே ஒருங்கச் சுடர்பாய்ச்சில்**
**அந்தி அழல் உருவமாம்.** 55

மூலாதாரத்தில் மூலாக்கினியை மூண்டெழச் செய்தால் முடிவில் உடலும் சோதி சொரூபம் ஆகும்.

*(உந்தி - நாபி, அந்தி - முடிவு, அழல் - நெருப்பு)*

**ஐயைந்து மாய அகத்துள் எரிநோக்கில்**
**பொய்ஐந்தும் போகும் புறம்.** 56

இருபத்தி ஐந்து தத்துவங்களும் இவை தோன்றக் காரண மான பொய்யான ஐந்து புலனுணர்வுகளும் அழிந்துவிடும். மனமதை விட்டு ஓடிவிடும் உள்ளத்துள்ளே ஒளிச்சுடரைக் காண முடிந்தவர்க்கு.

*(ஐயைந்து - இருபத்திஐந்து, எரி - அக்கினி, புறம் - வெளியே)*

**ஐம்பதும் ஒன்று அழல்போலத் தானோக்கில்**
**உம்பர் ஒளியாய் விடும்.** 57

ஐம்பத்து ஓர் அட்சரங்களையும் ஒளி உருவாய் உபாசித்து உச்சரித்தால், மனிதன் தேவநிலை பெறலாம்.

*(ஐம்பதும் ஒன்று - ஐம்பத்தொன்று, உம்பர் - தேவர்)*

**தூண்டும் சுடரைத் துளங்காமல் தான்நோக்கில்**
**வேண்டும் குறை முடிக்கலாம்.** 58

மூலாக்கினியை தட்டி எழுப்பி அதைத் தடுமாற்றம் இன்றித் தரிசிக்க முடிந்தால் வேண்டுவன எல்லாம் பெறலாம்.

*(துளக்கம் - அசைவு, குறை - தேவை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளத்தால் அங்கி ஒருங்கக் கொழுஊறில்**
**மெள்ளத்தான் வீடாம் விரைந்து.** 59

உள்ளத் தியானத்தால் மூலாக்கினியை மூண்டெழச் செய்துவிட்டால் மெல்ல மெல்ல வீடு - பேரின்பம்; விரைவில் கிட்டும். மூலாக்கினியை எழுப்புவது மெல்ல மெல்லவே இயலும் என்பதால் விரைந்து கிடைக்கும் வீடுபேறும், மெள்ள என்றார்.

*(வீடாம் - பேரின்ப வீடு அடைதல்)*

**ஒள்ளிதாய் உள்ள சுடரை உறநோக்கில்**
**வெள்ளியா மாலை விளக்கு.** 60

ஒளி பொருந்தியதால் உள்ள மூலாக்கினியைத் தரிசித்துத் தியானித்தால் வெள்ளிபோல் - ஒளிக்காட்சியை - உணரலாம் என்பதை அறிவாயாக.

*(ஒள்ளிது - ஒளி பொருந்தியது, உறநோக்கில் - புருவ நடுவில் பூசித்தல் எனலுமாம். வெள்ளி - வெள்ளை ஒளி வெள்ளம்)*

## 7. அமுத தாரணை

**அண்ணார்க்கு தன்னை அடைத்து அங்கு அமிர்துண்ணில்**
**விண்ணோர்க்கு வேந்தனும் ஆம்.** 61

மேல்நாக்கை அடைத்து அங்கே ஊறும் அமுதத்தை உண்ணுகிற நிலைபெற்றால் தேவர்க்கு அரசனாம் தேவேந்திரன் ஆகலாம்.

*(அண்ணார்க்கு - மேல்நோக்கு, அமிர்து - அமுதம், விண்ணோர் - தேவர், மேல்நோக்கு மூச்சுக் குழாயின் வாசல்கதவு போலிருப்பது)*

**ஈரெண் கலையில் நிறைந்த அமிர்துண்ணில்**
**பூரண மாகும் பொலிந்து.** 62

பதினாறு கலைகளை உடைய சந்திர கலையில் நிரம்பி வழியும் அமுதத்தை உண்கின்றவர் பிறவி முழுமை பெற்றுத் திகழும்.

*(ஈரெண் - பதினாறு, பூரணம் - நிறைவு)*

**ஓங்காரமான கலசத்து அமிர்து உண்ணில்**
**போங்காலம் இல்லை புரிந்து.** 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் என்னும் பிரணவ வடிவமாக இருக்கிற புருவநுதல் கலசத்தில் பொங்கி வழிகின்ற அமுதத்தை உண்டால் இறப்பின்றி வாழலாம்.

*(கலசம் - பாத்திரம், போங்காலம் - மரணம்)*

**ஆன கலசத்து அமிர்தை அறிந்துண்ணில்**
**போனகம் வேண்டாமல் போம்.** 64

ஊற்றெடுக்கும் அமுதத்தை உணர்ந்தறிந்து அதையே உணவாகப் பருகி மகிழும் பக்குவம் பெற்றுவிட்டால் பிறகு உயிர் வாழ உணவு கூட தேவைப்படாது போய்விடும்.

*(போனகம் - உணவு)*

**ஊறும் அமிர்தத்தை உண்டு உறப்பார்க்கில்**
**கூறும் பிறப்பு அறுக்கலாம்.** 65

உள்ளூறும் அமுதத்தை உண்டு அதிலேயே திளைத்திருக்க முடிந்தால் பிறவித் துயரில் இருந்து விடுபடலாம்.

*(உறப்பார்த்தல் - திளைத்திருத்தல்)*

**ஞான ஒளிவிளக்கால் நல்ல அமிர்துண்ணில்**
**ஆன சிவயோகி ஆம்.** 66

மெய்ஞானமாகிய விளக்கொளி கொண்டு உயிர்காக்கும் நல்ல அமுதம் இதை அறிந்து உண்டால் சிவயோகி ஆகிச் சிறந்திருக்கலாம்.

*(ஞானம் - மெய்ஞானம் அல்லது தவவலிமை)*

**மேலை அமிர்தை விலக்காமல் தான்உண்ணில்**
**காலனை வஞ்சிக்க லாம்.** 67

மேலான உச்சித் தலையில் ஊறுகின்ற அமுதம். இதை விலக்காமல் விரும்பி உண்டால் எமனைக்கூட ஏமாற்றலாம்.

*(காலன் - எமன், வஞ்சிக்கலாம் - ஏமாற்றலாம் - தப்பிக்கலாம், அதாவது எமபயமின்றி வாழலாம்)*

**கால்அனல் ஊக்கக் கலந்தமிர்து உண்ணில்**
**ஞானம் அதுவாம் நயந்து.** 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணவாயுவான மூச்சுக் காற்று எழுப்ப ஞானக் கனலோடு கலக்க ஊறும் அமுதம் உண்டவர்க்கு அதுவே ஞான நல்விருந்து ஆகும்.

*(கால் - காற்று, வாயு; அனல் - மூலாக்கினி)*

**எல்லைஇல் இன்னமிர்தம் உண்டாங்கு இனிதிருக்கில்**
**தொல்லை முதல்ஒளியே யாம்.** 69

அளவிட்டுச் சொல்லமுடியாத பயன்தரும் இனிய அமுதம் அதை உண்டு களித்திருந்தால், பழம்பெரும் சோதிச் சுடரொளியைக் காணலாம்.

*(தொல்லை - மிகப்பழைய, முதல் ஒளி - ஆதி ஒளியாகிய பரம்பொருள்)*

**நிலா மண்டபத்தில் நிறைந்த அமிர்துண்ணில்**
**உலாவலாம் அந்தரத்தின் மேல்.** 70

சந்திரமண்டலத்தில் சேர்ந்த அமுதத்தை அள்ளிப் பருகினால் வானத்தில் சஞ்சரிக்கும் வல்லமை பெறலாம்.

*(அந்தரம் - ஆகாயம்)*

## 8. அருச்சனை

**மண்டலம் கண்மூன்று மருவ உடனிருத்தி**
**அண்டு அரனை அர்ச்சிக்குமாறு.** 71

சந்திரமண்டலம் (இடது நாசி), சூரிய மண்டலம் (வலது நாசி), அக்கினி மண்டலம் (மூக்கு முனை) என்னும் மூன்று மண்டலங்களிலும் சென்றுவரும் மூச்சை நிறுத்தி மனதில் சிவனை நினைத்துத் தியானித்து வழிபடவேண்டும்.

*(மருவு - சேர்ந்த, அண்டு - பொருந்திய)*

**ஆசனத்தைக் கட்டி அரன்தன்னை அர்ச்சித்துப்**
**பூசனை செய்துள்ளே புணர்.** 72

அறுபத்து நான்கு வகையான ஆசனங்களில், பத்மாசனத்திலாவது, சுகாசனத்திலாவது இருந்து, சிவபெருமானை நினைத்துத் துதித்துத் தோத்தரித்துப் பூசித்து வழிபாடு செய்து, சிவனோடு சிந்தையில் ஒன்றி இருப்பாயாக.

*(ஆசனம் - அமர்வு, கட்டி - இருந்து, பூசனை - வழிபாடு, புணர் - சேர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்**
**தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு.** 73

சிந்தையில் தெளிந்தவர்களுக்கு - அவர்கள் அர்ச்சிக்க அவர்களது உள்ளமே சிவலிங்கம் இருக்கும் இடம்; உள்ளுணர்வே சிவலிங்கம் ஆகும்.

*(பீடம் - இருக்கும் இடம், தெள்ளியர் - தெளிந்தவர், "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பது திருமந்திரம்)*

**ஆதாரத்துள்ளே அறிந்து சிவன் உருவைப்**
**பேதமற அர்ச்சிக்கு மாறு.** 74

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களில் சிவபெருமான் திருஉருவைப் பதியச் செய்து, சிந்தனையை ஒருமுகமாக்கிப் பூசிக்க வேண்டும்.

*(பேதமற - வேறுபடாமல், ஒருமுகமாக)*

**பூரித்திருந்து புணர்ந்து சிவன் உருவைப்**
**பாரித்தாங்கு அர்ச்சிக்கு மாறு.** 75

சிவசொருபமே உள்ளமெல்லாம் நிரம்பி இருக்க, ஒருமுகமாயச் சிவன் நினைவில் ஒன்றி, விரும்பிச் செய்வதே வழிபாடு ஆகும்.

*(பூரித்து - நிரம்பி, புணர்ந்து - கலந்து, பாரித்து - விரும்பி, அர்ச்சனை - வழிபாடு)*

**விளக்குறு சிந்தையால் மெய்ப்பொருளைக் கண்டு**
**துளக்கற அர்ச்சிக்கு மாறு.** 76

தூய்மையான மனத்துடன் உண்மைப் பொருளாம் பரம் பொருள் சிவனை ஒருமனதாய் நின்று தோத்தரிக்க வேண்டும்.

*(விளக்கம் - தூய்மை, துளக்கம் - அசைவு, அர்ச்சனை - தோத்திரம்)*

**பிண்டத்தின் உள்ளே பெயராது இறைவனைக்**
**கண்டுதான் அர்ச்சிக்கு மாறு.** 77

உடலுக்குள் நீங்காது நிறைந்திருக்கின்ற இறைவனை, மனக்கண்ணால் கண்டு தொழுவதே உயர்ந்த வழிபாடாகும்.

*(பிண்டம் - உடல், பெயராது - நீங்காது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்திரங்கள் எல்லாம் மயங்காமல் உள்நினைந்து**
**முந்தரனை அர்ச்சிக்கு மாறு.** 78

தியான மந்திரச் சொற்களை, தடுமாற்றமின்றி ஒருமுகமாக உள்ளம் உச்சரிக்க; முன்னைப்பழம் பொருளான சிவனை தியானிக்க வேண்டும்.

*(மயக்கம் - தடுமாற்றம், முந்தரன் - முன்னைப் பழம் பொருளாகிய சிவன்)*

**பேராக் கருத்தினால் பிண்டத்தின் உள்நினைந்து**
**ஆராதனை செய்யு மாறு.** 79

ஒழியாத சிந்தனையுடன் அலைபாயாத மனத்துடன் எப்போதுமே ஒரே நினைவாக, உள்ளத்தினுள் இருக்கும் இறைவனை வழிபடவேண்டும்.

*(பேராக் கருத்து - ஒருமுகமாக, ஒரே சிந்தனையாக, ஆராதனை - வழிபாடு, பூசை)*

**உள்ளத்தின் உள்ளே உறப்பார்த்தங் கொண்டசுடரை**
**மெள்ளத்தான் அர்ச்சிக்கு மாறு.** 80

உள்ளத்தின் உள்ளே குடிகொண்டிருக்கும் சோதிச் சுடரான இறைவனை, மெதுவாக - அமைதியாக வழிபடவேண்டும்.

*(மெள்ள - மெதுவாக)*

## 9. உள்ளுணர்தல்

**எண்ணில் ஊழி தவம்செய்து இங்குஈசனை**
**உண்ணிலைமை பெற்றது உணர்வு.** 81

கணக்கிட முடியாத பலகோடி காலம் தவம் செய்து இறைவனை மனத்தகத்தே காண்பதுவே மெய்ஞானம் ஆகும்.

*(ஊழி - காலம் உணர்வு - அறிவு)*

**பல்ஊழி காலம் பயின்றானை அர்ச்சித்து**
**நல்உணர்வு பெற்ற நலம்.** 82

பலகோடி கோடி காலம் உலகைப் படைத்துக் காத்து அழிக்கின்ற இறைவனை வழிபட்டு வணங்குவதே நல்லறிவு பெற்றதற்கு அடையாளம் - சிறப்பு ஆகும்.

*(பயின்றான் - படைத்தழித்துக் காக்கின்ற இறைவன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணற்கு அரிய அருந்தவத்தால் அன்றே**
**நண்ணப்படும் உணர்வு தான்.** 83

எண்ணிப் பார்க்க முடியாத அளவு உயர்ந்த தவம் செய்தால் அல்லது வேறு எதனாலும் அறிவு - உள்ளுணர்வு உயர்வடைய முடியாது.
*(அரிய - முடியா, நண்ணுதல் - அடைதல்)*

**முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்**
**பின்னைப் பெறும் உணர்வுதான்.** 84

முந்திய பிறவிகளில் செய்த தவப்பயன்களால் மட்டுமே பின்வரும் பிறவிகளில் பெறும் அறிவு சிறக்கும்.
*(முன்னை - முந்திய பிறவி, பின்னை - பின்வரும் பிறவி)*

**காயக் கிலேசம் உணர்ந்த பயனன்றே**
**ஓயா உணர்வு பெறல்.** 85

உடலால் வரும் துன்ப வாதைகளையும் அதற்கான காரணங்களையும் உணர்ந்து தெளிதல் ஒன்றே, அழிவில்லாத நல்லறிவை - உள்ளுணர்வைப் பெறுவதாகும்.
*(காயம் - உடல், கிலேசம் - துன்பம், ஓயா - அழியாத)*

**பண்டைப் பிறவிப் பயனாம் தவத்தினால்**
**கண்டங்கு உணர்வு பெறல்.** 86

முன் எடுத்த பிறவிகளில் செய்த தவப்பயனால் அமைவதே உள்ளுணர்வு எனும் உயர் அறிவு.
*(பண்டை - பழைய)*

**பேராத் தவத்தின் பயனாம் பிறப்பின்மை**
**ஆராய்ந்து உணர்வு பெறின்.** 87

இடைவிடாது செய்த தவத்தின் பயனே, பிறவித் துயர் நீங்கப் பெறுவதும் உள்ளுணர்வு உண்டாகப் பெறுவதும்.
*(பேரா - நீங்காத)*

**ஞானத்தால் ஆய உடம்பின் பயனன்றே**
**மோனத்தால் ஆய உணர்வு.** 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாய் அமைந்த - ஞான சரீரமான இந்த உடம்பின் பயன், மௌன நிட்டையில் உள்ளுணர்வோடு கலந்திருப்பதே ஆகும்.

*(மோனம் - மவுனம், ஆய - ஆன)*

**ஆதியோடு ஒன்றும் அறிவைப் பெறுவதுதான்**
**நீதியால் செய்த தவம்.** 89

ஆதியாகிய பரம்பொருளோடு கூடிக் களித்திருக்கும் உள்ளுணர்வைப் பெறுவதுதான் நேரிய தவத்தின் பயன் ஆகும்.

*(நீதி - நேரிய வழி)*

**காடும் மலையும் கருதித் தவம்செய்தால்**
**கூடும் உணர்வின் பயன்.** 90

காட்டிலும் மலையிலும் சென்று தவம் செய்தால் உள்ளுணர்வும், அதனால் உண்டாகும் பயனும் அதிகமாகும்.

*(கருதி - எண்ணி, கூடும் - அதிகரிக்கும்)*

## 10. பத்தி உடைமை

**பத்தியால் உள்ளே பரிந்தானைத் தானோக்கில்**
**முத்திக்கு மூலம் அது.** 91

பக்தியுடன் இறைவனை மனத்துக்குள் இருத்தி அன்பு செலுத்தினால் - வழிபட்டால், முத்திக்கு - மோட்சத்துக்கு அதுவே ஆதாரமாகும்.

*(பத்தி - பக்தி)*

**பாடியும் ஆடியும் பல்காலும் நேசித்துத்**
**தேடும் சிவசிந்தை யால்.** 92

பக்தியால் இறைவன் புகழைப் பாடியும், பரவசத்தால் ஆடியும், இடைவிடாது எப்போதும இறைவனிடம் அன்பு கொண்டிருந்தால், சிவனருள் கிட்டும். சீவன் சிவன் ஆகும்.

*(பல்கால் - எப்போதும்)*

**அன்பால் அழுதும் அலறியும் ஆள்வானை**
**என்புருகி உள்ளே நினை.** 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு கொண்டு இறைவனிடம் அழுது புலம்பி எலும்பு உருக, நெஞ்சு நெக்குருக உள்ளத்தால் கடவுளை நினைந்து தொழவேண்டும். "அழுதால் அவனருளைப் பெறலாமே" என்பது திருவாசகம்.

*(அலறுதல் - புலம்புதல், ஆள்வான் - எல்லா உயிர் களையும் ஆளுகின்ற ஈசன்)*

**பூசனை செய்து புகழ்ந்து மனம்கூர்ந்து**
**நேசத்தால் ஈசனைத் தேடு.** 94

வழிபாடு செய்து, போற்றித் துதித்து, மனதை அலைய விடாது ஒருமுகமாகக் குவித்துக் கூர்மையாக்கி, அன்பு மனத்தோடு ஆண்டவனைத் தேடி அடையவேண்டும்.

*(பூசனை - வழிபாடு, புகழ் - போற்றித் துதி, கூர்ந்து - குவியச் செய்து)*

**கண்ணால் உறப்பார்த்துக் காதலால் தானோக்கில்**
**உண்ணுமே ஈசன் ஒளி.** 95

கண்ணாரக் கண்டு இறைவன் திருக்கோலத்தை பேரன்பு மீதூறத் தொழுது துதித்தால், பேரருட் சோதியில் நாம் இரண்டறக் கலக்கலாம். அருட்சோதி நம்மை ஆட்கொள்ளும்)

*(உற - உறிஞ்ச, காதல் - பக்தி, உண்ணும்- ஆட்கொள்ளும்)*

**நல்லானைப் பூரித்து நாதன்என உருகில்**
**நில்லாதோ ஈசன் நிலை.** 96

நல்லவனாகிய இறைவனை மனத்தாமரையில் நிறைந் திருக்கச் செய்து, தலைவா, தயாபரா என்று மனம் உருகி நின்றால் தெய்வ நிலை பெறலாம்.

*(நாதன் - தலைவன்)*

**அடியார்க்கு அடியாராய் அன்புருகித் தம்முள்**
**படியொன்றிப் பார்த்துக் கொளல்.** 97

அடியவர்களுக்கெல்லாம் அடியவராக அன்பு உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருக ஆதார நிலைகள் ஆறும் பொருந்தி இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவேண்டும். பக்தி செலுத்தும்போது. *(படி - நிலை)*

**ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்**
**நேசத்தால் நீநினைந்து கொள்.** 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்க்குலம் முழுவதையும் கடவுளாக, இறைத்தன்மை உடையதாக எண்ணி அவை எல்லாவற்றிடமும் அன்பு பாராட்டு வதைக் கடமையாக நீ நினைவில் கொள்ளவேண்டும். "உயிர் இலங்கும் உடல் அனைத்தும் ஈசன் கோயில்" என்பார் திருமூலர்.
*(நினை - அன்புசெய்)*

**மெய் மயிர்கூர விதிர்ப்புற்று வேர்த்தெழுந்து**
**பொய்மையில் ஈசனைப் போற்று.** 99

உடல் உரோமம் எல்லாம் சிலிர்க்கப் புளகாங்கிதம் அடைந்து, உடல் வியர்க்க ஊன் உருக, பொய்மை எல்லாம் கடந்த போதமாம் கடவுளைத் துதித்து வழிபடு. "மெய் தானரும்பி விதிர்விதிர்த்து" என்பது திருவாசகம்.
*(கூர - சிலிர்க்க, விதிர்ப்பு - அசைவு, வேர்த்தல் - வியர்த்தல்)*

**செறிந்து அறிந்து நாடிச் செவ்விதாய் உள்ளே**
**அறிந்து அரனை ஆய்ந்துகொளல்.** 100

இறைவன் நினைவோடு ஒன்றாகி அறிவால் அவனை உணர்ந்து மனத்துக்குள்ளே மகேசனை உணர்ந்து தெளிந்து கொள்வாயாக.
*(செறிதல் - ஒன்றாதல், யோகம், செவ்வி - சிறப்பு, அறிதல் - ஞானம், ஆய்தல் - தேர்ந்து தெளிதல்)*

# 2. திருவருட்பால்

## 1. அருள் பெறுதல்

**அருளினால் அன்றி அகத்தறிவு இல்லை**
**அருளினால் மலம் அறுக்கலாம்.** 101

இறைவன் திருவருள் துணைஇன்றி உள்ளறிவு பெற இயலாது. இறைவன் திருவருளாலேயே பிறவித்துயர் ஒழியமுடியும்.
*(அகம் - மனம், மலம் - அழுக்கு, குறைகள்)*

**இருளைக் கடிந்தின் றிறைவன் அருளால்**
**தெருளும் சிவசிந்தை யாம்.** 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன மாயைகளைப் போக்கிக் கொண்டால் இறைவன் திருவருள் கைகூடும். திருவருள் துணையால் தெளிந்த ஞானம் கிட்டும். சிந்தையும் சிவமயமாகும்.

*(கடிதல் - நீக்குதல், தெருள் - ஞானம்)*

**வாய்மையால் பொய்யா மனத்தினால் மாசற்ற**
**தூய்மையாம் ஈசன் அருள்.** 103

உண்மையே பேசுகிற - பொய் பேசாத மனத்தால் குறை யற்ற - தூய - இறையருளைப் பெற இயலும்.

*(வாய்மை - உண்மை, சத்தியம்)*

**ஒவ்வகத்து உள்நின்ற சிவனருள் பெற்றக்கால்**
**அவ்வகத்துள் ஆனந்தம் ஆம்.** 104

மனம் ஒருமுகப்பட்டு, உள்ளத்துள் இருக்கும் சிவனை வழிபட - அவனருள் கிட்டிவிட்டால், பிறகிந்த உள்ளத்தில் எப் போதும் பேரானந்தம் நிறைந்திருக்கும்.

*(ஒவ்வகம் - ஒத்தமனம், அவ்வகம் - அந்தமனம்)*

**உன்னும் கருமம் முடிக்கலாம் ஒள்ளிதாய்**
**மன்னும் அருள் பெற்றக்கால்.** 105

நினைத்த செயல்களை எல்லாம் செய்து முடிக்கலாம், பெரும் புகழும் பெருமையும் உடைய இறைவன் அருள் கிடைத்து விட்டால்.

*(உன்னும் - நினைத்த, கருமம் - செயல், ஒள் - புகழ், மன் - பெருமை)*

**எல்லாம் பொருளும் முடிக்கலாம் ஈசன்தன்**
**தொல்லை அருள் பெற்றக்கால்.** 106

எண்ணிய எல்லாம் கைகூடும் இறைவனுடைய பேரருள் இருக்குமானால். "எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்" என்பது திருஅருட்பா.

*(பெற்றக்கால் - பெற்றுவிட்டால்)*

**சிந்தையுள் நின்ற சிவனருள் பெற்றக்கால்**
**பந்தமாம் பாசம் அறும்.** 107



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் மகேசன் திருவருள் கிடைக்குமானால், உடலைப் பிணித்த – பிறவித் துயர் விடுபட்டுப் போகும்.

*(பந்தம் - கட்டு, பாசம் - பற்று, அறும் - விடுபடும்)*

**மாசற்ற கொள்கை மதிபோலத் தான்தோன்றும்**
**ஈசன் அருள் பெற்றக்கால்.** 108

குறையின்றித் தோன்றும் முழுமதிபோல, உள்ளுணர்வு உள்ளத்தில் ஒளியாய்த் தெரியும், இறைவன் அருள் இருந்தால்.

*(மாசு - குற்றம், மதி - முழு நிலா)*

**ஆஆ என்றோதி அருள்பெற்றார்க்கு அல்லாது**
**தாவாதோ ஞான ஒளி.** 109

இறைவன் அருள்வேண்டி ஆ... ஆ... ஓ... என்று மனம் உருக - மெய்யுருகத் துதித்து நிற்பவர்கள் மெய்ஞான ஒளிமேவப் பெறுவார்கள்.

*(ஆ... ஆ... - வியப்புச் சொல், தாவுதல் - சேருதல்)*

**ஓவாச் சிவனருள் பெற்றால் உரையின்றித்**
**தாவாத இன்பம் தரும்.** 110

தடையின்றிச் சிவனருள் தொடர்ந்து கிடைக்கப் பெற்றால், அவ்வருள் கேடில்லாத இன்பத்தைக் குறைவில்லாமல் கொடுக்கும்.

*(ஓவா - ஒழிவில்லாமல், உரையின்றி - குறை இல்லாமல், தாவா – கெடாத)*

## 2. நினைப்புறுதல்

**கருத்துறப் பார்த்துக் கலங்காமல் உள்ளத்து**
**இருத்திச் சிவனை நினை.** 111

அகக் கண்களால் இறைவன் உருவைக் கண்டு, மனதை அலையவிடாமல் ஒருமுகமாக இருக்கச் செய்து சிவனை நினைப் பாயாக - வணங்குவாயாக.

*(கருத்துற - சிந்தைதோய)*

**குண்டலியின் உள்ளே குறித்தானைச் சிந்தித்து**
**மண்டலங்கள் மேலாகப் பார்.** 112



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரத்தில் உள்ளே உள்ள இறைவனைத் துதித்தபடி சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்களுக்கு நாசி நடு நுனிக்கு மேலாக பார்வையைச் செலுத்திப்பார். யோக, நிட்டை நிலை கூறப்பட்டது.

*(குண்டலி - மூலாதாரம், குறித்தான் - பரம்பொருள், சிந்தித்தல் - தியானித்தல்)*

**ஓர்மின்கள் சிந்தையில் ஒன்றைச் சிவன்தன்னை**
**பார்மின் பழம்பொருளே யாம்.** 113

சிந்தையால் சிவன்நாம் ஒன்றையே உணர்ந்து ஓதுங்கள். ஓதி உணர்ந்தால் பழம்பெரும் பரம்பொருளைக் காண்பீர்கள்.

*(ஓர்தல் - உணர்தல்)*

**சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையில் ஈசனை**
**மிக்க மலத்தை விடு.** 114

உறுதியாக உள்ளத்தில் இறைவனைப் பற்றிக் கொள். பிறவிப் பெருந்துயருக்குக் காரணமான மனமாசை நீக்கிக்கொள். "சிக்கெனப் பிடித்தேன்" என்பார் மணிவாசகர்.

*(சிக்கென - உறுதியாக, தேர்தல் - ஆராய்ந்து அடைதல்)*

**அறிமின்கள் சிந்தையில் ஆதாரத்தைச் சேர்ந்து**
**உறுமின்கள் உம்முளே ஓர்ந்து.** 115

ஆறு ஆதார நிலைகளையும் அறிவால் உணர்ந்து, உள்ளத்தால் இறைவனை எண்ணித் துதித்து ஈசனோடு ஐக்கிய மாகி விடுங்கள்.

*(உறுதல் - அடைதல்)*

**நித்தம் நினைந்திரங்கி நின்மலனை ஒன்றுவிக்கில்**
**முற்றும் அவன்ஒளியே ஆம்.** 116

தினம் தோறும் ஆண்டவனை எண்ணித் தொழுது துதித்து, அவன் நினைவிலேயே ஒன்றிக் கலந்து இருப்பவர்கள் அவன் அருளை முழுதாகப் பெறுவர்.

*(நின்மலன் - தூயவன்)*

**ஓசை உணர்ந்தங்கே உணர்வைப் பெறும்பரிசால்**
**ஈசன் கருத்தாய் இரு.** 117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரநாத உயர்ஞான மெய்யறிவை, உயிர்ப் பரிசாய்ப் பெற இறைவன் நினைவாகவே எப்போதும் இரு.

*(ஓசை - பிரணவநாதம், பரிசு - பலன்)*

**இராப்பகல் இன்றி இருசுடர் சிந்திக்கில்**
**பராபரத்தோடு ஒன்று மால்.** 118

இரவு பகல் என்றில்லாமல் எந்நேரமும் சூரிய சந்திர கலைகளில் மூச்சை முகப்படுத்தித் துதித்து வந்தால்; மனம் பரம் பொருளோடு ஐக்கியமாகும்.

*(பரம் - மேலான, பரம் - பரம்பொருள்)*

**மிக்க மனத்தால் மிக நினைந்து சிந்திக்கில்**
**ஒக்கச் சிவன் உருவமாம்.** 119

மேலான - உயர்ந்த சிந்தனைகளோடு இறைவனை எண்ணித் துதித்தால் சிவயோக சித்தி அடையலாம்.

*(மிக்க - மேலான, மனம் - எண்ணம், ஒக்க - பொருந்த)*

**வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்தெங்கும்**
**காண்டற்கு அரிதாம் சிவம்.** 120

விரும்பித் தொழுபவர்கள் விரும்புகிற வகையில் எல்லாம் எங்கும் விரிந்துபரந்து எளிதில் காணமுடியாதபடி வியாபித் திருப்பவன் சிவபெருமான்.

*(காண்டற்கு - காண்பதற்கு)*

## 3. தெரிந்து தெளிதல்

**தேறித் தெளிமின் சிவம்என்றே உள்ளுணர்வில்**
**கூறிய பல்குணமும் ஆம்.** 121

உள்ளுணர்வில் கூறிய பலகுணங்கள் அதாவது ஞானி களுடைய பல்வேறு குண இயல்புகளும் சிவமயமே என்று உய்த் துணர்வீர்களாக.

*(தேறு - உறுதி செய், தெளி - தெளிவு)*

**உண்டில்லை என்னும் உணர்வை அறிந்தக்கால்**
**கண்டில்லை யாகும் சிவம்.** 122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டென்றும், இல்லை என்றும், சொல்லும் உள்ளுணர்வை உணர்ந்துகொண்டால் சிவப்பரம் பொருள் காணப் படுவதும் காணப்படாததுமாய் - இரண்டுமாயிருக்கும். உண்டென் பார் காணவும், இலலையென்பார் காண இயலாததும் ஆகும் சிவம்.

*(கண்டில்லை - கண்டும் காணாதது)*

**ஒருவர்க்கு ஒருவனே ஆகும் உயிர்க்கெல்லாம்**
**ஒருவனே பல்குணமு மாம்.** 123

ஒப்பற்ற ஞானிகளுக்கும், எல்லா உயிர்களுக்கும் இறைவன் ஒருவனே. அவனே பலகுணம் உடைய பரம்பொரு ளாகவும் இருக்கின்றான். ஏகன் அநேகன் என்பது திருவாசகம்.

*(ஒருவர் - ஒப்பற்ற ஞானியர்)*

**எல்லார்க்கும் ஒன்றே சிவமாவது என்றுணர்ந்த**
**பல்லோர்க்கும் உண்டோ பவம்.** 124

எல்லா உயிர்களுக்கும் ஒன்றான கடவுள் சிவன் என்றுணர்ந்துவிட்டால் பிறகு யாருக்காவது மீண்டும் பிறக்கின்ற நிலைமை உண்டோ? கிடையாது என்பது பொருள்.

*(பவம் - பிறப்பு)*

**ஆயும் இரவியும் ஒன்றே அனைத்துயிர்க்கும்**
**ஆயுங்கால் ஒன்றே சிவம்.** 125

உலகத்தில் உள்ள உயிர்களுக்கு எல்லாம் சூரியன் ஒருவனே. அது போலவே எல்லார்க்கும் இறைவன் - சிவன் ஒருவனே.

*(ஆயுங்கால் - எண்ணிப் பார்த்தால்)*

**ஓவா தொன்றே பலவாம் உயிர்க்கு எல்லாம்**
**தோவானது என்றே தெளி.** 126

உலகத்து உயிர்கள் எல்லாவற்றிற்கும் அழிவற்ற ஒன்றே தெய்வம் ஆகும் என்பதை அறிவாயாக.

*(ஓவா - கெடா, தெளி - அறி)*

**தம்மை அறியாதார் தாம் அறிவோம் என்பதென்**
**செம்மையால் ஈசன் திறம்.** 127



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தான் அறிந்துகொள்ளமுடியாத பரி பக்குவம் இல்லாதவர்கள், சிறந்த தவயோகத்தாலேயே அறியக்கூடிய மேலான ஈசன் செயலை அறிவோம் என்று சொல்வது பொருத்த மாக இருக்குமா? இருக்காது என்பது பொருள். தன்னை அறிவதே தவம்.

*(செம்மை - மேலான தன்மை, திறம் - தன்மை)*

**எல்லா உலகத்து இருந்தாலும் ஏத்துவார்கள்**
**நல்லுலக நாதன் அடி.** 128

எல்லா உலகத்தில் இருப்பவர்களும், எவர் எந்த உலகத்தில் இருந்தாலும்; நல் உலக நாதனாகிய ஈசன் திருவடியையே அவர்கள் அனைவரும் பணிவர்.

*(ஏத்துதல் - போற்றுதல்)*

**உலகத்தில் பட்ட உயிர்க்கெல்லாம் ஈசன்**
**நிலவுபோல் நிற்கும் நிறைந்து.** 129

உலகத்தில் இருக்கின்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும், ஈசன் அருள் நிலாப்போல் எங்கும் பரவ நின்று இன்ப ஒளியை வழங்கும்.

*(பட்ட - தோன்றிய)*

**உலகத்தில் மன்னும் உயிர்க்கெல்லாம் ஈசன்**
**அலகிறந்த ஆதியே யாம்.** 130

உலகில் வாழுகின்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் இறைவன் எல்லை கடந்த - எல்லையில்லாத - தோற்றமும் முடிவும் இல்லாத ஆதிப்பரம்பொருள் ஆவான்.

*(மன்னும் - பொருந்திய, அலகு - எல்லை, இறந்த - கடந்த)*

## 4. கலை ஞானம்

**சத்தியாம் சந்திரனைச் செங்கதிரோன் ஊடுருவில்**
**முத்திக்கும் மூல மது.**

சக்தியாகிய சந்திர கலையும் செங்கதிராகிய சூரிய கலையும் சுழிமுனையில் கலந்தால் முத்திக்கு வழியாக அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். சுழுமுனையில் நாடியைக் கும்பகம் செய்தல் தவ ஞானம் பெறவழி என்கிறார்.

*(ஊடுருவுதல் - கலத்தல்)*

**அயனங்கொள் சந்திரனால் ஆதித்தன் ஒன்றில்**
**நயனமாம் முத்திக்கு வீடு.** 132

கண்ணடுவில் - புருவ மத்தியில், சந்திர சூரிய கலைகள் சங்கமித்தால் அதுவே முத்திக்கு இடமாகும் வீட்டின்பம் கூட்டும்.

*(அயனம் - ரேகை, ஆதித்தன் - சூரியன், ஒன்றில் - ஒடுங்கினால், கலந்தால், நயனம் - கண்)*

**அஞ்சாலும் மாயாஅறம் பொருள் இன்பமும்**
**துஞ்சாதவர் துறக்கும் ஆறு.** 133

ஐம்புலன்கள் வழியாக வரும் இச்சைகளை விட்டு அவற்றை அடக்கி ஆள்வதே அழிவற்ற அறம் பொருள் இன்பம் வீடு பெற்று, சாகாதிருப்பதற்குச் சிறந்த வழியாகும்.

*(அஞ்சாலும் - ஐம்புலன்களாலும், மாயா - அழியாத, துஞ்சுதல் - சாதல், துறத்தல் - விடுதல், ஆறு - வழி)*

**ஈசனோடு ஒன்றில் இசையாப் பொருளில்லை**
**தேச விளக்கொளியே யாம்.** 134

கடவுளோடு கலந்துவிட்டால் பின் கைகூடாப் பொருளில்லை - செயலில்லை; ஒளி விளக்காய் உலகில் திகழலாம். "தேச விளக்கு ஆனாய்" என்கிறார் அப்பர் திருஐயாறு ஈசனை.

*(இசையும் - கைகூடும், தேசவிளக்கு - ஒளிவிளக்கு)*

**தாம்செய் வினைஎல்லாம் தம்மை அறஉணரில்**
**காஞ்சமே ஆகும் கருத்து.** 135

தன்னை உணர்ந்தால், தான் செய்யும் செயலுக்கான காரண காரியங்களை முழுவதுமாக உணர்ந்தறிந்தால், மனம் பொன்னே போல் பொலியும்.

*(காஞ்சனம் - பொன்)*

**கூடகமான குறிஎழுத்தைத் தான் அறியில்**
**வீடகம் ஆகும் விரைந்து.** 136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உணர்ந்து கொண்டால் பேரின்பவீடு விரைவில் வசமாகும்.

*(கூடகம் - இரகசியம், வீடு - மோட்சம், அகம் - கையகம்)*

**வீடகமாக விழைந் தொல்லை வேண்டுமேல்**
**கூடகத்தில் சோதியோ டொன்று.** 137

பேரின்ப வீடாகிய மோட்சம் மிக விரைந்து கிட்டவேண்டும் என்று விரும்பினால், ஆத்ம சோதியோடு மவுனசமாதியில் கலந்திடு. நிட்டையிலிரு என்றபடி.

*(விழைந்து - விரும்பி, ஒல்லை - விரைவு, கூடகம் - மவுனம்)*

**பூரித்து நின்ற சிவனைப் புணரவே**
**பாரித்த தாகும் கருத்து.** 138

எங்கும் நிறைந்திருக்கின்ற சிவனோடு கலந்துவிட்டால் ஞானம் விரிந்து பரவும்.

*(பூரித்தல் - நிறைதல், பாரித்தல் - பரவுதல்)*

**இரேசகம் மாற்றி இடையறாதே நிற்கில்**
**பூரிப்ப துள்ளே சிவம்.** 139

மூச்சுக் காற்றை இழுத்து வெளிவிடுவதில், இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும், பின் வலம் இடமாகவும் மாறி மாறி இடைவிடாது பயிற்சி செய்து, பின் பிராணக் காற்றை அடக்கி ஆளவும் முடிந்தால் சித்தத்தின் உள்ளே சிவம் வந்து கோயில் கொள்ளும்.

*(இரேசகம் - வாயுவை வெளியிடல்)*

**சிந்தையில் நின்ற நிலைவிசும்பில் சாக்கிரமாம்**
**சந்திரனில் தோன்றும் உணர்வு.** 140

உள் மனம் ஈசனை நினைக்கின்ற நிலையில், மனம் வாக்கு மெய்யால், தான் எனும் முனைப்பில் அகங்காரம் வெளிப் படும். அந்த நிலையில் சந்திர கலையில் உள்ளுணர்வு விழித் தெழ மெய்யறிவு தோன்றும்.

*(சாக்கிரம் - விழிப்பு நிலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உருவொன்றி நிற்றல்

**எள்ளகத்தில் எண்ணெய் இருந்ததனை ஒக்குமே**
**உள்ளகத்தில் ஈசன் ஒளி.** 141

எள்ளுக்குள் எண்ணெய் இருப்பதைப் போன்றதுதான், உள்ளத்தின் உள்ளே இறைவன் ஒளிந்திருப்பது.
*(எள் அகம் - எள்ளுக்குள், ஒளி - இறையருள்)*

**பாலின்கண் நெய்போல் பரந்தெங்கு நிற்குமே**
**நூலின்கண் ஈசன் நுழைந்து.** 142

பால் தயிராகி, தயிரில் வெண்ணை கடைந்து, வெண்ணை உருகித்தான் நெய்யாகிறது. எனவே பாலிலேயே நெய் இருக்கிறது. பாலில் நெய் இருப்பது கண்ணுக்குத் தெரியாது இருப்பது போலவே, சுவாச மூச்சின் கண்ணே இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். "விறகில் தீயில் நற்பாலில் படுநெய்போல் மறைந்துளான் மாமணிச் சோதியான்" என்பது அப்பர் திருவாக்கு.
*(நூல் - சுவாசமூச்சு)*

**கரும்பினில் கட்டியும் காய்பாலில் நெய்யும்**
**இரும்புண்ட நீரும் இயல்பு.** 143

இறைவன் உருவோடு அடியார்கள் ஒன்றிக் கலந் திருப்பதில் மூன்று வகை. ஒன்று கருப்பஞ்சாறை காய்ச்சி வெல்லம் ஆக்குவது போன்ற நிலை. இரண்டாவது காய்ச்சித் தயிராக்கிய பாலின் வெண்ணையிலிருந்து நெய் வெளிப்படுவது போன்ற நிலை. மூன்றாவது காய்ச்சிய இரும்பில் பட்ட நீர்போலக் கலந்துவிடுகிற நிலை.
*(இயல்பு - நிலை)*

**பழத்தினில் இரதம் போல் பரந்தெங்கு நிற்கும்**
**வழுத்தினால் ஈசன் நிலை.** 144

பழத்தில் சாறு கலந்திருப்பது போல உலகெங்கும் பரவி நிறைந்திருக்கிற ஈசனைப் பணிந்து துதித்தால் அவனருள் பெறலாம்.
*(இரதம் - சாறு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனுவொடு தோன்றுமே தான் எல்லாமாகி**
**அணுவதுவாய் நிற்கும் மது.** 145

உடலோடு தோன்றிய உயிர் ஒவ்வொன்றின் அணுவில் அணுவாய், அணுதோறும் நிறைந்திருக்கும் தன்மையன் ஈசன்.
*(தனு - உடல், அணு - நுண்ணிய)*

**வித்து முனைபோல் விரிந்தெங்கு நிற்குமே**
**ஒத்துளே நிற்கும் உணர்வு.** 146

விதையில் முளைபோல, எங்கும் பரந்து பரவ, அறிவும் நினைவும் ஒத்து நின்றாய் ஓங்கி நிற்பது உள்ளுணர்வு.
*(வித்து - விதை, முனை - முளை)*

**அச்சம் ஆங்காரம் அகத்தடக்கினால் பின்னை**
**நிச்சயமாய் ஈசன் நிலை.** 147

பயத்தையும், தான் என்னும் முனைப்பாகிய கருவத்தையும் மனம் அடக்கப் பழகிக்கொண்டால், அதாவது மனதில் இந்த உணர்வுகள் அடங்கிவிட்டால் பிறகு தெய்வநிலை பெறுதல் நிச்சயம்.
*(ஆங்காரம் - கருவம்)*

**மோட்டின் நீர்நாற்ற முளைமுட்டை போலுமே**
**வீட்டுளே நிற்கும் இயல்பு.** 148

மேடான மணல் பரப்பின் கீழ் நீர் ஊற்றும் மலரில் மணமும், விதையில் முளையும், முட்டையில் கருவும் மறைந்து கலந்து இருப்பது போலவே உடலாகிய வீட்டுக்குள்ளே இறைவன் எழுந்தருளியிருக்கிறான்.
*(மோட்டு - மேடு)*

**நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்**
**அனைத்துயிர்க்கும தானாம் ஈசன்.** 149

அன்போடு நினைப்பவர்கள் உள்ளம் எல்லாம் கோயிலாகக் குடிகொள்ளும் பரம்பொருள் இறைவன். அவனே உலக உயிர்களுக்கெல்லாம், தலைவன் - கடவுளுமாவான்.
*(நின்மலன் - பரிசுத்தமானவன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓசையின் உள்ளே உதிக்கின்ற தொன்றுண்டு**
**வாசமலர் நாற்றம்போல் வந்து.** 150

'ஓம்' எனும் பிரணவ ஒலிக் குறிப்பிலிருந்து உதித்தெழுகிறது. உலகமும் உயிர்த்தொகுதியும் வாசமலரில் இருந்து மணம் பரவி வருவதுபோல. "ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே" என்பது தேவாரம்.

*(நாற்றம் - நறுமணம்)*

## 6. முத்தி காண்டல்

**மனத்தோடு உறுபுத்தி ஆங்காரம் சித்தம்**
**அனைத்திலும் இல்லை அது.** 151

முத்தி என்பது என்ன? மோட்ச வீடாகிய பேரின்பம் அது. அதை மனம், வாக்கு, அறிவு இவைகளால் அடைந்துவிட முடியாது. உண்மையான பத்தியாலேயே அடையமுடிவும் என்பது கருத்து.

*(மனத்தோடு உறுபுத்தி - சிந்தையும் செயலும்)*

**வாக்கும் கருத்தும் மயங்கும் சமயங்கள்**
**ஆக்கிய நூலினும் இல்லை.** 152

அப்படியானால் எழுத்தாலும் பேச்சாலும் எண்ணற்ற சமயங்கள் இயற்றி வைத்துள்ள நூல்களின் மூலமாகவாவது அதை அடைய முடியுமா? முடியாது.

*(வாக்கும் கருத்தும் - பேச்சும் எழுத்தும்)*

**உருவம் ஒன்றில்லை உணர்வில்லை ஓதும்**
**அருவமும் தானதுவே யாம்.** 153

முத்திபெற்ற நிலையில் உயிருக்கு உருவம் இல்லை. உணர்வுகள் இல்லை. உருவமற்ற அருவமாக இருப்பதே அதன் இயல்பு.

*(அருவம் - உருவமற்றது0*

**தனக்கோர் உருவில்லை தான்எங்கு மாகி**
**மனத்தகமாய் நிற்கும் அது.** 154



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி நிலைக்கு உருவம் இல்லை. ஆனாலும் எங்கும் அது மனம்போல வியாபித்து நிற்கும்.

*(தனக்கு - முத்திக்கு)*

**பெண்ஆண் அலிஎன்று பேரொன்று இலதாகி**
**விண்ணாகி நிற்கும் வியப்பு.** 155

பெண்ணாகவோ, ஆணாகவோ, இரண்டும் இல்லாத அலியாகவோ இல்லாமல், வெட்ட வெளியாக வானில் கலந்திருக்கும் முத்தி - வியப்பான ஒன்று.

*(வியப்பு - ஆச்சரியம்)*

**அனைத்து உருவம் ஆயஅறிவை அகலில்**
**தினைத் துணையும் இல்லைசிவம்.** 156

எல்லா உருவமும் தானாகவே இருக்கிற மெய்யறிவை விட்டு விலகினால் அப்படி விலகியவர்களுக்குத் துளிகூடச் சிவன் அருள் சித்திக்காது.

*(அகலில் - நீங்கில், தினைத்துணை - தினை அளவு)*

**துனிமுகத்துக்கு ஆதியாத் துன்னறி வின்றி**
**அணிதார் இரண்டு விரல்.** 157

பிறவித் துன்பத்துக்குக் காரணமான ஆசைகளால் வருந்தி வாடும் முகம், வருத்தம் விட்டு அழகுப் பொலிவோடு விளங்க வேண்டுமானால்; சந்திரகலை, சூரியகலை என்னும் இரண்டின் வழியே மூச்சுப் பயிற்சி முறையாகச் செய்யவேண்டும்.

*(துனி - வருத்தம், இரண்டுவிரல் - சந்திரகலை, சூரிய கலை)*

**மயிர்முனையில் பாதி மனத்தறிவு உண்டேல்**
**அயிர்ப்புண்டு அங்கு ஆதிநிலை.** 158

உரோம முனையில் பாதியளவு - அதாவது மிகச் சிறிய - குறைந்த அளவு அறிவு இருந்தாலும் போதும். அப்படிப்பட்ட அறிவுடைய மனத்தில் ஆதியாகிய பரம்பொருள் நிலை தோன்றும்.

*(அயிர்ப்பு - சந்தேகம்)*

**தற்பரமான சதாசிவத்தோடு ஒன்றில்**
**உற்றறிவு இல்லை உயிர்க்கு.** 159



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான பரம்பொருளாகிய சிவத்தோடு சிந்தையில் கலந்துவிட்டால், உயிர்க்கு என்று தனியான சிந்தை அறிவு எதுவும் இல்லை. எல்லாம் சிவமயமே.

*(தற்பரம் - மேலான பரம்பொருள்)*

**உறக்கம் உணர்வு பசி கெடப்பட்டால்**
**பிறக்கவும் வேண்டா பிறப்பு.** 160

தூக்கம், விழிப்பு, பசி, துக்கம் என்கிற உணர்வுகள் எல்லாம் அற்றுப் போய்விட்டால் மீண்டும் பிறவி எடுக்கப் பிறக்க வேண்டாத பேரின்பநிலை வாய்க்கும்.

*(கெடப்பட்டால் - அற்றுப்போனால்)*

## 7. உருவாதீதம்

**கருவின்றி வீடாம் கருத்துற வேண்டில்**
**உருவின்றி நிற்கும் உணர்வு.** 161

மீண்டும் மீண்டும் பிறக்காமல் முத்தி என்னும் மேலான வீட்டின்பம் அடைய விரும்பினால், உள்ளுணர்வு அல்லது மெய்யறிவு உருவம் இல்லாமல் - அதாவது விருப்பு வெறுப்பு இல்லாமல், பந்தபாசம் அற்று நிற்கும்.

*(கருவின்றி - பிறப்பின்றி)*

**பிறத்தல் ஒன்றிப் பிறவாமை வேண்டில்**
**அறுத்துருவம் மாற்றி இரு.** 162

பிறப்பை விடுத்துப் பிறவாதிருக்கிற நிலை அடைய விரும்பினால், உருவைவிட்டு வேறாக இரு. உருவை விட்டு வேறாக இருப்பதாவது, பந்தபாச உணர்வின்றி அவற்றை விட்டு விலகித் தனித்திருப்பதாம்.

*(ஒன்றி - தனித்து)*

**உருவங்கள் எல்லாம் அறுத்து அறமாற்றில்**
**கருவேதும் இல்லை தனக்கு.** 163

உருவ உணர்வுகள் எதுவும் இல்லாமல் - அதாவது ஆசை, கோபம் ஆகிய குணங்களை அறவே விட்டொழித்து விட்டால், பிறகு உயிர்க்குப் பிறவித்துயர் இல்லை.

*(அறமாற்றில் - அடியோடுவிட்டால்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கறுப்பு வெளுப்பு சிவப்புறு பொன்பச்சை**
**அறுத்துருவம் மாற்றி இரு.** 164

கறுப்பு, வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை என்னும் நிற பேதங்களையும் விட்டொழித்துவிடு வீடுபேறு பெற.
*(பொன் - மஞ்சள் நிறம்)*

**அனைத்துருவம் எல்லாம் அறக்கெடுத்து நின்றால்**
**பினைப்பிறப்பு இல்லையாம் வீடு.** 165

நிறபேதம் போலவே உருவபேதமும் முற்றிலும் நீக்கி விட்டால், பிறகு பிறவித்துயர் இல்லை. உயிர்க்குப் பேரின்ப வீடே இறுதி - உறுதி.
*(பினை - பின்பு)*

**நினைப்பு மறப்பற்று நிராகரித்து நின்றால்**
**தனக்கொன்றும் இல்லை பிறப்பு.** 166

நினைப்பதும் மறப்பதும் ஆகிய நிலைகளைக் கடந்து விட்டால் உயிர்க்குப் பிறகு, பிறப்பும் இல்லை - இறப்பும் இல்லை. நினைப்பு - மறப்பை நீக்குவதாவது தன்னிலை மறந்திருப்பது.
*(நிராகரித்து - நீக்கி)*

**குறித்துருவம் எல்லாம் குறைவின்றி மாற்றில்**
**மறித்துப் பிறப்பில்லை வீடு.** 167

உருவம் உணர்வு பேதங்களை எல்லாம் விட்டொழித்து விட்டால் பிறகு மீண்டும் பிறவித்துயரில்லை. முத்தியே முடிவான நிலை.
*(மறித்து - மீண்டும்)*

**பிதற்றும் உணர்வை அறுத்துப் பிரபஞ்ச**
**விகற்பம் உணர்வதே வீடு.** 168

குழம்புகிற அறிவின் குறைகளை எல்லாம் விட்டொழித்துப் பூவுலக வேறுபாடுகளின் - உண்மை அறிவதே முத்தியாகும். முத்தி - ஞான சித்தி.
*(பிதற்றும் - குழம்பும், பிரபஞ்சம் - உலகம், விகற்பம் - வேறுபாடு)*

**பிறப்பறுக்க வீடாம் பேருவமை இன்றி**
**அறுத்துரவம் மாற்றி இரு.** 169



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவித்துயர் கெட - பெருமைமிகு வீட்டின்பம் பெற, உருவ வேறுபாடை விட்டொழித்து இருப்பாயாக.
*(பேருவமை - பெரிய உவமை)*

**ஓசை உணர்வோடு உயிர்ப்பின்மை அற்றக்கால்**
**பேசவும் வேண்டா பிறப்பு.** 170

ஒலி உணர்வும், சுவை உணர்வும், உயிர்ப்புணர்வும் நீங்கி விட்டால், அதாவது உடலைப் பற்றிய நினைவை - உணர்வை, உயிர் மறந்துவிட்டால், பிறகு அந்த உயிர்க்கும், உடலுக்கும், மீண்டுவந்து பிறக்கின்ற பேச்சுக்கே இடமில்லை.

*(ஓசை - ஒலி, பேசவும் வேண்டா - பிறப்பென்ற பேச்சே இல்லை)*

## 8. பிறப்பறுதல்

**தன்னை அறியும் அறிவு தனைப்பெறில்**
**பின்னைப் பிறப்பில்லை வீடு.** 171

தன்னைத்தானே அறிகின்ற அறிவு பெற்றுவிட்டால் பிறகு உயிர்க்குப் பிறவித்துயர் இல்லை. பேரின்ப வீடே கிட்டும்.
*(தன்னை அறிதல் - அக உணர்வு பெறுதல்)*

**அறம்பாவம் ஆயும் அறிவுதனைக் கண்டால்**
**பிறந்துழல வேண்டாம் பெயர்ந்து.** 172

நன்மை தீமைகளை ஆராய்ந்து பகுத்துணரும் அறிவு கைவரப் பெற்றால், மீண்டும் மீண்டும் பூமியில் பிறந்து, வருந்த வேண்டாம்.
*(ஆயும் - ஆராயும், கண்டால் - கைவரப் பெற்றால், உழல - வருந்த, பெயர்ந்து - மீண்டும் மீண்டும்)*

**சிவன் உருவம் தானாய் செறிந்தடங்கி நிற்கில்**
**பவநாசம் ஆகும் பரிந்து.** 173

சித்தம் - அதாவது மனம், சிவமயமாக - அதாவது இறைவன் நினைவோடு ஒன்றி, தான் வேறு சிவம் வேறு அல்ல என்னும்படிக்குக் கலந்துவிட்டால், பிறகு பிறவித்துயர் ஒழிந்து போகும்.
(பவம் - பிறப்பு, நாசம் - அழிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறக்கம் உணர்வோடு உயிர்ப்பின்மை அற்றால்**
**பிறப்பின்றி வீடாம் பரம்.** 174

உண்ணுவது, உறங்குவது, உணர்வது, எண்ணுவது என்னும் உடல் நினைவுகள் எல்லாம் நீங்கிவிட்டால் பிறப் பிருக்காது. மேலுலக மோட்சம் கிட்டும்.

*(பரம் - மேலுலகம்)*

**நினைப்பு மறப்பு நெடும்பசியும் அற்றால்**
**அனைத்துலகும் வீடாம் அது.** 175

நினைப்பதும், மறப்பதும், நீண்ட பசி உணர்வும் நீங்கிவிட்டால்; உயிர்க்கு எல்லா உலகங்களும், இனிய பேரின்ப வீடாக அமைந்துவிடும்.

*(நெடும்பசி - பெரும் பசி)*

**உடம்பிரண்டும் கெட்டால் உறுபயன் ஒன்றுண்டு**
**திடம்படும் ஈசன் திறம்.** 176

இரண்டு உடம்பாவது, சூக்கும உடல், ஸ்தூல உடல். இவை இரண்டும் கெட்டால் அதாவது தன்னிலை மறைந்தால் அதன் மூலம் கிடைக்கின்ற பயன் ஒன்று இருக்கிறது. அது இறைவன் அருள் நிச்சயம் என்ற உறுதிப்பாடே ஆகும்.

*(திடம் - உறுதி, திறம் - அருள்)*

**தன்னை அறிந்து செறிந்தடங்கித் தான்அற்றால்**
**பின்னைப் பிறப்பில்லை வீடு.** 177

தன்னை அறிவது - தன் மனம் ஒருமாகிச் சிந்தை அடங்குவதும், 'தான்' என்னும் மமதை - செருக்கு, மாய்ந்து போவதும்; ஆன நிலயில் உயிர்க்குப் பிறவி இல்லை. பேரின்ப வீடே எல்லை.

*(தானற்றால் - தான் என்னும் அகங்காரம் அழிவது)*

**மருளன்றி மாசறுக்கின் மாதூ வெளியாம்**
**இருளின்றி நிற்கும் இடம்.** 178

மயக்கத்தையும் மனக்குறைகளையும், குற்றங்களையும் விட்டுவிட்டால், தூய பெரிய அண்டவெளியாகிய ஆகாயத்தில்; அஞ்ஞான இருளில் இருந்து மனம் விடுபட்டு மெஞ்ஞானம் - மோட்ச நிலை பெற்று நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(மருள் - மயக்கம், மாசு - குற்றம், மா - பெரிய, தூ - தூய, வெளி - அண்டப் பெருவெளி)*

**விகாரம் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டால்**
**அகாரமாம் கண்டீர் அறிவு.** 179

மூச்சு வேறுபாடு நீங்க, அதைத் திருத்தி ஒருநிலைப் படுத்தி யோகத்தில் அமரும் மெஞ்ஞான நிலைகண்டால் அறிவு தவயோகத்தில் நிலைக்கும்.

*(விகாரம் - வேறுபாடு, அகாரம் - ஓம் என்னும் பிரணவ மூலமான உகார, மகார முதலான அகாரம்)*

**சிந்தை ஆங்காரம் செறிபுலன் அற்றக்கால்**
**முந்தியே ஆகுமாம் வீடு.** 180

மனதில் வெறுப்பு, கோபம் போன்ற புலன் இச்சைகள் உணர்வுகள் போய் ஒழிந்தால், மோட்ச இன்பம் முந்திக்கொண்டு வந்து நிற்கும்.

*(முந்தி - முன்னதாக)*

## 9. தூய ஒளி காண்டல்

**தோன்றியது எல்லாம் தொடக்கறுத்துத் தூய்வெளியாய்த்**
**தோன்றிய காற்று தூயஒளி.** 181

பிறந்தபோது உடன் தோன்றியவைகளின் தொடர்புகளில் எல்லாம் இருந்து விடுபட்டு, எல்லையற்ற பரவெளியாகச் சுடர் விடுவதே ஆத்ம ஒளி - உள் ஒளி.

*(தோன்றியது - பிறந்தபோது உடன் தோன்றியவை, தொடக்கு - பந்தம்)*

**தெளிவாய தேச விளக்கொளியைக் காணில்**
**வெளியாய வீடதுவே யாம்.** 182

தெளிவான ஞானச் சுடர் ஒளியை உள்ளத்தில் கண்டு விட்டால் தெரியும் சித்த ஆகாச வெளியே பேரின்ப வீடாகும்.

*(தேசு - ஞானம். வெளி - சித்தாகாசம்)*

**மின்போலுருவ விளக்கொளிபோல் மேற்காணில்**
**முன்போல மூலம் புகும்.** 183



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் ஒளி போலவும், விளக்கின் சுடர் போலவும், திகழும் ஞானச்சுடர் ஒளியை நடுப்புருவ மத்தியில் காணப்பெற்று விட்டால், அது மீண்டும் நாபிக் கமலத்துள் வந்து அடங்கும்.
*(மூலம் - நாபிக்கமலம், மூலாதாரம்)*

**பளிங்கு வலம்புரி பால்நிறத்த தாகில்**
**துளங் கொளியாம் தூயநெறி.** 184

வெண்பளிங்கு - வெள்ளை வலம்புரிச் சங்குபோல, தோன்றும் ஞான ஒளி, தூய வெள்ளை நிறமுடையதாய்ப் பால் போல் தெரிந்தால்; அது தூய ஞானப் பேரொளியாம்.
*(துலங்கும் - விளங்கும்)*

**சங்கு நிறம்போல் தவள ஒளிகாணில்**
**அங்கையின் நெல்லியே யாம்.** 185

சங்கு நிறத்தைப்போல வெள்ளை நிறத்தில், முத்துச் சுடர் போல ஞான ஒளி கண்டுவிட்டால், தவயோக சித்தி உள்ளங் கையில் நெல்லிக்கனிபோல் உடனே கிட்டும்.
*(தவளம் - வெண்மை, அங்கை - உள்ளங்கை)*

**துளங்கரிய தூண்டா விளக்கொளி காணில்**
**விளங்கிய வீடாம் விரைந்து.** 186

அசைவற்று - தூண்டப்படாது தானே சுடர்விடும் விளக் கொளிபோல், சோதிச் சுடர் வீசும் ஞான ஒளியைக் கண்டு விட்டால், உயர்ந்த வீட்டின்பம் விரைந்து கிடைக்கும்.
*(துளக்கம் - அசைவு, விளக்கம் - ஒளி)*

**மின்மினி போன்ற விளக்காகத் தான்தோன்றில்**
**அன்னப் பறவையே யாம்.** 187

மின்மினிப் பூச்சிபோல் மினுக்கிடும் சோதி ஒளி தொடர்ந்து தோன்றி ஒளிவீசினால், மனம் அன்னப் பறவைபோல; நல்லது கெட்டது (பாலும் நீரும் பிரித்துப் பருகும் இயல்பு) அறியும் உன்னத நிலை பெற்றுவிடும்.
*(மின்மினி - மின்னி மறையும் ஒளிப்பூச்சி)*

**உள் ஒளி தோன்றில் உணரில் அருள்ஒளி**
**அவ்வொளி ஆதி ஒளி.** 188

உள்ளத்தில் தோன்றிய ஒளியால் இறைவன் அருள் ஒளியை உணரமுடிந்துவிட்டால் போதும், அதுவே ஆதி ஒளியாகும். ஒளிக்கெல்லாம் ஒளியூட்டும் ஒளியாகும் அது.
*(ஆதி - முதல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரந்த விசும்பில் பரந்த ஒளிகாணில்**
**பரம்பரமே ஆய ஒளி.** 189

விரிந்து பரந்த ஆகாயத்தில் விரிகதிர் பரப்பித் தோன்றும் பேரொளியைக் கண்டு துதித்தால், அதுவே பரப்பிரம்மமாகிய பேரொளிப் பிழம்பாகத் தோன்றும்.
*(விசும்பு - ஆகாயம்)*

**ஆதி ஒளியாகி ஆள்வானும் தானாகி**
**ஆதி அவன்உருவம் ஆம்.** 190

மூலாக்கினியாகிய ஒளியோடு கலந்து அதனைக் கொண்டு செலுத்தும் வல்லமையும் பெற்றுவிட்டால், அந்த ஒளியே இறைவன் உருவம் ஆகும். சோதி சொரூபம் கடவுளாகும்.
*(ஆதி ஒளி - மூலாக்கினி)*

## 10. சதாசிவம்

**பத்துத் திசையும் பரந்த கடல்உலகும்**
**ஒத்து எங்கும்நிற்கும் சிவம்.** 191

பத்துத் திசைகளிலும் விரிந்து, பரந்த கடலால் சூழப்பட்ட இந்த உலகம் எங்கும், எதிலும் நீக்கமற, நிறைந்து கலந்திருக்கும் சிவப்பரம் பொருள்.
*(பத்துத் திசைகளாவன; கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, மேல், கீழ் என்பன).*

**விண் நிறைந்துநின்று விளங்கும் சுடரொளிபோல்**
**உள்நிறைந்து நிற்கும் சிவம்.** 192

வான மண்டலம் முழுதும் நிறைந்து ஒளி வீசித் திகழும் சூரியச் சுடர்போல், உள்ளம் எல்லாம் ஊறித்ததும்பி நிற்கும் சிவம். “உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற” என்பார் வாதவூரர். *(விண் - ஆகாசம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகமும் சிவனும் ஆசையும் தானாகி**
**ஏகமாய் நிற்கும் சிவம்.** 193

உடலும், உள்ளமும், அதன் ஆசா பாசங்கள் எல்லாமும், சிவனே என்றாகிவிட்டால், பிறகு சிவனும் நம்முள் ஒருவனே ஆகி நம்மோடு கலந்து நிற்பான்.

*(ஆகம் - உடல்)*

**வாயுவாய் மன்உயிராய் மற்றவற்றின் உட்பொருளாய்**
**ஆயும் இடம்தானே சிவம்.** 194

சுவாச மூச்சாகவும், உயிராகவும், மனமாகவும், மற்றவேத நூல் விளக்கங்களாகவும், இருப்பதும்; ஆய்ந்தறியும் பொருள் அனைத்துக்கும் தோன்றுமிடமாகவும் தோற்றுவாயாகவும் இருப்பதும் சிவமே.

*(மன் - மனம், உயிர் - பிராணன்)*

**எண்ணிறைந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்**
**உண்ணிறைந்து நிற்கும் சிவம்.** 195

எண்ணமுடியாத உயிர்த்தொகுதி பலவற்றிலும், பலவகை யிலும் பரவிக் கலந்து, அவற்றின் உள்ளே குடிகொண்டிருக்கும் சிவப்பரம்பொருள்.

*(யோனி - பிறவி)*

**ஒன்றேதான் ஊழி முதலாகிப் பல்உயிர்க்கும்**
**ஒன்றாகி நிற்கும் சிவம்.** 196

உலகம் தோன்றிய நாள் தொட்டுத் தோன்றிய உயிர் களுக்கு எல்லாம் தோன்றாத் துணையாகி நின்று துணை புரியும் சிவப்பொருள்.

*(ஊழி - உலகம்)*

**மூலம் ஒன்றாகி முடிவுஒன்றாய் எவ்வுயிர்க்கும்**
**காலமாய் நிற்கும் சிவம்.** 197

தோற்றமும், அழிவும் தானே ஆகி, எல்லா உயிர் களுக்கும் காலமாகவும் (தோன்றுதலுக்கும், மறைதலுக்கும் காரணமான காலமாக) இருப்பது சிவப்பரம் பொருளே.

*(மூலம் - பிறப்பு, முடிவு – அழிவு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்ணில் பிறந்த உயிர்க்கெல்லாம் தானாகி**
**விண்ணகமே ஆகும் சிவம்.** 198

மண்ணில் பிறப்பெடுத்த உயிர்களுக்கு எல்லாம் தானே தலைவனாகி, விண்ணகமும் ஆகி, அவ்வுயிர்கள் சஞ்சரிக்கும், சித்தாகாசச் சொரூபமாகி இருப்பதுவும் சிவப்பரம் பொருளே.
*(தானாகி - தனி முதலாகி)*

**தோற்றமது வீடாகித் தொல்லை முதலொன்றாகி**
**ஏத்தவரும் ஈசன் உளன்.** 199

அருள் தோற்றமே பேரின்ப வீடாக, ஆதிகாலம் முதற் கொண்டு, பலரும் போற்றிப் பரவி வழிபடும் ஒப்பற்ற பரம் பொருளாக இறைவன் இருக்கின்றான்.
*(ஒத்த - வாழ்த்தி வணங்க)*

**நிற்கும் பொருளும் நடப்பனவும் தானாகி**
**உற்றெங்கும் நிற்கும் சிவம்.** 200

நிற்கின்ற, நடக்கின்ற, ஊர்கின்ற, பறக்கின்ற எல்லாப் பொருள்கள் உள்ளும் அதாவது உயிர்கள் எல்லாவற்றிலும் நீக்க மற நிறைந்திருக்கும் சிவப்பரம் பொருள்.
*(உற்று - பொருந்தி)*

## 3. தன்பால்

### 1. குருவழி

**தன்பால் அறியும் தவம்உடையார் நெஞ்சகத்துள்**
**அன்பாய் இருக்கும் அரன்.** 201

தன்னை அறிந்து, 'தான்' அடங்கி இருக்கும் தவப் பயிற்சியும் சித்தியும் அடைந்தவர்கள் உள்ளத்தின் உள்ளே அன்புருவாய் வீற்றிருப்பான் சிவபிரான்.
*(அரன் - சிவன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்**
**சிந்தித்து இருக்கும் சிவம்.** 202

எண்ணம் எல்லாம் சிவ சிந்தனையாகவே இருப்பவர்கள் மனதில் சிவனும் குடிபுகுந்து நிலைத்திருப்பான்.
*(சிந்தை - எண்ணம், மனம்)*

**குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு**
**அருவமாய் நிற்கும் சிவம்.** 203

வழிகாட்டியாகிய ஞானாசிரியனை அடைந்து அவர் மூலம் சிவனருள் கூடப் பெறாதவர்களுக்கு சிவக் காட்சி கிடைப்பதரிது.
*(குரு - வழிகாட்டி)*

**தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியில் அல்லால்**
**வலைப்பட்ட மான்அதுவே ஆம்.** 204

ஞானாசிரியன் முன்னிலையில் அவர் வழிகாட்ட, சிவன் அருள் பெற்றவர்கள் அல்லாத மற்றவர்கள், வலையில் சிக்கிய மான் போல உலகில் கிடந்து உழலவேண்டி வரும்.
*(சந்நிதி - முன்)*

**நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்**
**பிரிவற்று இருக்கும் சிவம்.** 205

வழிநடத்தும் ஞானாசிரியன் சரியான வழியைக் காட்டி விட்டால், பிறகு சீடன் மனத்துள்ளே சிவம் நீங்காது கலந்திருக்கும்.
*(நெறி - வழி, பிரிவு - நீங்குதல்)*

**நல்லன நூல்பல கற்கினும் காண்பரிதே**
**எல்லை இல்லாத சிவம்.** 206

நல்லதான ஞான நூற்கள் பல கற்றாலும், எல்லை இல்லாத பரம்பொருளாகிய சிவபிரானைக் காணமுடியாது. கற்று நூல் அறிவால் இறைவனைக் காண இயலாது. ஞானாசிரியன் வழிகாட்டல் அவசியம் என்பது கருத்து.
*(நூல் - ஞான நூற்கள்)*

**நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்**
**தனைப் பிரியாது சிவம்.** 207



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு மறதி என்ற நிலை கடந்தவர்கள் நெஞ்சில் நீங்காது இருப்பான் சிவபெருமான். நினைப்பும் மறப்பும் இல்லாத நிலையாவது – சிவனையே சிந்தித்திருக்கின்ற - வேறு எது பற்றியும் எண்ணாத யோக நிலையாம்.

*(மறப்பு - மறதி)*

**ஒன்றில் ஒன்றாத மனம்உடையார் உடல்**
**என்றும் ஒன்றாது சிவம்.** 208

ஒன்றாகிய பரம்பொருளுடன் ஒன்றிக் கலக்காத மனம் உடையவர்கள் உள்ளத்தில், சிவனருள் பொருந்தி இருக்காது.

*(உடல் - மனம், உள்ளம், ஒன்றுதல் - பொருந்துதல்)*

**நாட்டம் இல்லாதஇடம் நாட்டம் அறிந்தபின்**
**மீட்டு விடாது சிவம்.** 209

மனித மனத்தின் நாட்டம் - அதாவது விருப்பத்தை உணர்ந்துவிட்டால், சிவனருட் பார்வை அந்த உயிரை விட்டகலாது பற்றி இருக்கும்.

*(நாட்டம் - பார்வை, விருப்பம்)*

**பஞ்சமா சத்தம் அறுப்பவர்க்கு அல்லால்**
**அஞ்சல் என்னாது சிவம்.** 210

பஞ்சமா பாதகங்களாகிய பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐந்து பெரும் தீக்குணங்களையும் விட்டொழித் தவர்க்கு அல்லாமல்; மற்றவர்க்கு அஞ்சேல் என்று சிவம் தஞ்சம் அளிக்காது.

*(பஞ்சமாசத்து - ஐம்பெரும் தீமை, அஞ்சல் - பயப்படுதல்)*

## 2. அங்கியில் பஞ்சு

**அங்கியில் பஞ்சுபோல் ஆகாயத்தே நினையில்**
**சங்கிக்க வேண்டா சிவம்.** 211

நெருப்பில் விழுந்த பஞ்சு பற்றிக்கொள்வது போல, சித்தா காசத்தில் சிவனைப் பற்றி அவனையே நினைத்திருந்தால், சந்தேகமே வேண்டாம். சிவனருள் கண்டிப்பாய் கிட்டும்.

*(அங்கி - நெருப்பு, ஆகாயம் - மனவெளி, சங்கி - ஐயம், சந்தேகம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்ப்பால் அறியாத மூடர்தம் நெஞ்சத்தின்**
**அப்பால தாகும் சிவம்.** 212

மெய்யறிவு - உண்மை உணராத - அறிவற்றவர்கள் - நெஞ்சுக்கும், நினைவுக்கும் அப்பாற்பட்டது சிவப்பரம்பொருள்.
*(மெய்ப்பால் - மெய்யறிவு, உண்மை)*

**நெஞ்சகத்துள் நோக்கி நினைப்பவர்க்கு அல்லால்**
**அஞ்சேல் என்னாது சிவம்.** 213

நெஞ்சகம் - மனதுக்குள்ளே கண்டு நினைத்துத் தொழுபவர்களுக்கு அல்லாது, மற்றவர்களுக்கு சிவப்பரம்பொருள் அஞ்சேல் - பயப்படாதே, என்று தஞ்சம் அளிக்காது.
*(அஞ்சேல் - பயப்படாதே, தஞ்சம் - ஆதரவு)*

**பற்றிலா தொன்றினைப் பற்றினால் அல்லது**
**கற்றதனால் என்ன பயன்.** 214

பற்றுகள் இல்லாத இறைவன் பாதமலர்களைப் பற்றுவதை விட்டுவிட்டால், படித்ததனால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை. "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்பது குறள்.
*(பற்று - பந்தபாசம். ஒன்று - இறைவன். பற்றுதல் - பிடித்துக் கொள்ளுதல்)*

**தம்மை அறிவாரைத் தாமறிந்து கொண்டபின்**
**தம்மை அறிவாரோ தான்.** 215

தான் என்னும் அகந்தை அகன்று, தன்னை அறியும் உயர்ந்தநிலை பெற்றவரைத் தாம் அறிந்துகொண்டு விட்டால், பிறகு அவர் தம்மை அறியார். தம்முள்ளே சிவம் இருப்பதையே அறிவார்.
*(தம்மை அறிதல் - தான் எனும் அகங்காரம் நீங்கித் தன்னுள் சிவம் இருப்பதை உணர்கின்ற தன்மை)*

**அசபை அறிந்துள்ளே அழல்எழ நோக்கில்**
**இசையாது மண்ணில் பிறப்பு.** 216

அசபை - அதாவது அசபா என்னும் மூச்சுக் காற்றுவழி மந்திரத்தை ஓதி உணர்ந்து உள்ளத்துள்ளே மூண்டெழும் மூலாக் கினியில் இறைவன் உருவைத் தியானித்து இருந்தால், மீண்டும் வந்து மண்ணில் பிறக்க வேண்டாம்.

**இமையாத நாட்டத்து இருந்து உணர்வாருக்கு**
**அமையாத ஆனந்தம் ஆம்.** 217



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிமை அசையாமல், பார்வையைச் சிதறவிடாமல் இறைவன் நினைவாகவே இருந்து அவனைத் தன்னுள் உணர்ந்து தியானிப்பவர்களுக்கு வாழ்வு அழியாத - ஆனந்தமயமானதாக இருக்கும்.

*(நாட்டம் - பார்வை, கமையா - அழியாத)*

**துரியம் கடந்த சுடரொளியைக் கண்டால்**
**மரணம் பிறப்பில்லை வீடு.** 218

தூக்கம் - விழிப்பு இரண்டும் கடந்த நிட்டை நிலையில் மூலாக்கினியைக் கண்டுவிட்டால் பிறகு உயிர்க்குப் பிறப்பு இறப்பு இரண்டும் இல்லை. பேரின்ப வீடு அடைவதே இறுதி நிலை.

*(துரியம் - தூக்கம், நிட்டை)*

**மதிபோல் உடம்பினை மாசற நோக்கில்**
**விதிபோய் அகலவிடும்.** 219

சந்திர ஒளிச்சுடராய் உடலைத் தூய சிந்தையோடு பார்த்திருந்தால் விதியும் அதனால் வரும் துயரும் விலகிவிடும்.

*(மதி - சந்திரன்)*

**சீவன் சிவலிங்கமாகத் தெளிந்தவர் தம்**
**பாவ நசிக்கும் பரிந்து.** 220

சீவனையே சிவனாக எண்ணித் தெளியும் அறிவுடையவர்கள், பாவங்கள் பறந்தோடிவிடும். பாவம் அவர்களைப் பற்றாது - பாழாகும், அழியும்.

*(தெளிதல் - அறிதல், நசிக்கும் - அழியும்)*

## 3. மெய்யகம்

**மெய்யகத்தின் உள்ளே விளங்கும் சுடர்நோக்கில்**
**கையகத்தில் நெல்லிக் கனி.** 221

உள்ளத்தின் உள்ளே மெய்ஞ்ஞானச் சுடர் ஒளியைக் கண்டு தரிசித்தால் முத்தி இன்பம் கைமேல், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்சியாகும்.

*(கையகம் - கைக்குள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரையற்ற செல்வத்தைக் காணுங் காலத்தில்**
**உரையற்று இருப்பது உணர்வு.** 222

எல்லை இல்லாத பேரின்பச் செல்வமாகிய இறை அருளைக் கண்டுவிட்டால், பிறகு பேச்சற்றுப் போகும். உள்ளமும். அதன் உணர்வுகளும் இறை அருளில் ஊறிக் கலந்து விடும்.

*(கரை - எல்லை, உரை- பேச்சு)*

**உண்டு பசிதீர்ந்தால் போல் உடம்பெல்லாம்**
**கண்டுகொள் காதல் மிகும்.** 223

பசிக்கு வயிறாரக் சோறுண்டவன் அடைகின்ற ஆனந்தம் போல, இறை அருளை உள்ளே கண்டு கொண்டவர்கள் உடம் பெல்லாம் காதல் அன்பு மீதூறக் களிநடம் புரியச் செய்யும். "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து" என்பது திருவாசகம்.

*(காதல் - அன்பு)*

**உரைசெயும் ஓசை உரை செய்பவர்க்கு**
**நரைதிரை இல்லை நமன்.** 224

சிவாயநம என்னும் திருமந்திரத்தை உச்சரித்துத் தியானிப்பவர்களுக்கு, மூப்பும், முதுமையும் மரணமும் இல்லாது போகும்.

*(உரை - மந்திரச் சொல், ஓசை - உச்சரித்தல், உரை செய்தல் - தியானித்தல், நரை - மூப்பு, திரை - முதுமை, நமன் - எமன்.*

**தோன்றாத தூயஒளி தோன்றியக்கால் உன்னைத்**
**தோன்றாமல் காப்பது அறிவு.** 225

எவர்க்கும் எளிதில் தோன்றிவிடாத, ஞானச் சுடர்ஒளி, உன்னுள்ளே தோன்றிடக் கண்டால்; அந்த ஆனந்த அநுபவத்தால் ஆட்டம் போடாமல், அடங்கி அமைதியாக இருந்து, அந்த அநுபவ இன்பத்தைக் காப்பாற்றி வருதலே அறிவுடைமையாகும்.

*(தூய ஒளி - ஞானச் சுடர்)*

**வாக்கும் மனமும் இறந்த பொருள்காணில்**
**ஆக்கைக்கு அழிவில்லை யாம்.** 226



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் செயலும் கடந்த சுத்த பரிபூரணமான பரம் பொருளை உள்ளத்தினுள்ளே கண்டுவிட்ட உடம்புக்கு அழிவில்லை. "வாக்கிறந்த பூரணன் சிவன்" என்பது திருவிளையாடல் புராணம்.

*(வாக்கு - சொல், மனம் - செயல், இறந்த - கடந்த, ஆக்கை - உடல்)*

**கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்**
**உள்ளகத்தே நின்ற ஒளி.** 227

கண்ணுக்குள் நின்று ஒளிகாட்டி இன்பூட்டும், உள்ளத்தில் உள்ளே தோன்றும் ஒளி. பக்குவம் அடைந்த மனத்தவர்க்கு இந்தப் பேரின்ப அநுபவம் கிட்டும்.

*(களி - இன்பம்)*

**ஆனந்த மான அருளை அறிந்தபின்**
**தானந்தம் ஆகும் அவர்க்கு.** 228

பேரின்ப மயமான இறை அருளை உணரப் பெற்றவர்கள் தாங்களும் பேரானந்தப் பரவச நிலையில் திளைத்திருப்பார்கள்.

*(தானந்தம் - இன்பமயம்)*

**மறவாமல் காணும் வகை உணர்வாருக்கு**
**இறவாது இருக்கலும் ஆம்.** 229

இறை உணர்வை - ஞானஒளி சுடரை மறக்காமல் நினைவில் தேக்கிக் கண்டுணரும் தன்மை பெற்றவர்களுக்கு, சாகாமல் இருப்பதும் இயலும் சாத்தியமாகும்.

*(வகை - தன்மை)*

**விண்ணிறைந்து நின்ற பொருளே உடம்பதன்**
**உண்ணிறைந்து நின்ற ஒளி.** 230

வானம் எங்கும் நிறைந்திருக்கும் ஈசன், அவனே உடலின் உள்ளே பரவியிருக்கும் ஒளியாகவும் இருக்கிறான்.

*(பொருள் - ஈசன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கண்ணாடி

**கண்ணாடி தன்னில் ஒளிபோல் உடம்பதனுள்**
**உண்ணாடி நின்ற ஒளி.** 231

கண்ணாடியில் தோன்றும் ஒளி பிரகாசிப்பது போல, உடம்பின் உள்ளே நிறைந்திருக்கும் ஒளியாகிய இறையருள் பக்தியால் ஒளிவீசித் திகழும்.

*(உள்நாடி - உள்ளத்தை விரும்பி)*

**அஞ்சு புலனின் வழிஅறிந்தால் பின்னைத்**
**துஞ்சுவ தில்லை உடம்பு.** 232

ஐந்து புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் வழியாக வருகிற துன்பங்களையும், அவற்றைப் போக்கும் வழியும், ஐம்புலன்களை அடக்கியாளும் வழியும், அறிந்து கொண்டுவிட்டால், பின்னர் உடலுக்கு மரணம் இல்லை.

*(அஞ்சு - ஐந்து, துஞ்சுதல் - சாதல்)*

**நாபி அகத்தே நலனுற நோக்கிடில்**
**சாவதும் இல்லை உடம்பு.** 233

உந்திச் சுழியில் உயிர்க்கும் மூலாக்கினியை உற்றுப் பார்க்கும் யோகநிலை பெற்றுவிடடால், பிறகு உடலுக்குச் சாவு என்பதே இல்லை.

*(நாபி - உந்தி)*

**கண்டத் தளவில் கடிய ஒளிகாணில்**
**அண்டத்த ராகும் உடம்பு.** 234

கண்டமாகிய விசுத்திஸ்தானத்தில் ஞானஒளி காணப் பெற்றால் உடல் அழியாத தேவநிலை பெற்றுவிடும்.

*(அண்டத்தவர் - தேவர்)*

**சந்திரன் உள்ளே தழலுற நோக்கினால்**
**அந்தரம் ஆகும் உடம்பு.** 235

சந்திர மண்டலத்துள்ளே மூலாக்கினியைத் தரிசித்தால் உடல், வானில் சஞ்சரிக்கும் அழகிய சூக்கும தேகம் ஆகிவிடும்.

*(சந்திரன் - நெற்றிநடு, தழல் - சுடர், அந்தரம் - ஆகாயம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆர்க்கும் தெரியா உருவம் தனைநோக்கில்**
**பார்க்கும் பரமாம் அவன்.** 236

எளிதில் எவருக்கும் தெரிந்துவிடாத ஈசனை மனத்துள்ளே பார்க்கமுடிந்துவிட்டால், அப்படிப் பார்க்கமுடிந்த அவன், பின் மேலான நிலை பெறுவான்.

*(ஆர்க்கும் - யாவருக்கும்)*

**வண்ணம் இல்லாத வடிவை அறிந்தபின்**
**விண்ணவர் ஆகும் உடம்பு.** 237

நிறமும் ஓர் உருவும் இல்லாத இறைவன் ஒளிவடிவைக் கண்டவர்கள், இறைவா உடல் பெற்று வானவராய்த் திகழ் வார்கள்.

*(வண்ணம் - நிறம்)*

**நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்**
**முற்றும் அழியா உடம்பு.** 238

நெற்றிக்கு நேராகப் புருவ மத்தியில் நிறைந்திருக்கும் ஞானச் சுடர் ஒளியைக் கண்டுவிட்டால், அழிவில்லாத ஒளியுடல் பெறலாம்.

*(நெற்றிக்கு நேர் - புருவ நடு)*

**மா தூவெளியில் மனம்ஒன்ற வைத்தபின்**
**போதகம் ஆகும் உடம்பு.** 239

பெரிய - தூய வெளியாகிய பரவெளியில் சித்தம் லயிக்கச் செய்துவிட்டால், உடல் ஞான வடிவமாகும். ஒளி உடல், அறிவுடலாகும்.

*(மா - பெரிய, தூ - தூய, வெளி - அண்டப் பெருவெளி. போதகம் - ஞானம்)*

**சுத்தமோடு ஒன்றி மனமும் இறந்தக்கால்**
**முற்றும் அழியாது உடம்பு.** 240

சுத்த தத்துவமாகிய பரம்பொருள் நினைவோடு கலந்து, மனம் இறந்து - அதாவது தான் எனும் நினைவு கெடத் தன்னிலை மறந்து இருக்கும் நிலை பெற்றுவிட்டவர்கள், உடல் அழியாது.

*(சுத்தம் - பரம்பொருள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சூனியகாலம் அறிதல்

**நிரவி அழல் உருவாய் நீண்ட ஒளிகாணில்**
**அரவணையான் ஆகும் உடம்பு.** 241

நேர்படச் சுடர்விடும் ஒளி உருவான இறைவனைச் சோதியில் உருவில் கண்டால், அரவணிந்த சிவனைப்போல உடல் சிவசொரூபம் ஆகும்.
*(நிரவி - ஒழுங்குபட, அரவு - பாம்பு)*

**உருவம் தழலாக உள்ளத்தே சென்று**
**புருவத்திடை இருந்து பார்.** 242

புருவங்களின் மத்தியில் மூலக்கனலில் எழுந்த நெருப்புச் சுடருருவில் இறைவனாகிய சோதிச் சுடரை தரிசிப்பாயாக.
*(தழல் - நெருப்பு)*

**புருவத்திடை இருந்து புண்ணியனைக் காணில்**
**உருவற்று நிற்கும் உடம்பு.** 243

புருவமத்தியில் நினைவை நிறுத்தி இறைவனைத் தியானித்தால் உடல் உருவமற்று இருக்கும் (ஒளிமயமாகும் என்பது குறிப்பு)
(புண்ணியன் - இறைவன்)

**அகம்புறம் பேராப் பொருளை அறியில்**
**உகம்பல காட்டும் உடம்பு.** 244

உள்ளத்தை விட்டு நீங்காது, நிறைந்திருக்கிற இறைவனை, உள்ளத்தால் உணர்ந்து தெரிந்துகொண்டு வழி பட்டால், மனித உடல் பல்லாண்டு காலம் அழிவின்றி இருக்கும்.
*(அகம் - உள்ளம், புறம் - வெளி, பேரா- நீங்கா, உகம் - யுகம்)*

**ஆவிபாழ் போகாது அடக்கி இருந்தபின்**
**ஓவியம் ஆகும் உடம்பு.** 245

உயிர் மூச்சை வீணாக்கி விடாமல் உள்ளடக்கி இருந்தால், உடல் ஓவியம் போல் ஒரே நிலையில் - மாறாமல் அழகுடன் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(*ஆவி - மூச்சுக்காற்று, போகாது - வீணாக்காது, ஓவியம் - சித்திரம்)*

**அஞ்சும் அடக்கி அறிவோடு இருந்தபின்**
**துஞ்சுவது இல்லை உடம்பு.** 246

ஐம்புலன்கள் வழியும் செல்லும் ஆசைகளை அடக்கி அறிவு காட்டும் நல்வழியில் நின்றால், பின்னர் உடலுக்கு அழிவு என்பது இல்லை.

(*துஞ்சுவது - இறப்பது*)

**தீயாக உள்ளே தெளிவுற நோக்கினால்**
**மாயாது பின்னை உடம்பு.** 247

உள்ளத்தின் உள்ளே ஒளிச்சுடராய் இருக்கின்ற இறைவனைத் தெளிவாகத் தரிசிக்கமுடிந்துவிட்டால், பிறகு உடல் சாகாது.

(*மாய்வது - இறப்பது*)

**தானந்தம் இன்றித் தழலுற நோக்கிடில்**
**ஆனந்த மாகும் உடம்பு.** 248

முடிவின்றி இடைவிடாது தொடர்ந்து மூலக்கனலில் சோதி உருவைக் கண்டு களித்தால் உடல் ஆனந்த பரவசத்தில் மிதக்கும்.

(*அந்தம் - முடிவு*)

**ஒழிவின்றி நின்ற பொருளை உணரில்**
**அழிவின்றி நிற்கும் உடம்பு.** 249

ஓயாமல் தொடர்ந்து, உள்ஒளியாய் இருக்கின்ற பரம் பொருளை உணர்ந்து உபாசித்தால் உடல் அழிவின்றி இருக்கும்.

(*ஒழிவின்றி - ஓயாது*)

**பற்றற்று நின்ற பரம்பொருளை சிந்திக்கில்**
**முற்றும் அழியாது உடம்பு.** 250

விருப்பு வெறுப்புகள் இல்லாது இருக்கின்ற இறைவனை எண்ணி மனதில் இருத்தித் தியானம் செய்தால், அப்படிச் செய்பவர்கள் உடல் அழியவே அழியாது.

(*பற்று - இச்சை, முற்றும் - முழுதும்*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சிவயோக நிலை

**அடிமிசை வாயு அருத்தருத்து ஏகி**
**முடிமிசை ஓட முயல். 251**

அடிவயிற்றில் உந்திக் கமலத்தில் எழுப்பும் மூச்சுக் காற்றை மேல்நோக்கித் தொடர்ந்து செலுத்த முயற்சி செய் வாயாக.

*(அடிமிசை - அடிவயிறு, முடிமிசை - மேல்நோக்கி, முயல் - முயற்சி)*

**உண்ணாடி வாயுதனை உடன் நிரப்பி**
**விண்ணோடு மெள்ள விடு. 252**

உள் நோக்கிப் பார்த்து மூச்சுக் காற்றை இழுத்து, உடல் முழுவதும் நிறையச் செய்து; பின்னர் வெளியே மெள்ளப்போக விடுவாயாக. பிரணாயாமம் முறை சொல்லப்படுகிறது.

*(உள் - மனத்துள், நாடி - பார்த்து, விண்ணோடு - ஆகாயத்தோடு கலக்க வெளிவிடுதல்)*

**மெள்ள இரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்**
**கொள்ளுமின் கும்பம் குறித்து. 253**

மெதுவாக மூச்சுக் காற்றை வெளியிட்டு, உடல் பருத்து விரிய மீண்டும் காற்றை கும்பத்தில் சேர்ப்பாயாக - அடக்கு வாயாக. இதுவும் பிரணாயாம முறை கூறும் குறளே.

*(இரேசித்து - சுவாசித்து, கும்பம் - குடவடிவான இதய கமலம், மூச்சு விடும் முறையுமாம்)*

**இரேசகம் முப்பத்திரண்டது மாத்திரை**
**பூரகம் பத்தாறு புகும். 254**

மூச்சுக் காற்றை வெளியிடும் கால அளவு முப்பத்திரண்டு மாத்திரை. உள்வாங்கி மூச்சைப் பூரகத்தில் நிறுத்தக் கால அளவு பதினாறு மாத்திரை.

*(இரேசகம் - வெளியிடுதல், மாத்திரை - கணப்பொழுது, பத்தாறு - பதினாறு)*

**கும்பம் நாலோடு அறுபது மாத்திரை**
**தம்பித் திருவது தான். 255**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்தில் மூச்சை நிறுத்தவேண்டிய கால அளவு அறுபத்து நான்கு மாத்திரைகளாம்.

*(தம்பித்திடுவது - நிறுத்துவது)*

**முன்னம் இரேசி முயலுபின் பூரகம்**
**பின்னது கும்பம் பிடி.** 256

பிரணாயாமம் செய்யப் பழக முதலில் மூச்சுக் காற்றை வெளியிடு. பின் உள்ளே இழுக்கப் பழகு. ஆதற்குப் பிறகு மூச்சுக் காற்றை அடக்கப் பழகு. மூச்சை வெளிவிடுதல் இரேசகம், உள் இழுத்தல் பூரகம், அடக்குதல் கும்பம்.

*(கும்பம்பிடி - கும்பத்தில் நிறை)*

**ஈரைந்து எழுபத்தி இராயிர நாடியும்**
**சேருமின் வாயுச் செயல்.** 257

இப்படி பிரணாயாமப் பயிற்சி மேற்கொள்ளும்போது உடலில் உள்ள எழுபத்து இரண்டாயிரம் நாடிகளும் சுவாசத்தோடு சேர்ந்திருக்கும்படிச் செய்து கொள்வாயாக.

*(ஈரைந்து - பத்து, எழுபத்தி இராயிரம் - எழுபத்தி இரண்டாயிரம்)*

**வாசல் ஈரைந்து மயங்கிய வாயுவை**
**ஈசன்தன் வாசலில் ஏற்று.** 258

ஏழு வாசல்கள் உள் புகுந்து சுழலும் மூச்சை ஈசன் வெளிப்படும் வாசலாகிய தலையின் நடு உச்சிக்கு ஏற செய் வாயாக. ஈரைந்து - பத்துவாசல் என்றும் சிலர் பாடம் கூறுவர்.

*(ஈசன்வாசல் - கபாலவாசல்)*

**தயாவினில் வாயு வலத்தில் இயங்கில்**
**தியான சமாதிகள் செய்.** 259

இறைவன் திருவருள் துணையால் வாயுவாகிய மூச்சுக் காற்று, வலமாகிய பிங்கலையில் சஞ்சரிக்கும்போது தியானம் செய்வது நல்லது. எனவே அப்போது சமாதி நிலையில் யோகப் பயிற்சி செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தயா - கருணை, தியானம் - நிட்டை, சமாதி - யோக நிலை)

**ஆதியாம் மூல மறிந்து அஞ்செழுத்தினைப்**
**பேதியாது ஓது பினை.** 260

ஆதிமூலமாகிய பரம்பொருளை எண்ணிப்பின் அவனுடைய ஐந்தெழுத்து மந்திரமாகிய 'சிவாயநம' என்னும் சொல்லை மாறுபாடின்றி மனம் ஒன்ற ஓதுவாயாக.

*(பேதியாது - மாறுபடாது, பினை - பின்னை)*

## 7. ஞான நிலை

**தற்புருட மாமுகம் தன்னில் தனிஇருந்து**
**உற்பனம் அஞ்சை உரை.** 261

தற்புருடம் என்னும் உயர்ந்த நிலையில், தனிமையில் இருந்து மேலான ஐந்தெழுத்தை உச்சரித்து தியானம் செய் வாயாக.

*(தற்புருடம் - மேலான இடம். மா - பெரிய, உற்பனம் - மேலானது, உரை - உச்சரித்தல்)*

**தற்புருட மாமுகமேல் தாரகை தன்மேலே**
**நிற்பது பேரொளி நில்.** 262

யோக நிலையில் தற்புருடமான முகத்தில் ஒளிச்சுடர் போல் ஒன்று தோன்றும். அப்படித் தோன்றும் அந்த ஒளிச் சுடராகிய விண்மீன் மீது ஒரு பேரொளி தெரியும். நீயும் அப் பேரொளியில் கருத்தூன்றி நிற்பாயாக.

*(தாரகை - நட்சத்திரம், விண்மீன்கள்)*

**ஓதிய தற்புருடத்தடி ஒவ்வவே**
**பேதியாது ஓது பினை.** 263

மேலே சொன்ன தியான நிலையில் தற்புருட முகத்தோடு ஒன்றித் தடுமாற்றம் இன்றி ஐந்தெழுத்தை ஓதி உச்சரிப்பாயாக.

*(ஓது - சொல், பினை - பின்பு, ஒவ்வ - பொருந்த)*

**கொழுந்துறு வன்னி கொழுவுற ஒவ்வில்**
**எழும் தாரகையாம் இது.** 264



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழி முனையில் கொழுந்துவிட்டு எரியும் தீச் சுடரை மனம் பொருந்தப் பார்த்துத் தியானித்தால், அத்தீச்சுடர் நட்சத்திரம் போலத் தெரியும். இதுவே ஞானாக்கினியாகும்.

*(ஒவ்வ - பொருந்த)*

**மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே**
**குறித்துக் கொளும்சீயைக் கூட்டு.** 265

இப்படிச் சுடர்விடும் ஞானாக்கினியின் இடையே, சிவ பஞ்சாட்சரச் சிந்தனையைச் சேர்ப்பாயாக. இப்படிச் சேர்த்தால் சீவன் சிவன் ஆகும். சித்தம் சிவமயமாகும்.

*(கொளுவிடு - சுடர்விடும், சீயை - சிகாரம், அதாவது சிவ பஞ்சாட்சரம் - "நமசிவாய" மந்திரம்)*

**காலும் தலையும் அறிந்து கலந்திடில்**
**சாலவும் நல்லது தான்.** 266

கீழ்வாயுவையும் மேலான பிராணவாயுவையும் அறிந்து இரண்டையும் உச்சியில் கலந்திடச் செய்தால் மிகவும் நல்லது தான்.

*(கால் - கீழ், தலை - மேல், சாலவும் - மிகவும்)*

**பொன்னொடு வெள்ளி இரண்டும் பொருந்திடில்**
**அன்னவன் தாளதுவே யாம்.** 267

பொன்னும் வெள்ளியும் ஒன்றாகக் கலந்துவிட்டால் அதாவது, சந்திரகலையும், சூரியகலையும் - நாதமும் விந்தும் புருவநடுவில் கலக்க ஞானசித்தி பெற்றுவிட்டால், அதுவே இறைவன் திருவடி நிழல் பெற்ற நிலையாம்.

*(அன்னவன் - இறைவன், தாள் - திருவடி)*

**நின்ற எழுத்துடன் நில்லா எழுத்தினை**
**ஒன்றுவிக்கில் ஒன்றே உள.** 268

நின்ற எழுத்தாகிய சூரிய கலையுடன் (சிவனுடன்), நிற்காத எழுத்தாகிய சந்திர கலையைச் (சக்தியை) சேர்ப்பித்தால் இருக்கிற பரம்பொருள் ஒன்றே என்பதை உணரமுடியும். அகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற எழுத்து அகரத்துள் ஒடுங்கும் நில்லா எழுத்து உகரம். அ-உ-ம் இதுவே 'ஓம்' எனும் பிரணவம்.

*(ஒன்றுவிக்கில் - சேர்ப்பித்தல்)*

**பேசா எழுத்துடன் பேசும் எழுத்து உறில்**
**ஆசான் பரன்நந்தி யாம்.** 269

பேசா எழுத்தாகிய ஓம் என்னும் பிரணவ மந்திரத்துடன் பேசும் எழுத்தாகிய நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும் சேர்ந்தால், (ஓம் நம சிவாய) குரு அருளும் திருவருளும் கூட, நந்தி எம் பெருமானே நமக்கு நல்ல குரு ஆவான்.

*(உறில் - சேரின்)*

**அழியா உயிரை அவனுடன் வைக்கில்**
**பழியானது ஒன்றில்லை பார்.** 270

உடல் அழியும், ஆனால் உயிர் அழியாதது. இப்படிப்பட்ட அழிவற்ற உயிரை சிவனோடு பொருந்தச் செய்துவிட்டால் பிறகு உயிர்க்கு ஒரு குறையுமில்லை. மேலான நிலைதான் என்பதைத் தெரிந்து கொள்வாயாக.

*(பழி - குறை, குற்றம்)*

## 8. ஞானம் பிரியாமை

**பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்**
**இறந்திடம் வன்னி இடம்.** 271

மூலாக்கினி பிறந்த இடமாகிய உந்திக் கமலம், திருமால் இருக்கும் இடம். இங்குள்ள மூலாக்கினி வாசியோடு சேர்ந்து அதைவிட்டு நீங்காது இருக்கவேண்டும். இல்லை என்றால் மனிதன் இருக்கவேண்டிய இடம்; இறந்திடம் - சுடுகாடுதான்.

*(மால் - திருமால், இடம் - மணிபூரகம், பேராது - நீங்காது, இறந்திடம் - சுடுகாடு)*

**சாகா திருந்த தலமே மவுனமது**
**ஏகாந்த மாக இரு.** 272

இறவாத நிலை பெற்றிருக்கிற இடம் எது என்றால் அது பேசாத நிலை பெற்ற மவுனமே. யோக நிஷ்டையே. ஏனவே ஏகாந்தத்தில், ஏதும் பேசாத மவுன நிலையிலே, இருப்பாயாக.

*(மவுனம் - பேசாதிருத்தல், ஏகாந்தம் - தனிமை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியில் விளைந்த விளவின் கனிதன்**
**ஒளியில் ஒளியாய் உறும்.** 273

சித்தாகாசத்தில் தோன்றிய விளாம்பழம் தான் அதாவது மெய்ஞ்ஞானம் தான்; உள்ளத்து ஒளியில் ஒளியாய் உயர்ஞானப் பழமாய்த் தோன்றும். ஞானத்தை விளாம்பழத்தோடு ஒப்பிடல் மரபு.
*(வெளி - சித்தாகாசம், விளவின் கனி - விழாம்பழம்)*

**மறவா நினையா மவுனத்து இருக்கில்**
**பிறவார் இறவார் பினை.** 274

எதையும் மறக்கவோ, நினைக்கவோ தோணாத மேலான மவுன நிலையில் இருப்பவர்கள், பின் பிறக்கவோ இறக்கவோ வேண்டாத பேரின்ப நிலையை அடைவர்.
*(பினை - பின்பு)*

**குருவாம் பரனந்தி கூடல் குறித்தாங்கு**
**இருபோது நீங்கா திரு.** 275

ஞான குருவாம் நந்தி தேவனுடன் இரவு பகல் எப்போதும் விடாது கலந்திரு.
*(பரன் - பரம்பொருள். நந்தி - நந்திதேவன், இருபோது – பகல் இரவு ஆகிய இருபொழுது)*

**சுந்தரச் சோதி துலங்கும் இடமது**
**மந்திரச் சக்கரமும் ஆம்.** 276

அழகே உருவான சோதிச் சுடர்ஒளி தோன்றுமிடம் நெற்றிப் புருவ நடு சக்கரமேடாகும். அந்தச் சக்கரத்தில் மந்திரச் சொல்லாகிய நமசிவாய மந்திரத்தை ஓதி உணர்வதே ஞான நிலையாகும்.
*(துலங்கும் - விளங்கும்)*

**தூராதி தூரம் சொல்லத் தொலையாது**
**பாராப் பராபரம் பார்.** 277

உள்ளத்தன்பாலும், உயர் அநுபவத்தாலும் அன்றி வேறு எந்த வகையாலும் காணமுடியாத - பரம்பொருளாகிய இறைவன் - தூரத்தில் இருப்பவன். சொல்ல முடியாத தொலை தூரம் தாண்டி இருப்பவன் என்பதை அறிவாயாக. அவனை மனக் கண்ணால் உள்ளத்தின் உள்ளேயே காணவேண்டும்.
*(பாரா - பார்க்க இயலா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈரொளி ஈதென்று இறைவன் உரைத்தனன்**
**நீரொளி மீது நிலை.** 278

இரவு, பகல், கீழ் மேல் என்னும் இரண்டொளிகள் அல்லாது சூரியகலை சந்திரகலை இரண்டும் உந்திக் கமலத்து உதித்த ஞானச்சுடர் ஒளியில் கும்பித்தால் இறைவன் இருக்கும் இடம் அது என்று அறி.

*(நீரொளி - உந்திக் கமலத்து ஒளி)*

**அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்**
**சுந்தர ஞானச் சுடர்.** 279

முடிவும் முதலும் இல்லாத ஆதிப் பரம்பொருள், உள்ளத்துள்ளே ஒளிவிடும். அழகிய சோதிச் சுடரொளியாகிய ஞானச் சுடரே. "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" – என்பது திருவெம்பாவை.

*(சுந்தரம் - அழகு)*

**இதுமுத்தி சாதனம் என்று ஏட்டில் வரைந்து**
**பதி வைத்தனன் குரு பார்.** 280

முத்தி அடைவதற்கான கருவி – வழி, இதுதான் என்று, ஞான குருவாகிய பரம்பொருள் ஏட்டில் எழுதிவைத்து அருளியுள்ளான்.

*(சாதனம் - கருவி, பதி - தலைவன்)*

## 9. மெய் நெறி

**செல்லல் நிகழல் வருகாலம் மூன்றினையும்**
**சொல்லும் மவுனத் தொழில்.** 281

சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றையும் அறிந்து சொல்லமுடியும் மவுன யோகத்தால். யோக நிட்டையால்.

*(செல்லல் - இறந்தகாலம், தொழில் - நிட்டை, யோகம்)*

**பஞ்சில் படுபொறி போலப் பரந்திருந்து**
**துஞ்சாது ஞானச் சுடர்.** 282



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சுப் பொதியில் பட்ட நெருப்புப் பொறி பற்றிப் பரவுவது போல, ஞானச் சுடர் ஒளி பற்றிய உயிரை விட்டு அணையாது ஒளி வீசித் திகழும்.

*(படு - பற்றிய, துஞ்சாது - அணையாது)*

**இமைப்பில் பரந்தங்கு ஒடுங்கும் மின்போல**
**நமக்குட் சிவன்செயல் நாடு.** 283

கண் இமைக்கும் நேரத்தில் விண்ணில் தோன்றி மறையும், மின்னலைப் போல நம்முள் - உள்ளத்துள்ளே; சிவன் அருள் - ஒளி மறைந்துள்ளது. அதைத் தேடிக் காண்பாயாக.

*(இமைத்தல் - கண் இமைத்தல். ஒடுங்கும் - மறையும். நாடு - தேடி அடை)*

**குவித்து மனத்தைக் குவித்துள்ளே ஓங்கில்**
**செவித்துப் பெறுவ தெவன்.** 284

மனதை ஒருமுகப்படுத்தி உள்ளத்துள்ளே ஓங்கி எழும் ஞானச் சுடரை தரிசித்தால் சித்திகள் எல்லாம் பெறலாம். பிறகு செபம் செய்து அடையப் போவது என்ன உள்ளது? ஒன்றுமில்லை.

*(குவித்து - ஒருமுகப்படுத்தி, ஓங்கல் - உயர்வு. செபித்து - ஜெபம் செய்து, எவன் - வியப்பு அல்லது என்ன)*

**காலும் தலையும் ஒன்றாகக் கலந்திடம்**
**நாலா நிலையென நாடு.** 285

மேலும் கீழுமான வாயுக்கள் ஒன்றிக் கலந்த இடம் விழிப்பும் உறக்கமும் அற்ற நான்காவது நிலையான துரியநிலை - கனவு நிலை என்பதை அறிந்து - அதை அடைய முயலுவாயாக.

*(நாடு - அடைய முயலுக)*

**மூல நிலமிசை மூன்றாம் நிலந்தனில்**
**ஆலம் அருந்தும் சிவம்.** 286

மூலநிலமாகிய நெற்றிப் பொட்டில் மூன்றாம் நிலமாகிய மணிபூரகத்தில் ஆலம் உண்ட சிவன் அமர்ந்திருப்பான்.

*(ஆலம் - விஷம், அருந்தும் - உண்ணும்)*

**எழுஞ்சுடர் உச்சியில் மேல் மனம்வைக்கத்**
**தொழில் ஒன்றில்லாத சுடர்.** 287



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்விடும் அக்கினிக் கலையின் உச்சியில் மனம் இலயிக்கச் செய்தால் சுடரும் அசைவற்று நிற்கும். இது ஓர் அநுபவ சித்தியாகும்.

*(வைத்தல் - லயிக்கச் செய்தல், தொழில் - அசைவு)*

**அடைத்திட்ட வாசலின் மேல்மனம் வைத்துப்**
**படைத்தவன் தன்னையே பார்.** 288

மூடியிருக்கும் மனவாசலின் மேல் சிந்தையை வைத்துப் படைத்த பரம்பொருளை மனக்கண்ணால் பார்த்துத் தரிசனம் செய் - தியானி.

*(வாசல் - மனவாசல், படைத்தவன் - உயிர்களைப் படைத்த பரம்பொருள்)*

**அறுபதோடு ஆறு வருடம் இதனை**
**உறுதிய தாக உணர்.** 289

இந்தத் தியான யோகத்தை அறுபத்து ஆறு ஆண்டுகள் உறுதியாகச் செய்துவர வேண்டும் என்பதை அறிவாயாக.

*(உணர் - அறிவாயாக)*

**அட்டமா சித்தி அடையும் ஓராண்டினில்**
**இட்டம் இதனைத் தெளி.** 290

இப்படித் தியான யோகம் ஓராண்டு பயிற்சி செய்தால்; அணிமா, மகிமா, கிரிமா, யகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், விசித்துவம் என்னும் எட்டுவகைச் சித்திகளும் விரும்பி யபடிக் கைகூடும் என்பதை அறிவாயாக.

*(அட்டம் - எட்டு, சித்தி - சாதனை, இட்டம் - விருப்பம்)*

## 10. துரிய தரிசனம்

**வன்னியது எட்டு மதியம் பதினாறு**
**முன்னிய பன்னிரண்டு முன்.** 291

அக்கினியினது எட்டு கலைகள், சந்திரனது பதினாறு கலைகள், இந்த இரண்டிற்கும் முன்னதான சூரியனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு கலைகள் என்பதை உணர்ந்து மூச்சுப் பயிற்சி மேற் கொள்வாயாக.

*(முன்னிய - முன்னதான)*

**சூரியன் வன்னி ஒன்றாகிடில் சோமனாம்**
**பாருமின் ஈது பயன்.** 292

சூரியன் பிங்கலையோடு, மூலாக்கினி சேர சந்திரகலை இடகலை வசப்படும். இதன் பயனை நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இது தவயோக தத்துவ நிலை பற்றிய குறிப்பு. அனுபவத்தாலும் குருவழியாகவுமே அறியத்தக்கது.

*(ஈது - இது)*

**மதியோடு வன்னி ஒன்றாகவே வந்தால்**
**கதிரவன் ஆமென்று காண்.** 293

சந்திரனுடன் அக்கினி கலந்து ஒன்றாகி வந்தால் சூரியன் தோன்றித் தெரிவதை உணரலாம். இதுவும் யோகநிலை விளக்கமே.

*(கதிரவன் - சூரியன்)*

**மதிக்குட் கதிரவன் வந்துஅங்கு ஒருங்கில்**
**உதிக்குமாம் பூரணைச் சொல்.** 294

சந்திரனுடைய பாதையில் இருந்து சூரியன் விலகி அதை மறைக்காமல் செல்லும் நாளே பவுர்ணமி ஆகும்.

*(பூரணை - நிறைமதி)*

**தோன்றும் கதிரவன் உள்மதி புக்கிடில்**
**சாற்றும் அமாவாசை தான்.** 295

உதிக்கின்ற சூரியனில் சந்திரன் நுழைந்தால் அதாவது சந்திர வட்டம் சூரியனால் மறைக்கப்பட்டால் அன்று அமாவாசை நாளாகும்.

*(புகுதல் - நுழைதல், மறைதல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி கதிரவன் கூடிடில் அத்தகை**
**பின்னிவை ஆகும் எலாம்.** 296

மூலாக்கினியுடன் சந்திரகலை சேர்ந்திருக்கத் தவயோக நிட்டையில் இருப்பவர்களுக்கு இவ்வுலகில் எல்லாம் சாத்திய மாகும்.

*(அத்தகை - அத்தகைய அக்கினி)*

**அமாவாசை பூரணை ஆகும் அவர்க்குச்**
**சமனாம் உயிர் உடம்புதான்.** 297

சூரிய சந்திர கலைகளை உடம்பில் நடத்தும் தவவலிமை பெற்றவர்களுக்கு, உயிரும் உடலும் சமமாக ஒன்றைவிட்டு ஒன்று நீங்காது, பொருந்த இருக்கும்.

*(அமாவாசை - சூரியன், பூரணை - சந்திரன்)*

**அண்டத்திலும் இந்தவாறு என்று அறிந்திடு**
**பிண்டத்திலும் அதுவே பேசு.** 298

அண்டவெளியான ஆகாயத்தில் இருப்பது போன்றுதான், மண்ணில் உயிருள்ளும், உடலுள்ளும் பஞ்சபூதச் சேர்க்கை என்பதை அறிந்து தெளிவாயாக.

*(அண்டம் - ஆகாயம், பரவெளி. பிண்டம் - உடல்)*

**ஏறும் மதியம் இறங்கில் உறங்கிடும்**
**கூறுமப் பூரணை கொள்.** 299

உள்ளிழுக்கும் சந்திரகலை மூச்சு வெளிப்படுகிற நிலையில் உள்ள அமைதிகொள்ளும். மனம் பரிபூரணத் தியானத்தை மேற்கொள்ளும்.

*(மதியம் - சந்திரகலை)*

**உதிக்கும் மதியமும் கண்டங்கு உறங்கில்**
**மதிக்கும் அமாவாசை யாம்.** 300

இப்படித் தியானத்தில் இருக்கும் மனதில் பூரண நிலவு போல ஆனந்த ஒளி தோன்றும். அந்த ஆனந்த ஒளியைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயே - அதிலேயே இலயித்து இருந்தால், மனம் சுத்த சூனியமாய் இறையருளில் திளைக்கும்.
*(அமாவாசை - ஒன்றுமற்ற நிலை)*

## 11. உயர்ஞான தரிசனம்

**கொண்டிடும் மண்டலம் மூன்றங்கி தன்னைஇப்**
**பிண்டமும் ஊழி பிரியா.** 301

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று மண்டலங்களிலும் தங்கி அதன் ஒரு பாகம் ஆகிவிட்டால் பிறகு ஊழிக்காலத்தில் உடல் இதைவிட்டு நீங்காது.
*(ஊழி - இறுதிக் காலம்)*

**வெள்ளி புதனோடு திங்கள் இடமெனத்**
**தள்ளுமின் கால சரம்.** 302

வெள்ளி, புதன், திங்கட்கிழமைகளில் சந்திரகலையைப் பிங்கலையில் இடமிருந்து வலமாகச் சேரும்படி நாட்களை நடத்து வாயாக.
*(காலசரம் - காலக்கணக்கில் விடும் மூச்சு)*

**செவ்வாய் சனிஞாயிறு வலம் ஆகவே**
**கொள்ளில் இவ்வாறு இடரும்இல்.** 303

செவ்வாய் சனி, ஞாயிறு தினங்களில் சூரியகலையைச் சந்திர கலையுடன் வலமிருந்து இடமாகச் சேரச் செயல்பட்டால் உலகில் துன்பம் இன்றி வாழலாம்.
*(இடர் - துன்பம்)*

**வளர்பொன் இடம் பிறைத்தேய்வு வலமாம்**
**வளர்பிறை என்றே மதி.** 304

வியாழக்கிழமையில் - தேய்பிறைக் காலத்தில், இடது பக்கம் நாசியில் இருந்தும், வளர்பிறைக் காலத்தில் வலது பக்கம் நாசியில் இருந்தும், மூச்சுவிடவேண்டும்.
*(வளர்பொன் - வியாழன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலத்தில் சனிக்கே இராப்பகல் வாயு**
**செலுத்த பேராது செயல்.** 305

சனிக்கிழமைகளில் இரவும் பகலும் மூச்சுக்காற்று வலப் பக்கம் மூக்குவழி, மூச்சுக்காற்று இடைவிடாது தொடரச் செய்ய வேண்டும்.

*(பேராது - இடைவிடாது)*

**இயங்கும் பகல்வலம் இராஇடம் வாயு**
**தயங்குறல் நாடிக்குள் தான்.** 306

சுற்றுகின்ற குண்டலி அதாவது ஓங்கார நாடியில் பகலில் வலமாகவும், இரவில் இடமாகவும் மூச்சுக்காற்று சுழலும்.

*(இரா - இரவு, வாயு - மூச்சுக் காற்று)*

**அரசர் அறியாமல் அவன்பேர் உரைத்துத்**
**தரைதனை ஆண்ட சமன்.** 307

இப்படி யோகநிலையில் இருப்பது, அரசன் உணராமலே அவன் பெயர் சொல்லிப் பூமியில் மன்னனைப் போல இருப்பதற்குச் சமம் ஆகும்.

*(சமன் - நிகர்)*

**கல்லாத மூடர் திருஉருக்கொண்டு இடர்**
**செல்லாத தென்ன செயல்.** 308

படிக்காத முட்டாள்கள் இப்படி ஒரு உரு- உடல் பெற, யோக சித்தியில் ஈடுபடுவார்களேயானால்; அவர்களும் துன்பம் தீண்டாமல் வாழலாமே.

*(இடர் - துன்பம்)*

**திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்**
**குருவிருப்பாம் என்று கொள்.** 309

இந்தத் திருவருட்பாலில் கூறப்பட்டுள்ள தவயோக நெறிகளைத் தெரிந்து தெளிந்து அதன்படி நடந்தால் அதுவே குருவருள் என்று கொள்வாயாக.

*(தெளியில் - உணர்ந்தால். குருவிருப்பு - குருவிருப்பம், குருஅருள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்கிலும் கேட்கிலும் ஞானக் கருத்துற**
**நிற்கிற் பரம்அவை வீடு.** 310

ஞான நூற்களைக் கற்றாலும், பிறர் கூறக் கேட்டாலும், ஞான வழியில் கருத்தூன்றி நின்றாலும், பரம்பொருள் அருள் கிட்டும். வீடும், மோட்சமும் கைகூடும்.
*(பரம்அவை - பரம்பொருள் இவையே)*

**அவ்வைக்குறள் மூலமும் விளக்கமும் அரும்பொருள் உரையும் முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமய உரிமை மீறல் மனித உரிமை மீறலாகாதா?

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா B. A.

**சீராரிலங்கை சிவபூமி - முன்னைய**
**ஆப்தர் திருமூலர்**
**அவ்வனமே மொழிந்தவர் - பின்னைய**
**ஆப்த சிவயோக சுவாமிகள்**

ஈழத்தில் தமிழ்ப் பிரதேசம் முழுவதும் சைவபூமி வந்து சேர்ந்த ஒரு சிலவற்றைவிட இப்பகுதி பெற்றிருந்த ஆலயங்கள் எல்லாம் சைவாலயங்கள் பராதீனப்பட்ட ஒரு சிலர் தவிர இப் பிரதேசத்துச் சுதந்திர சமயிகள் எல்லாருஞ் சைவர். இவர்கள் வழிபாட்டு நெறிமட்டுமல்ல வாழ்க்கை நெறிகூடச் சிவாகம நெறி தழுவியது. சுயமான சில தேவைகளுக்காகச் சிவாகம நெறி வழுவிவாழ நேர்ந்த சைவர்களும், வெள்ளிக்கிழமை, பூரணை அமாவாசை ஊர்க்கோயிற் திருவிழாக் காலம் முதலியவற்றில் ஆவது சிவாகம நெறிவாழ்வைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. விஞ்ஞான அறிவியல் மிக்க இக் காலத்திலும் படித்த பெண்கள் கூடத் தாம்தாம் கருவுற்றதில் இருந்து ஒரு அம்மன் அல்லது பிள்ளையார் சுப்பிரமணியர், வைரவர், என்ற ஒன்றில் பெயரில் நேர்த்தி வைத்துப் பிறந்த தொடக்கும் கழிந்ததும் முதன்முதல் அத் தெய்வத்திடமே கொண்டுபோய் அர்ப்பணிக்கின்றார்கள். சிலர் அதற்கே பிள்ளையை விற்றுப் பிறகு தென்னம்பிள்ளை கொடுத்து வாங்குகிறார்கள். அதன் முன்னிலையிலேயே அன்னப் பிராசனம் (முதலுணவூட்டல்) செய்விக்கிறார்கள்.

இது அவர்களின் தன்னியல்பான கடவுள் வழிபாட்டு நிலை ஆன்ம இயல்பான சிவபக்தி நிலை எவ்வுயிர்க்கும் உயிருக்குயிராய் உள்ளவன் சிவன் என்ற சிவாக சைவத் திருமுறை, சித்தாந்த சாஸ்திர உண்மைகளிற்குப் பொருத்தமான ஒரு உள்ளுணர்வு உந்துதல் இது. தாயின் இந்த உள்ளுணர்வு பிள்ளையின் உள்ளுணர்விலும் பதிவுற்று இருத்தல் தப்பாது. இரத்தத் தொடர்பில் நம்பிக்கை வைத்து மரபணு ஆராய்ச்சி முறையைப் போற்றிவரும் விஞ்ஞானமே இதை ஏற்காது இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் உள்ளுணர்வியல்பை, ஊறுபடுத்தாமல் உள்ளதில் இருந்து விருத்தியாக்குவதே ஆன்மார்த்தமான உண்மைச் சமயக் கல்வி என்ற பிரசித்தமான கல்விக் கொள்கையும் பலரும் அறிய உள்ளதொன்றே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் அவர் வழிசேர் பொன். இராமநாதன் இந்துபோட் இராசரத்தினம் முதலிய மேதைகளும் உளநல ஆய்வில் விஷேட புலமை கைவந்த சைவப்பெரியார் சிவபாதசுந்தரமும், சைவத் தாய் பெற்ற பிள்ளைக்கு சைவக் கல்வியே சமயக் கல்வி எனப் பிரகடனப்படுத்தியது மட்டுமன்றி தம் முயற்சியால் செயற்படுத்தியும் வந்த விஷயம் இது.

இங்ஙனமாகவும் சைவத்தாய் பெற்ற, சைவ உணர்வு இயல்பாக உள்ள பிள்ளை சைவக் கல்விக்கே உரிமையுள்ள பிள்ளை பாடசாலையில்.

## சிவன்தான் முழுமுதற் கடவுள் அல்ல

முழுமுதற் கடவுளர் ஆறுபேர் உளர், ஆறு பேரும் ஒரே சமன். சிவனைத்தான் வழிபடவேண்டும் என்பதில்லை. அந்த ஆறு பேரையும் மட்டுமன்றி அவர்களின் பணியாட்களையும் கூட சிவனுக்குப் பிரதியாகக் கும்பிடலாம். என்றிங்ஙனம் சுமார்த்த சமயக் கல்வி கற்க நிர்ப்பந்திக்கப்படுதலும் அதி உயர் நிலைப் பள்ளியில் சைவ ஆராய்ச்சியை விட்டுச் சுமார்த்த ஷண் மத ஆராய்ச்சியில் ஊக்குவிக்கப்படுதலும் சைவ உரிமை மீறல் இன்றி வேறென்ன?

சைவத் தெய்வங்களை வழிபடுவதற்கே பிறப்பால் உரிமை உள்ள சைவப் பொதுமக்களை அவர்களின் தற்கால அறியாமையை ஆதாரப்படுத்திக் கொண்டு, சைவத் தெய்வமல்லாத மற்றத் தேவதைகளுக்கு அவர்கள் செலவிற் கோயிலெடுப்பித்து இத் தேவதையைக் கும்பிட்டாற் புத்திவரும், ஞானம் வரும், இதன் மந்திர நூலைக் கட்டிக் கொண்டாற் சித்திவரும், செல்வம் வரும் என்றெல்லாம் ஏய்க்காட்டிப் பிழைத்தல் சமய உரிமை மீறல் அல்லது வேறென்னவாகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாலயம் சிவாகம நெறிப்படி பிரதிஷ்டை செய்யப் பட்டது. அவ்வாலயக் கிரியைகள் சிவாகமங் கற்றுத் தெளிந்து உத்தரவாதமுள்ள சிவாசாரியரால் தீட்சிக்கப்பட்டுச் சிவாசார்யத் தகைமை உள்ளவர் இவர் எனச் சிபார்சு செய்யப்பட்ட ஒரு சிவாசாரியரால்தான் நடைபெற வேண்டும் என்பது சைவவிதி.

முப்பாட்டன் கொப்பாட்டன் காலந் தொடங்கி இவ்விதிக் கிணங்கச் சைவக்கோயிற் கிரியைக்கென இருந்து வருபவர் சிவாசாரியர், கிரியை அளவுக்கு மட்டுமன்றித் தன்தோற்றம் நடைமுறை ஒழுங்குகளிலும் சிவசாரியார் ஆகவே இருக்க வேண்டியது அவர் கடன். சிவாசாரியார் சிவ ஆசார்யர், ஆசார்யர் ஆசாரவழி நிற்பவர், ஆசாரம் - தடை ஒழுக்கப் பண்புள்ளவர். சிவாசார்யர் என்பது பதார்த்த விளக்கம்.

இதற்கிணங்க அவர் சைவக் கோயிற் கிரியை மட்டுஞ் செய்யலாம். வேறு எத்தேவதைக் கிரியைக்கும் அவர் இசைதல் கூடாது - இது சிவாகம ஆணை மிகச் சமீபகாலம் வரை சிவாசார்யர்கள் இவ்வாணைக்கமைந்தே சிறப்புற்றார்.

ஆனால் இன்று அவர்களிற் சிலர் அந்தப் பொறுப்பில் இல்லை. சிவ முதன்மையை நிராகரிக்கும் சுமார்த்தர்களைத் திருப்தி செய்வதற்காகத் தாங்களும் இந்துக் குருமார் எனப் பெயர் வேறு சூட்டிக் கொள்கிறார்கள். பிரசித்தமான சுமார்த்த குருவுக்கே ஜயந்தி கொண்டாடுகிறார்கள். சாக்தமத வேதத்தை, வைஷ்ணவமத தேவதைகளுக் கெல்லாம் வேற்றுப் பத்ததிகளின்படி பிரதிட்டை, பூசை செய்கிறார்கள். வைஷ்ணவ தேவதைகளுக்குப் பூசை செய்கையில் அம்மத வழக்கப் பாதைப்படி நீறில்லா நெற்றியில் நாமமிட்டுக் கொண்டு பூசை செய்கின்றார்கள். இவையெல்லாம் சைவ உரிமை மீறலா அல்லவா?

முக்கியமான சைவ இராஜதானியில் சிவாசாரிய பீடம் அமையவேண்டிய சூழலில் சுமார்த்த இந்துக் குருபீடம் ஸ்தாபிக்கிறார்கள். இதற்குச் சமய உரிமை மீறல் என்றல்லது வேறு கூற ஏதும் உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மின்லென்னியங்களாகச் சைவ நாட்டில் நிலவிய சமயப் பெயர் சைவம், சைவாதார நூல்களெங்கும் இப்பெயர் அல்லது மாற்றுப் பெயர் எதுவுங் கிடையாது. இந்து சமயம் என்பது நவீன ஷண்மதம் வகுத்த சுமார்த்தர் சைவம் பெயரை நிராகரித்துப் புதிதாகப் புகுத்திய பெயர்.

சைவமயப் பண்பும் பயனும் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுதலும் முடிவிற் சிவனை அடைதலுமாம். இப்பொருளில் அர்த்த பூர்வமான பெயர் சைவம். "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என்ற திருமந்திரம் அதற்கத்தாட்சி. இந்தப் பெயரையே கையாளுதல் சைவர்க்குப் பிறப்புரிமை.

இந்து என்ற பெயரில் சமயசம்பந்தமான எந்த ஒரு பொருட் குறிப்பும் இல்லை. இருந்தும் இன்றைய சைவ சமூகத்தில் எங்கெங்கும் சைவம் பெயர் வழக்குக்கு ஒரே புறக்கணிப்பு இந்து சமயப் பேரவை, இந்துப் பேரவை, இந்து இளைஞர் மன்றம், இந்துக் கோயில், இந்துப் பாடசாலை மட்டுமல்ல இந்து ஆகமம், இந்து மெய்யியல் கூட வழக்காகிறது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சைவ விரோதிகளாகக் கிளம்பிய சுமார்த்தர் தமது பிரசார ஊடகங்கள் மூலம் சைவசமூகத்திற் திணித்து நிற்கும் எனினும் சென்ற தலை முறைவரையும் சைவராற் புறக்கணிக்கப்பட்ட பெயர் இந்து சமயம், சமீப காலத்தில் இப்பெயர் காவிவந்த இந்திய மிஷன்களைத் தொட்டுத் தம்மை உலகப் பிரசித்தி மட்டத்துக்குயர்த்திக் கொள்ள ஆசைப்பட்ட நம்மவர் சிலரால் வலிய வாங்கி விதைக்கப்பட்ட பெயர், இந்து சமயம். அதிலும் ஒரு பகுதியிற் சைவம் உண்டென்பது வெறும் மாசாலம். நிரூபணத்துக் கொவ்வாதது.

சைவம் பெயர் வழக்குக்கே உரிமை பூண்ட சமூகத்தில் இச் சுமார்த்தப் பெயர் திணிக்கப்படுவது அசல் சமய உரிமை மீறலே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சைவரிற் சமயக் கல்வி இல்லாப் பொதுசனம் செய்தி ஊடகங்கள் மூலம் சைவ உண்மை விளக்கங் களைப் பெறும் உரிமையுடையர். இன்றைய வானொலியும் தினசரிகளும் அதற்கு வேண்டுமளவு அவகாசமளிப்பதில்லை. ஓரளவு அவகாசம் அளிக்கும் தினசரிகளும் உண்மைச் சைவ விளக்கம் தரும் கட்டுரைகளை வேண்டாத அளவுக்கு வெட்டிக் குறைத்தும், சைவ விளக்கத்தைத் திரித்துரைக்கும் கட்டுரைகளுக்கு வேண்டும் அளவுக்கு மேல் விரிவுபடுத்தியும் பிரசுரித்தலை ஒரு நாகரீகமாகக் கொண்டுள்ளன. அதனால் சரியான சைவக்கருத்து விளக்கங்களை விட்டுத் தவாறன கருத்துக்களே மக்கள் மத்தியில் நிலவும் நிலை அதிகரிக்கிறது. இது எல்லாவற்றையும் விட மிக மோசமான சமய உரிமை மீறலாகின்றது.

சைவ உலகுக்குக் கண்ணில்லாமல் இல்லை. எல்லாம் பகிரங்க இரகசியம், மற்றுமுள்ளனவெல்லாம் யாவருமறிவர். எனவே இத்தகையன வேறுஞ் சொல்வது அநாவசியம்.

ஆனால் ஒன்று மட்டுஞ் சொல்லியாக வேண்டும். மேற் குறித்தனவெல்லாம் சமயச் சார்பான மனித உரிமை மீறல்கள். சிவாசார்யர் தரப்பிலேயே தன்மான நோக்கில் இதை உடன் படாதவர்கள் இல்லாதிருக்க முடியாது. அதே போல் இன்றைய சைவ அறிஞர் தரப்பிலும் இதை உடன்படாதவர்கள் இருந்தே ஆகுவர். சைவசமூகத்திற்குப் பொதுத் தர்மமாகிய இவ் விஷயத்தில் தவறுகளை வெளியாக எடுத்துக் காட்டி உண்மை நிலையை ஸ்திரப்படுத்தும் உரிமை ஒவ்வொருவருக்கும் தர்ம கடமையாக உள்ளதே. அதைக் கையாளத் தாமதித்தால் இதற்கு மௌனாஞ்சலி செலுத்துவதால் தப்பாது இப் பாராமுக நிலையும் ஒரு வகையில் சமய உரிமை மீறல்தான் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் சிவனுடன் சம்பந்தமாவது.......
# திருமூலர் திருமந்திரம்

சைவ சித்தாந்த பண்டிதர்
**சிவ. வ. வரதராஜா**

சைவத் திருமுறை ஆசிரியர் இருபத்து எழுவருள் ஒருவராகிய திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாம் திரு முறையாக விளங்குவது. பெரியபுராணததில் போற்றப்பட்டுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருமூலரும் ஒருவர். கயிலாயத்து ஒரு சித்தரென்று உமாபதி சிவாச்சாரியார் கூறும் திருமூலர், மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்திலிருந்து தாம்பெற்ற அனுபவ இன்பத்தினை வையகம் பெறவேண்டும் என்ற கருணையோடு வழங்கிய அருட்கொடை திருமந்திரம். இது மூவாயிரம் பாடல்களைக்கொண்டது. ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திகழ்வது. ஓன்பது ஆகமங்களையும் ஒன்பது தந்திரங்களாகக் கொண்டுள்ளது. ஆகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவை. சைவசமயம் சைவ ஆகமங்களைத் தனக்கு உரிய முதன்மை நூல்களாகக் கொண்டது. சைவ சமயத்தின் முதன் நூல் திருமந்திரமேயாகும். இது தோத்திர, சாத்திர, வாழ்க்கையியல் நூலாகத் திகழ்கிறது. வேத ஆகமக் கருத்துக்களைத் தரும் ஒரே தமிழ் நூல் திருமந்திரம் என்ற சிறப்புடையது. திருமந்திரம் சைவ இலக்கிய நூல் என்றும் சிவஞானபோதம் சைவ இலக்கண நூல் என்றும் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் கூறியுள்ளார். பெரும்பாலான திருமந்திரப் பாடல்கள், சைவ சித்தாந்த செம்பொருள்களைக் கொண்டு விளங்குகின்றன.

## சிவபெருமான்

சிவமாம் தெய்வத்தின் மேற் தெய்வம் இல்லை என்ற கருத்தை வலியுறுத்தும் பாடல்கள் தொட்ட இடம் தொறும் திருமந்திரத்தில் காணப்பெறுகின்றன. கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடறினில் அடக்கிய வேதியனான சிவபெரு மானிடம் பிரம்மா, திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் தஞ்சமடைந்த புராணச் சம்பவத்தைத் திருமந்திரம் கூறுகிறது.

**"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"**

*(திருமந்திரம்)*

(இங்கு - என்பது நஞ்சு வெளியேறிய திருப்பாற்கடல்) சிவபெருமானுக்கு நிகர் அவர் ஒருவரேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதும் ஒன்றில்லை"
*(திருமந்திரம்)*

(அயலும் புடையும் - தொலையிலும் அருகிலும்)

சிவபெருமானுக்கு நிகரான பெருந் தெய்வம் எங்கும் இல்லை.

"அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை
அவனன்றி ஊர்புகுமாறு அறியேனே"
*(திருமந்திரம்)*

(ஊர் புகுதல் - முத்தி அடைதல்)

சிவபெருமானது அருள் இன்றி மூவரால் யாதொரு செயலும் நடவாது. அப்பரம்பொருளின் அருள் இன்றி முத்திக்கு வழியே இல்லை.

## நந்தியில் சிவபெருமான்

சிவபெருமானே நமக்குக் குருவாக வரவேண்டும். சைவ சித்தாந்த அடிப்படையில் சிந்திக்கவேண்டும். நந்தியெம் பெருமான் திருக்கயிலாயத்தில் சிவபெருமானுக்குக் காவல் தொழிலை மேற் கொண்டதுடன், சிவபெருமானிடம் ஆகமங்களையும் உணர்ந்தவர். அகச் சந்தான குரவர்களில், முதற்குரவர் திருநந்தி தேவரே. அவரிடமிருந்துதான் ஆகம வழிப்பட்ட தத்துவக் கருத்துக்கள் பிறருக்கு அறிவிக்கப் பெற்றன. இங்கே கூறப்பெறும் நந்தியெம் பெருமானுக்கும், சிவபெருமானுக்கும் என்ன உறவு?

"பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லைத் தானே"
*(திருமந்திரம்)*

என்ற திருமந்திரச் செய்யுளால் சிவபெருமானே நந்தி ஆவார். எனவே சிவபெருமானே ஆகமம் உணர்த்தும் நிலையில் "நந்தி" என்ற பெயரை ஏற்றான். நந்தியே பின்னர் குருவாக வருகிறான். சிவபெருமானே குருவாக வருவான் என்று சைவ சித்தாந்தம் கூறும். சீவன்முத்தி என்பது இவ்வுலகில் உடம்போடு வாழ்கின்ற போதே மும்மலக் கட்டிலிருந்து விடுபட்டு ஞானம் என்னும் பெருங் கடலில் மூழ்கி மாறாத பேரின்பமாகிய பெரும் பயனை நுகர்ந்து சிவபெருமானின் திருவடியின் கீழ் இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இக்கருத்தை சிவஞானசித்தியார் "பிறப்பை அறுத்து முத்தாந்தப் பாதமலர்க் கீழ் வைப்பன்" என்று விளக்கும் திருமூலரும் திருமந்திர நூல் முடிவில் தனது குருநாதனாகிய நந்தியெம் பெருமானை வணங்குகிறார். பாடலின் ஒவ்வொரு அடியிலும் குருவின் திருவடியை வாழ்த்துகிறார்.

**"வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி**
**வாழ்கவே வாழ்க மலம் அறுத் தான்பதம்**
**வாழ்கவே வாழ்க மெஞ்ஞானத் தவன்தாள்**
**வாழ்கவே வாழ்க மலம் இலாம் பாதமே"**

*(திருமந்திரம்)*

**வினைப்பயன்**

வினைகளைச் செய்யும்போது, நான் எனது என்னும் உணர்வு மனிதனுக்கு ஏற்படும்போது அவ்வுணர்வையே கட்டாகப் பெறுகின்றான். பலனை எதிர்பார்த்து வினைகளைச் செய்யாமல் நல்லன என்பதற்காகவே நல்வினைகளைச் செய்து, தீயன என்பதற்காகத் தீவினைகளை ஒதுக்குவதே சிறப்பாகும். நல்வினை களைச் சிவார்ப்பணத்துடன் செய்யவேண்டும். நல்வினை தங்க விலங்கென்றும், தீவினை இரும்பு விலங்கென்றும் சைவசித்தாந்தம் கூறும். வினைகளைத் தொலைத்தற் பொருட்டு எடுக்கப்படும் பிறவிகளில், வினைகளும் அவற்றின் பலன்களும் மேலும் மேலும் கூடுகின்றன.

"வினைகைச் செய்வோன் நானல்லன்" என்னும் மெய்யுணர்வு ஏற்படும்போது **ஆகாமியம்** பெருகாது. **சஞ்சிதம்** செயற்படாது. **பிராரத்தமும்** தன் பலனொடுங்கி நிற்கும். இதை **இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்** என்று சைவ சித்தாந்தம் விளக்கும்.

**"தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்**
**சென்னியில் வைத்த சிவனரு ளாலன்றே"**

*(திருமந்திரம்)*

சிவபெருமானின் திருவடியுணர்வினராகிய தத்துவ ஞானிகள் சிவனருளால் தன்னை அறிந்திடுவார்கள். முன்னை வினையாகிய சஞ்சித வினையின் முடிச்சை அவிழ்த்து அகற்றுவார்கள். பின்னை வினையாகிய ஆகாமியத்தைப் பிடித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசைவர். பிசைதல் என்பது உருவுற்று எழாவண்ணம் உருக்குலைவித்தல் என்பதாகும். சென்னியில் வைத்த திருவருளாவது, சிரசில் விளங்கும் ஒளி மண்டலம். பின்னை வினையைப் பிசைதலாவது, ஒளி மண்டல அமைவுக்குப் பின் வினையின் பந்தம் நீங்குதல். தத்துவ ஞானிகள் சிவனருளாலே வினையினது கட்டினின்றும் நீங்குவர்.

**"மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்**
**மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா**
**மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்**
**தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே"**

*(திருமந்திரம்)*

மனம், வாக்கு, காயத்தால் பிறப்பிறப்புக்கான வல்வினை மூழும். மனம் வாக்கு சிவார்ப்பணத்துடன் நேர்நிற்கில் வல்வினை பொருந்தா. தத்துவ ஞானிகளே மனத்தையும் வாக்கையும் பிறப்புக்கு வழியாகாதபடி அவற்றின் முனைப்பைக் கெடுக்க வல்லவர்கள். தத்துவ ஞானிகள் அட்டாங்க யோகத் தவப்பயிற்சி யினால் தன்முனைப்பை மாற்றி அருள் முனைப்பாக ஆற்றுவர். **"தந்ததுன்றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா"** என்று பாடுகிறார் மாணிக்கவாசகப் பெருமான். தத்துவ ஞானிகள் தற்போதத்தை அழித்து ஒழித்துச் சிவபோதத்தில் திளைப்பார்கள்.

## பதி பசு பாசம் அநாதி

பதியைப் போலவே பசுவாகிய உயிரும் அதைப் பிணித்துள்ள பாசமாகிய தளையும் அனாதியானவை. உணர்த் தினால் அன்றி உயிர் உணரமாட்டாது. உணர்த்தினும் பாசம் உணரமாட்டாது. இவையிரண்டும் பதியினைச் சென்று அணுக மாட்டாதன என்றும், பதி அணுகின் பசுவைப் பிணித்துள்ள பாசம் கெடும் என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

**"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசுபாசம் அனாதி**
**பதியினைச் சென்றணுகா, பசு பாசம்**
**பதியணுகில், பசு பாசம் நிலாவே"**

*(திருமந்திரம்)*

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களுக்கு உள்ளேயே, உலகத்துப் பொருள்கள் எல்லாம் அடங்கும் என்று சைவ சித்தாந்தம் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே"

*(திருமந்திரம்)*

(பசுக்கள் தலைவன் - சிவபெருமான்)

பசுக்கள் பிரமன் முதலாகச் சொல்லப்படும் எண்ணில்லாத பலகோடி உயிர்களாகும் என்றும், பசுக்களைக் கட்டிய பாசம் மூன்று என்றும் கட்டு அறுத்தால் பசுக்கள் பதியாகிய தலைவனைப் பத்திக் கொள்ளும் என்றும் சைவசித்தாந்தம் விளக்கும்.

சைவ சமயம் தவிர ஏனைய சமயங்கள் "ஆணவ மலம்" என ஒன்று இருப்பதாகவே கூறுவதில்லை. அதற்குக் காரணம், ஆணவ மலம் உயிர்களால் அறியப்படாத ஒன்றாய் இருப்பதேயாகும். ஆணவம் இருளிற் கொடியது. இருள் பொருளைக் காட்டாது, தன்னைக் காட்டும். ஆணவம் தன்னையும் காட்டாது, பொருளையும் காட்டாது. அருணந்தி சிவாச்சாரியார் இதனைப் "பொல்லாத ஆணவம்" என்றார். மாயாகாரிய உடம்புடன் கூடி "நான்" என்று முனைத்து நிற்றல் ஆணவப் பண்பாகும். இதை நீக்குதற் பொருட்டே மாயையில் இறைவன் ஊட்டுகிறான் என்று சைவ சித்தாந்தம் தெளிவிக்கும்.

"நண்ணிய பாசத்தில் நானெனல் ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டப் பிரிந்தனன்"

*(திருமந்திரம்)*

பிற மதங்கள் உயிர்களுக்கு உண்டாகின்ற அறியாமையை மாயை கன்மங்களால் வருவதாகவே கருதுகின்றன. இது உண்மைக்கு மாறானதாகும். எவ்வாறெனில், மாயையும் கன்மமும் உயிர்களின் அறிவை விளக்கும் பொருள்கள். மாயையாவது உடம்பும், மனம் முதலிய கருவிகளுமாய் நிற்பது. இவை உள்ள போது உயிர்களுக்கு அறிவு விளங்குதலும், இவை இல்லாத போது அறிவு விளங்காது அறியாமை மேலிடுதலும் அனுபவமாவன. அதாவது விழிப்பும், உறக்கமும் ஆகிய நிலைகளில் இவை அனுபவமாக அறியப்படுகின்றன.

கன்மம் என்பது செயல், செயல் அறிவைத் துலங்கச் செய்யுமேயன்றி மழுங்கச் செய்யாது. ஆகவே மாயையும் கன்மமும் விளக்கின் தன்மையை உடையன. இவற்றை இருளின் தன்மை உடையனவாய் உயிர்களின் அறிவை மறைத்து அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமையைத் தருவனவாகக் கூறுதல் பொருந்துமாறில்லை. ஆகவே உயிர்களுக்கு அறியாமையைத் தரும் பொருள் மாயை கன்மங்கட்கு வேறான ஒன்றே என்பது நன்கு தெரிகிறது. அதுவே **"ஆணவ மலமாகும்"** உயிர் என்று உண்டோ அன்றே ஆணவ மலமும் உண்டு. எனினும் அது உயிரின் குணமன்று. உயிரில் பற்றியுள்ள குற்றமேயாகும். ஆணவம் உயிரின் குணம் என்றால் வீடுபேற்று நிலையில் உயிர் ஆணவத்திலிருந்து பிரிந்து நிற்குமென்று கொள்ளமுடியாது. ஏனெனில் ஒரு பொருளின் குணம் நீங்குமானால் குணியாகிய பொருளும் கெடும். உயிர்க்கு ஆணவமலத்திலிருந்து விடுதலை கொடுப்பதற்காகவே இறைவன் மாயையையும் கன்மத்தையும் உயிர்களுக்குப் பொருத்துகிறான் என்று சைவ சித்தாந்தம் விளக்கும்.

## சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தம் பொருள்கள் அனைத்தையும் பதி, பசு, பாசம் என்ற மூன்றில் அடக்கிக் கூறுதல் பலரும் அறிந்தது. சித்தம் என்றால் சிந்திக்கப்பட்டது நிச்சயம் என்று பொருள்படும். அந்தம் என்றால் முடிவு. ஆகவே, நிச்சயமான முடிவு அல்லது முடிந்த முடிவு என்பதே சித்தாந்தத்தின் முதற் பொருளாகும். இப்பொருளில் முதன் முதலில் எடுத்தாண்ட நூல் திருமந்திரமே யாகும்.

**"தவம் செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்**
**சிவம் தன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
**அகம் சிவ பூசை ஒண்மதி சொல் ஈர் ஐந்து**
**நிவம் பல செய்யின் நியமத்தன் ஆமே"**

*(திருமந்திரம்)*

என்னும் திருமந்திரத்தில் சித்தாந்தக் கேள்வி என்பது முடிந்து முடிபாகிய முப்பொருள் உண்மையைப் பற்றிக் குறிப்பிடு கிறது. மற்றும் பல இடங்களிலும் இப்பொருளில் திருமந்திரத்தில் பல மேற்கோள்களைக் காணமுடிகிறது. இதனை ஒட்டியே பிற்கால ஆசிரியர்கள் பலரும் தத்தம் நூல்களில் சித்தாந்தம் என்ற சொல்லை ஆண்டுள்ளனர். சமயக் கொள்கை அடிப்படையில் ஆட்சிக்கு வந்த இச்சொல் பின்னர் சைவசித்தாந்தம் என்னும் பொருளாயும் பல ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டது. சித்தாந்தம் என்றாலே சைவசித்தாந்தம் என்னும் பொருளில் பொதுவாக மக்கள் கருதுமளவுக்கு இது பயிலப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**விளம்புறு சித்தாந்த ஒளி வீசும் காலம்**" என்று எப்பொழுதும் சைவ சித்தாந்தமே பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்னும் பொருளில் திருவிடை மருதூர்க் கலம்பகத்தில் சித்தாந்தம் என்ற சொல்லைச் சைவ சித்தாந்தத்திற்கு ஆசிரியர் எடுத்தாண்டிருக்கும் சிறப்பினைக் காணலாம். மெய்கண்ட சாத்திர நூல்களுள் இப்பொருளே இச்சொல்லுக்குப் பெரும்பாலும் காணப் படுகிறது. சித்தாந்தம் என்னும் சொல் பிற்காலத்துச் சிவாக மத்துக்கும் பொருள்பட ஏதுவாயிற்று. "**சுத்தம் விளங்கிய சித்தாந்தம்**" எனவும் (திருமந்திரம் 1422) சிவாகமங்கள் சித்தாந்த மாகும் எனச் சிவஞானசித்தியாரும் கூறுவனவற்றிலிருந்து இவ் வுண்மை விளங்குகிறது. நூல்களை எல்லாம் படிப்பதின் பயன் "**அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே**" ன்பதாகும். அம்மைக்கு வீடு அடையத்தக்க பொருளாயினும், இம்மைக்கு அடையத்தக்கது சித்தசாந்தியாகும். இதனாற்தான் திருமந்திரம் **சித்தசாந்தி** என்னும் பொருளிலும் சித்தாந்தம் என்ற சொல்லை ஆண்டிருக்கிறது. "**சித்தாந்தத்து வேட்கை விடும்**" (திருமந்திரம் 1702) என்பதில் இப்பொருளைக் காணமுடிகிறது. இம்மைக்குப் பயன் அமைதி ஏற்படுவது போன்று, மறுமைக்கு இன்பம் கிடைக்கவும் சித்தாந்தம் வழி வகுக்கிறது. இதனையே **சிவானுபூதி** என்கிறோம். அதாவது பாசத்திலிருந்து விடுபட்டுச் சிவத்தை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது. இச் சிவானுபூதிக்கும் திருமூலர் சித்தாந்தம் என்ற சொல்லையே மேற்கொண்டு கூறியுள்ளார்.

**"நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்**
**சுத்த முதல் ஐந்துந் தத்துவத்தால் நீங்கிச்**
**சுத்த மசுத்தந் தொடரா வகை நினைந்**
**தத்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே"**
*(திருமந்திரம்)*

என்னும் பாடலில் இப்பொருள் பொதிந்துள்ளதைக் காணலாம். **மெய்ப்பொருளை ஐயம்திரிபற விளக்கும் சைவ சித்தாந்தமே உண்மை வேதாந்தமாகும்.** சைவ சித்தாந்தப் பெருநெறி நிற்பாரே நாதமுடிவாகிய சிவபெருமானைக் கண்டு இன்புறுவோராவர். இவர்களுக்கும் பிறப்பிறப்பாகிய தடு மாற்றம் இல்லை. பூதமுடிவும் அறிவு முடிவும் கைவரத் தத்துவ மாகிய மெய்க்கூட்டங்களை அடக்குதலாகிய செம்மை நிலையினை எய்துவர். இவர்களே தத்துவம் கடந்த நிறை பெரும் பொருளைச் சேர்ந்தோராவர். இவர்கள் பேரறிவுப் பிழம்பாம் பெரும் பொருளாகிய சிவபெருமானை உணர்ந்து உணர்ந்து ஒப்பிலா இன்பமுறும் ஒண்மையராவர் என்பது திருமூலரின் சிவயோக அனுபவம் என்பதைப் பாடல் தெளிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரண ஞானநே யத்தரே"

(திருமந்திரம்)

சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருள்களின் உண்மையைத் தெளியாதவர் சிவபெருமானை உணரமாட்டார்கள். உணராமையினால் பிறந்ததன் பயனை அடையமாட்டார்கள். சைவ சித்தாந்த உண்மையைத் தெளியா தவர் சிவ பெருமானின் திருவடியிணையினைக் கூடிச் சிவமாம் பெருவாழ்வு எய்தமாட்டார்கள். மெய்மை தெளியாதவர் பிறப்பறுக்கமாட்டார்கள். சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதில் சார்சிவமாம் தெய்வத்தின் மேற் தெய்வம் இல்லை என்ற பேருண்மையைத் தெளியாதவர்களைப் பார்த்து இரங்கித் திருமூலர் கூறுகிறார்;

"தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சிவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே"

(திருமந்திரம்)

எடுத்த இப்பிறப்பில் வாழ்வாங்கு வாழவும், மறுபிறப்பு இல்லாதபடி இதனை மாண்புடையதாகச் செய்து கொள்ளவும் வழிகாட்டி நிற்கும் ஒரு பெருநூல் திருமந்திரம். உயிர்க்கு ஆக்கம் தேடுவோர் யாவரும் திருமந்திர நூலின் மேன்மையினை உணர்ந்து, நூல் அருளும் சைவ சித்தாந்தப் பெருநெறியில் ஒழுகி உய்திபெற வேண்டும். திருமந்திரத்தின் மாட்சியையும், சிவ நெறியின் சிறப்பினையும் சைவப் பெருமக்கள் யாவரும் அறிந்து போற்றுதல் வேண்டும்.

"திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் – அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார் தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆறுமுகநாவலர்

(சுன்னாகம், ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர்)

இவர் இலக்கியங்களிலும் வல்லவர். இலக்கணங் களிலும் வல்லவர். நீதி நூல்களிலும் வல்லவர். நியாய நூல்களிலும் வல்லவர். சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் வல்லவர். சைவ ஆகமங்களிலும் வல்லவர். சைவாகமப் பெருமையைச் சாதித்துப் போதித்த லிலும் வல்லவர். கலை பயில்வோருளங் கொளக் கற்பிக்குஞ் செயலிலும் வல்லவர். உலகியல்களைப் பலதலையின்றி உணர்தலிலும் வல்லவர். செந்தமிழ் நூல்களைத் திருத்தியச்சிடும் செயலிலும் வல்லவர். செந்தமிழ் வாக்கியங்களை சிறப்புறத் தொடுத்து வரையுஞ் செயலிலும் வல்லவர். சைவப் பிரசங்கத்திலும் வல்லவர். புராணப் பிரசங்கத்திலும் வல்லவர். கசட்டு நெறிகளை மறுத்தெழுதுங் கண்டனங்களிலும் வல்லவர். செய்யுளியற்றுந் திறத்திலும் வல்லவர்.

கற்றதனாலாய பயனாகுங் கடவுள் வழிபாடு எனப்படுஞ் சிவபூசா கைங்கரியத்திலும் சிறந்தவர். சீவதீக்கையே மோக்கம் பயக்க வல்லது என்னுஞ் சிந்தனை சொற் செயல்களிலுஞ் சிறந்தவர். தேவார திருவாசக பாராயணப் பற்றிலுஞ் சிறந்தவர். சிவனடியார் வழிபாட்டிலுஞ் சிறந்தவர். சைவாசாரத்திலுஞ் சிறந்தவர். சதாசாரத்திலுஞ் சிறந்தவர். சீவகாருணியத்திலுஞ் சிறந்தவர். அடைந்தோர்ப்புரக்கும் அருளிலும் சிறந்தவர். நன்றல்லதன்றே மறந்து விடலிலுஞ் சிறந்தவர். கேட்பார்ப் பிணிக்குந்தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வாக்கு நலத்திலுஞ் சிறந்தவர். அவையஞ்சி மெய்விதிரா ஆண்மையிலுஞ் சிறந்தவர். சபை கூட்டிப் போதித்துப் பொது நன்மை புரிதலிலுஞ் சிறந்தவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்துந் தாங்க நிற்கும் நிலையிலுஞ் சிறந்தவர்.

மறைகணிந்தனை, சைவ நிந்தனை பொறாமன முடையவர். உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவு முடையவர். **நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையுமுடையவர். சைவ நிந்தனைகளையும் சைவ நிந்தகர் களையும் பிற சமயங்களையும் பிழைபட இயற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலுரைகளையும் வழு நிலை காட்டிக் கண்டித்து வெறுத் தொழிக்குஞ் செயலுமுடையவர்.** அருமையுடைய செய லாற்றும் பெருமையுமுடையவர். மானமும் பண்பும் மறவா நிலையு முடையவர். புகழ், அதிகாரம், பொருள் வரவு முதலியன கருதி மனிதரைப் பாடுஞ் செயலில் செல்லா விரதமு முடையவர். "தான மெவ்வகையுளுந் தக்க வித்தியா தானமே சிறந்தது சாற்றுங் காலையே" எனச் சூதசங்கிதை யாற் புகழப்பட்ட வித்தியாதானப் பெருந் தருமமுடையவர்.

இவருடைய இலக்கியப் பயிற்சி வன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழகருரை, திருக்கோவையுரை, பாரதம், சேது புராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும். இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும். நீதிநூல் நியாய நூல்களின் வன்மையையுஞ் சைவ சித்தாந்த சாத்திர வன்மையையும் பெரியபுரா்ண சூசனங் காட்டும். தருக்கசங்கிரகம், சைவ சமய நெறியுரை முதலியனவுங் காட்டும். பரிசோதன வன்மையை அச்சிட்ட நூல்களெல்லாங் காட்டும். செந்தமிழ் வாக்கியத் தொடை வன்மையைத் திருவிளையாடற் புராண வசனம் பெரியபுராண வசனம் முதலியன காட்டும். கண்டன வன்மையைச் சண்ட மாருதம்போற் சென்று தாக்கித் தலை குனிவிக்குஞ் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும். செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்தி விநாயகர் விருத்தம் முதலியன காட்டும்.

வித்தியாதானப் பெருந்தருமச் செயலை இவராலே தாபிக்கப்பட்டு நடந்துவரும் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையும் சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலையும் பிறவுங் காட்டும்.

நன்றி :- **இந்துசாதனம்**
19-11-2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சித்தாந்த சைவத்தின் முதற்பொருளும் அணையும் நெறியும்

சைவ சித்தாந்த வித்தகர்
**க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி.**

சமய நெறிகள் அனைத்தும் மக்களுக்கு ஒழுக்க நெறியைப் போதிப்பனவே. அந்நெறி ஒருவர் பிறரொடு பகையின்றி இயைந்து அமைதியாக வாழ வாயிலாக உள்ளது; மேலும், ஒருவர் உள்ளத்தில் எழும் பலதலைப்பட்ட உணர்வுகள் ஒழுங்குபட வளர்ந்து, செம்மையாகத் தொழிற்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் அமைதி, இன்பம், நன்மை என்பவற்றை உண்டாக்கவும் உதவுகின்றது.

இத்தகைய நெறியை எடுத்துக்கூறும் சமயங்களுட் பல, மக்கள் உள்ளம் ஒழுக்க நெறியைப் பற்றுதற்பொருட்டு அந் நெறியின் தலைவனாக ஒரு தெய்வத்தை அல்லது ஆசிரியனை உடன்பட்டுக் கொள்ளும். அத்தெய்வம் ஒழுக்க நெறியை நியமிப்ப தாகவும், பயன் தருவதாகவும் கற்பிக்கப் பெறும். சித்தாந்த சைவம் இப்பொது இலக்கணத்திற்கு விலக்கு அன்று. ஆயினும், இது தெய்வத்தைக் கொள்ளும் முறைக்கும் பிற சமயங்கள் கொள்ளும் முறைக்கும் வேறுபாடு உள்ளது.

பிற சமயங்களுட் கொள்ளப்படும் தெய்வங்கள் குடியாட்சி முறையிற் கொள்ளப்படும் சட்டத்துக்குட்படு தலைவர் (Constitu tional Head of a Democratic Republic) போல, இன்றியமையாமை காரணமாக, இனியது, நல்லது எனப் புனைந்து கொள்ளப்படும் கற்பனைப் பொருளாக முடிகின்றன. சித்தாந்த சைவத்துள் அவ்வாறு இல்லை. இதன்கண் கடவுள், புறப்பொருள்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அறிந்து வரும் கீழ்நிலையில் கேட்டும் ஆராய்ந்தும் உய்த்துணர் பொருளாக இருப்பினும், மெய்யுணர்வு உடையார்க்கு இவ்வுடம்புள்ள போதே தலைப்பட்டு உணரப்படும் அனுபவப் பொருளாவது. சித்தாந்த சைவத்தில் கடவுளைத் தலைப்பட்டு ணரும் அனுபவமே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள். பிற சமயங்களுள் சமய நெறிக்கண் கொள்ளப்படும் தெய்வமும் வேறே, தத்துவ ஆராய்ச்சியிற் கொள்ளப்படும் முதற்பொருளும் வேறே (God of Religion and the Absolute of Philosophy are different) ஆயின், சித்தாந்தத்துள் இரண்டும் வேறு வேறு அல்ல; அவை ஒரே பொருளைப் பற்றிய இருவகைக் கருத்துணர்வு. சித்தாந்த சைவ நெறியின்படி, எல்லா உயிர்களும் சைவமே. அ∴தாவது, சிவசம்பந்தம் உடையவையே. அவை இச்சம்பந் தத்தை உணராமைக்குக் காரணம் அவற்றை இயல்பாகப் பற்றியுள்ள அக மாசு. உயிர்கள் மாசு அகன்று முதற்பொருளைத் தலைப்பட்டுணரும் அனுபவம் பெறுதற்குச் சாதனமாகவே பிறவி உளதாயிற்று; இவ்வுலக வாழ்வும், ஒழுக்க நெறியும், சமய நெறியும் அதன் பொருட்டே முதல்வனால் அமைக்கப்பட்டவை.

இறைவன் உயிர்களின் வாழ்முதல்; அவற்றின் உணர்வின் முதல், ஐம்பொறிகளும் உயிரால் உள்நின்று செலுத்தப்பட்டுப் பொருள்களை அறிந்து வருதல் போல, உயிர்களும், உயிர்க்கு உயிராகிய முதல்வனால் உண்ணின்று உணர்த்தப்பட்டே பொருள் களை அறிந்து அநுபவித்து வருகின்றன. ஆயினும், ஐம்பொறிகள் தமக்கு முதலாகிய உயிரை அறியாதது போல, உயிர்களும் தமக்கு முதலாகிய இறைவனை அறியாது, தாமே செய்வதாகவும், நுகர்வதாகவும், பிறர் செய்வதாகவும் நுகர்வதாகவும் உணர்ந்து வருகின்றன. இதனால் உளதாகும் 'யான்' 'எனது' என்னும் செருக்கினால்தான் பிறவிக்குக் காரணமாகிய நல்வினை தீவினை உளவாகின்றன. 'யான்' 'எனது' என்பவை அற்ற இடமே இறைவன் திருவடி விளங்கும் இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிக்கடலில் உள்ள உயிர்களை இறைவன் திருவடிக் கண் சேர்க்கும் புணையே அவன் அருளாணையால் உலகில் நிகழும் ஒழுக்கநெறி. ஒழுக்கநெறி அறம் எனப்படும். அறத்திற்குச் சார்பாவது அன்பு. அன்பால் அறமும் அறத்தால் அன்பும் வளரும்; அவ்விரண்டானும் இன்பம் பெறலாகும். அன்பு உயிரின் பண்பு; அதனை அறத்தான் வளர்த்துக் கொள்ளவே உயிர்க்கு உடம்போடு கூடிய தொடர்பு இறைவனால் உளதாயிற்று.

முதற்கண் தொடர்புடையார் மாட்டு நிகழும் அன்பு, வளர்ந்து முறுகும் நிலைக்கண், தொடர்பு பற்றாது எல்லா உயிர்கள் மாட்டும் செல்லும் அருளாக மாறும். இவ்வாறு அருளும் அறமும் நிறைந்த உள்ளம் மாசற்று விளங்கும். அவ்விளங்கு நிலைக்கண் தோன்றுவதே மெய்யுணர்வு. அதனால் செம் பொருளைத் தலைப்பட்டு நின்று ஒழுகி உலகப் பற்றைத் தீரவிட்டுப் பேரா இன்பத் தமரும் நிலையே வீடுபேறாம்.

**ஆகலின்,**

**எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்று**
**எவ்வுயிர்க்கும் அன்பா யிரு.**

**குறிப்பு :** இக்கட்டுரை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் பொன் விழா மலரில் வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கடவுள் வழிபாடு

சைவப் பெரியார்
**சு. சிவபாதசுந்தரம் அவர்கள்**
(சைவ சமயசாரம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலுமே எமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுவதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல, ஆன்மா நயப்படுதற்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படும். உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள்; உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்தற்கும் கருவியாயுள்ளவை. கருவிகளிலும் பார்க்கக் கருவிகளையுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பிலும் மனத்திலும் மேலானது ஆன்மா. ஆகவே உடம்மை நயப்படுத்துதற்கு வேண்டிய உணவிலும் மனத்தை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியிலும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால், இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். "திருக்கோயிலை வலம்வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை" என்றார் திருநாவுக்கரசு நாயனார். 'கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை' என்றார் திருவள்ளுவ நாயனார்.

**"ஆக்கையாற் பயனென் – அரன்**
**கோயில் வலம்வந்து**
**பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்**
**வாக்கையாற் பயனென்"**

*- திருநாவுக்கரசு நாயனார்.*

**"கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்"**

*- திருவள்ளுவ நாயனார்*

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திருஐந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணிய தொண்டர்கள் திருப்புகழ் முதலிய அருட் பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிர மணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ் சிலர் சிவலிங்க பூசை செய்வர். இன்னுஞ் சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.

கடவுளை நாம் தரிசிக்கும்போதும் பூசிக்கும்போதும் "எங்கும் வியாபகமாயுள்ள இறைவனே! சிறியேனுடைய வழி பாட்டிற்காக இங்கு எழுந்தருளியிருக்கும் இப்பெருங் கருணையை நான் எவ்வாறு தான் துதிப்பேன். உன்னுடைய திரு முன்னிலையில் நின்று உன்னுடைய கருணையைப் பருகும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே உன்னை நான் மறந்து விடுகிறேனே"!

**பனைக்கைமும்மத வேழ முரித்தவன்**
**நினைப்ப வர்மனங்கோயிலாக் கொண்டவன்**
**அனைத்து வேடமா மம்பலக்கூத்தனைத்**
**தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ?**

**புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா**
**வுன்னடி யென்மனத்தே**
**வழுவா திருக்க வரந்தர**
**வேண்டுமிவ் வையகத்தே**
**தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்**
**செய்பா திரிப்புலியூர்ச்**
**செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை**
**மேல்வைத்த தீவண்ணனே.**

என்று அந்த அந்த நேரம் மனத்திலே வருவனவற்றைச் சொல்லி ஆனந்திப்போம். கடவுள் வழிபாடு இவ்வளவோடு நில்லாமல் எமது பிற செயல்களிலும் செறிந்திருக்கின்றது. நித்திரை விட்டெழும்பும்போது 'சிவ சிவ' என்று சொல்லி எழுந்திருக்கிறோம். உடனே கை கால் கழுவி சிவ சிவ என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். குளிக்கும் போது கடவுளைச் சிந்திக்கின்றோம். சாப்பிடும்போது கடவுளுக்கு நிவேதித்துச் சாப்பிடுகிறோம். சாப்பாடு முடிந்தவுடனே 'சிவ சிவ' என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். வெளியே போகும் போதும் அப்படியே செய்கிறோம். நித்திரைக்குப் போகும்போது சிவபிரானைத் தோத்திரித்துத் திரு ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு உறங்குகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் வழிபாடு எமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக் கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களேனும் எழும் போது சிவசிந்தனை செய்தால், அச்சிந்தனை இவற்றைக் கருக்கி மீளவிடாமல் அழித்துவிடும். அது மனத்தைத் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்குத் தகுதி வாய்ந்த இடமாக்கும். இவ்வுண்மையை,

**தேடிக் கண்டுகொண்டேன் - திரு**
**மாலொடு நான்முகனுந்**
**தேடித் தேடொனாத் தேவனை யென்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்.**
**நாடி நாரணனான் முகனென்றிவர்**
**தேடியுந் திரிந்துங் காணவல்லரோ**
**மாடமாளிகை சூழ்தில்லை யம்பலத்**
**தாடி பாதமென் னெஞ்சுளிருக்கவே.**

என்னும் திருநாவுக்கரசு நாயனார் திருவாக்குகளிற் காண்க.

நாம் எதை அதிகமாகச் சிந்திக்கின்றோமோ, அதில் எமக்கு உறுதியான பற்று உண்டாகின்றது. கள்ளை அதிகமாக நினைக்கிறவனுக்குக் கள்ளுண்ணல் ஒரு பைத்தியமாகின்றது. அறிவிலே அதிகமான விசாரமுள்ளவனுடைய மனம் கல்வியிலன்றி வேறொன்றிலும் செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவன் சங்கீதமயமாகின்றான். கடவுளிலே சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள் மயமாகின்றான்.

**"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**சங்கராசய போற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல் சேர் செஞ்சடை யெம்மா தீயென்று**
**மாரூரா வென்றென்றே யலறா நில்லே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



**பாசம் மிக்க குடும்பத் தலைவராய், நல்வழிகாட்டியாய் அமைந்து இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு எங்கள் இனிய வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருந்த**

## திருவாளர் சிவத்திரு
## வேலுப்பிள்ளை வல்லிபுரம் அவர்கள்

இயற்கை எய்திய வேளையில் உடன் வந்து பல்வகை உதவிகள் புரிந்து, ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் கனடாவில் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி, உதவி ஒத்தாசை வழங்கியவர்களுக்கும், எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், எமது அழைப்பை அன்போடு ஏற்று இன்று நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இந் நூலை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சாந்தி அச்சகத்தினர் ஆகிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

இங்ஙனம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

"மகரஜோதி"
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
28-01-2003

**1211-3380 EGLINTON AVE. EAST**
**SCARBOROUGH – ONTARIO**
**MIJ 3L6, CANADA.**
**TEL : 416 - 2649069**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

காசிப்பிள்ளை வேலுப்பிள்ளை + கந்தர் சின்னப்பிள்ளை

*பொன்னம்மா

*தம்பையா

**வல்லிபுரம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*கந்தையா
(பொலிஸ்
- உத்தியோகத்தர்)

*இரத்தினம்
(சுகாதாரப்
-பரிசோதகர்)

தம்பித்துரை
(ஓய்வுபெற்ற
அதிபர்
தற்போது லண்டன்)

*சின்னம்மா
(கனடா)

கண

சைவசித்தாந்த பண்டிதர்
வரதராஜா (ஓய்வுபெற்ற விரிவுரையாளர்,
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
+
பத்மாசனி
(அதிபர், விவசாயக் கல்லூரி, வவுனியா)

வருண்பிரசாத்
(திரித்துவக் கல்லூரி மாணவன், கண்டி)
வருண்பிரசாந்
(அசோக வித்தியாலய மாணவன், கண்டி)

*சிவபாலன்
(ஆசிரியர்
யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)
+
நவரஞ்சிதமலர்
(கனடா)

சுஜீவன்
(வின்சர் பல்கலைக்கழகம் கனடா)
சுகன்யா
(மாணவி, கனடா)
ரஜீவன்
(மாணவன் - கனடா)

இந்துமதி
(கனடா)
+
சண்முகலிங்கம்
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் கல்
திணைக்களம் வவுனியா தற்போது கன

சுஜன்
(மின்சாரப் பொறியியலாளர்

* - அமரர்களைக் கு

Digitized by Noola
noolaham.org | aa

# வம்சாவழி

**தில்லையர் சீனிவாசகம் + ஆறுப்பிள்ளை தெய்வானை**

*சின்னம்மா
(கனடா)

கணபதிப்பிள்ளை

***பொன்னம்மா**

*தங்கராஜா
(பாரெயின், லண்டன்
ஆகிய நாடுகளில்
தொழில்புரிந்த பின்
கனடாவில் வசித்தார்)

*இராசம்மா
(கனடா)

சிவக்கொழுந்து
(ஓய்வுபெற்ற
வைத்தியசாலை
கண்காணிப்பாளர்
தற்போது கனடா)

தில்லையம்பலம்
ஓய்வுபெற்ற சீமெந்து
தொழிற்சாலை
உத்தியோகத்தர்
தற்போது கனடா)

இந்துமதி
(கனடா)
+
ன்முகலிங்கம்
ர்வாக உத்தியோகத்தர் கல்வித்
ம் வவுனியா தற்போது கனடா)

சுஜன்
(மின்சாரப் பொறியியலாளர் கனடா)

நிர்மலாதேவி
(கனடா)
+
அரியகுணராஜா
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத்
திணைக்களம் வவுனிக்குளம் தற்போது கனடா)


ரம்யா
(மாணவி, கனடா)

ஈஸ்வரன்
(பட்டயப் பொறியியலாளர் (சிவில்) - கனடா)
+
பாக்கியலட்சுமி
(கணனிப் பொறியியலாளர் - கனடா)

கோபிகா
(மாணவி, கனடா)
கோபினா
(மாணவி, கனடா)
கிரிசாந்த்
(மாணவன், கனடா)

* - அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“நால்வர் பொற்றாள், எம் உயிர்த்துணையே”

சாந்தி அச்சகம் – நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 021–222 2821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org